# அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள்




முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர் அலுவலகம்
இலங்கை

Know your District: 2

# MUSLIMS OF ANURADHAPURA DISTRICT
## HISTORY AND HERITAGE

Presentation
of the
Office of the
Minister of State for
Muslim Religious & Cultural Affairs
34, Malay Street,
Colombo 2,
Shri Lanka.
1992

மாவட்ட அறிமுக நூல் : 2

# அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள்

## வரலாறும் பாரம்பரியமும்

வெளியீடு :

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்,
இராஜாங்க அமைச்சர் அலுவலகம்,
34, மலே வீதி,
கொழும்பு 2,
இலங்கை.
1992.

This book is published

on the occasion of the

**National Meelad–Un–Nabi Celebrations – 1992**

held at Anuradhapura

**on October 3, 1992**

**A. H. 1413 Rabiul Akhir 6**

and presented to

THE HON. D. B. WIJETUNGA, M.P.
Prime Minister & Minister of Finance of the
Democratic Socialist Republic of Shri Lanka

by

Al-haj A. H. M. AZWER, M.P.
Hon. Minister of State for
Muslim Religious and Cultural Affairs

# பொருளடக்கம்


පෙරවදන : ගරු අල්–හාජ් ඒ. එච්. එම්. අස්වර්, පා. ම. 09
මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු පිළිබඳ රාජ්‍ය අමාත්‍ය

முன்னுரை : மாண்புமிகு அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், [பா. உ.] முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் 11

**Foreword :** Hon. Alhaj A. H. M. Azwer, *M.P.* Minister of State for Muslim Religious & Cultural Affairs 14

பதிப்புரை : எஸ். எச். எம். ஜெமீல் 16

அத்தியாயம் :

1. வரலாற்றுப் பாரம்பரியம் — 1796 வரை 19
   — மறீனா இஸ்மாயில்
2. வரலாற்றுப் பாரம்பரியம் — 1797 — இன்றுவரை 27
   — எம். எம். எம். மஹரூப்
3. மஸ்ஜித்கள் 35
   — எம். எம். எம். மஹரூப்
4. இலக்கியப் பாரம்பரியங்கள் 48
   — பேராசிரியர் உவைஸ்
5. வாழ்வியலும் பண்பாடும் 56
   — எம். எஸ். எம். அனஸ்
6. கல்வி 73
   — எஸ். எம். கமால்தீன்
7. பொருளாதார நிலை, தொழில் — I 85
   — மறீனா இஸ்மாயில்
8. பொருளாதார நிலை, தொழில் — II 93
   — எம். எம். எம். மஹரூப்

| | | |
|---|---|---|
| Title | : | **Muslims of Anuradhapura District History & Heritage** |
| Publishers | : | Office of the Minister of State and the Department of Muslim Religious & Cultural Affairs, 34, Malay Street, Colombo –02, Shri Lanka. |
| Printer | : | The Department of Government Printing |
| First Edition | : | A. D. 1992 – October – 3<br>A. H. 1413 – Rabiul Akhir – 6 |
| Copy Right | : | (C) Publishers |
| Cover Design | : | Thajul Uloom Kalaivathy Kaleel |

# පෙරවදන

**1992** ඔක්තෝබර් මස 03 වැනි දින අනුරාධපුර පවත්වන ජාතික මීලාදුන් නබි උත්සවයේදී ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය ගරු ඩී. බී. විජේතුංග මැතිතුමන් වෙත ප්‍රධානය කරනු ලබන මෙම පොත අනුරාධපුර දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුන්ගේ ඉතිහාසය හා දායාදය ගැන කෙටි විස්තරයකි.

"ඔබගේ දිස්ත්‍රික්කය හඳුනාගන්න" යන මාතෘකාවෙන් මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව විසින් පළකරනු ලබන දෙවැන්නයි මෙය. මේ පොත් වලින් අදහස් කරනු ලබන්නේ ශ්‍රී ලංකාවේ නොයෙක් දිස්ත්‍රික්වල වාසය කරන මුස්ලිම්වරුන්ගේ ඉතිහාසය හා දායාදය විස්තර කිරීමය.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ අතිගරු ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාස මැතිතුමා ශ්‍රී ලංකා ජාතිය උපමා කර තිබෙන්නේ සුවඳැති මල් කළඹක් ලෙසටය. එක් එක් මලක් ඒ මලට අයිති සුවඳ විහිදුවන්නාක් මෙන් ඒ ඒ මලෙහි සුගන්ධය එක්වී මුළු මල්කළඹ ම සුවඳ විහිදුවන්නාක් මෙන්, නොයෙක් ජාතීන් ඔවුන්ගේ සංස්කෘතිය හා දායාදය ශ්‍රී ලංකා ජාතියේ සංස්කෘතියට හා දායාදයට එක්කරයි. අතිගරු ජනාධිපතිතුමාගේ පරමාර්ථය ලෙස ප්‍රසිද්ධකර ඇත්තේ අපේ ජාතියේ එක් එක් කොටසේ සංස්කෘතිය හා දායාදය ගෙනහැරපා ආරක්ෂාකොට සියළු කොටස් ජාතියේ උන්නතියට උදවු කරගත යුතුය යන්නයි, මේ පොත ඒ අතින් මුලපිරීමකි.

1992 ජනවාරියේදී කළුතරදී පැවැත්වූ ජනාධිපති ජංගම සේවයේදී මුල් පොත වශයෙන් කළුතර දිස්ත්‍රික්කයේ ඉතිහාසය හා දායාදය කෙටි විස්තර යන පොත් පිංච අතිගරු ජනාධිපති ශ්‍රීමත් රණසිංහ ප්‍රේමදාය මැතිතුමන් විසින් තිකුත් කරන ලදී.

ශ්‍රී ලංකා ඉතිහාසයේ අනුරාධපුරයට හිමි තැන විශිෂ්ඨය. ශ්‍රී ලංකා ශිෂ්ඨාචාරයේ තොටිල්ලක් වශයෙන් පමණක් නොව ශ්‍රී ලංකා වාරිමාර්ග ඉතිහාසයේ මුලපිරූ අප ජාතියේ රන් යුගය වශයෙන් සළකනු ලබන්නේ අනුරාධපුරය යි. මේ වාරිමාර්ග සංස්කෘතිය අද පවා ඉතා උසස් ලෙස ලොව සළකන්නේ විද්‍යාව අතින් ඉතා දියුණු පිළිවෙලක් ලෙසය.

අනුරාධපුර දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුන්ගේ ඉතිහාසය අවුරුදු 1400ක් පමණ පැරණිය. අනුරාධපුර ශිෂ්ඨාචාරය හා එය පසුව වැඩි දියුණුවූ පිළිවෙලට මුස්ලිම්වරුන් විසින් ඉටුකරන ලද සේවය ඉතා මහත්ය. මෙරටේ අනෙකුත් පළාත්වල වාසය කරන මුස්ලිම්වරුන් මෙන් අනුරාධපුර දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුන්ද තමන්ගේ ආගම වන ඉස්ලාම් ධර්මය ගැනත් තමන්ගේ සංස්කෘතියේ අනන්‍යතාවය සුරැකීමට උත්සුකවීම ගැනද ශ්‍රී ලංකාවේ වාසය කරන සැම ජනකොටස් සමගම සුහදව සහයෝගයෙන් ජීවත්වූ බව පෙනේ.

අනෙකුත් දිස්ත්‍රික්කවල වාසය කරන මුස්ලිම්වරුන් මෙන් අනුරාධපුර දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුද ජාතියේ උන්නතියට එක්සිත්ව කටයුතු කර ඇත. ඔවුන්ගේ ඉතිහාසය ඔබට

පෙන්වා දෙන්නේ ලෝකයේ ඕනෑම රටක වාසය කරන සුළු කොටසක් වශයෙන මුස්ලිම්වරුන්ට ආදර්ශමත් ජීවිතයක් පෙන්වීමයි. ඔවුන් ජීවත් වන්නේ ගම් 102කය. මස්ජි 88ක් ද, පාසල් 62ක් ද තිබේ. දිස්ත්‍රික්කයේ වාසය කරන වැඩි කොටසවන සිංහල බෞද්ධ ජනතාව සමග මුස්ලිම්වරු සහයෝගයෙන් ජීවත් වෙති. මෙය ශ්‍රී ලංකාවේ එක්සත් භාවයෙ විශිෂ්ඨතම පදනමය.

මේ සියල්ලම මේ පොතෙහි සඳහන් වී ඇත. මුස්ලිම්වරුන්ගේ ශ්‍රේෂ්ඨතම සංස්කෘතිය හා ජීවිත පිළිවෙත ඔවුන්ගේ දායාදය භාෂාව, සාහිත්‍යය, මස්ජිදය, අනෙක් ආයතන, කලාව හා අත්කම් රැකියාව, සමාජ ජීවිතය යන මේ සියල්ලම මේ පොතේ සංක්ෂේපයෙන් දක්වා ඇත.

මුල් පරිච්ඡේදය ලියා ඇත්තේ මරිනා ඉස්මයිල් මහත්මිය විසිනි. ඇය පේරාදෙනිය විශ්ව විද්‍යාලයේ භූගෝල විද්‍යාව අංශයේ හිටපු කථිකාචාර්යවරියකි. අනුරාධපුර දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුන්ගේ ඇත ඉතිහාසය ගැන ඇය එහි ලියයි. දෙවෙනි පරිච්ඡේදය ලියා ඇත්තේ අල්-හාජ් එම්. එම්. එම්. මහරූෆ් මහතාය. ඒ මහතා කලින් මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික දෙපාර්තමේන්තුවේ සහකාර අධ්‍යක්ෂවරයෙකි. ඔහු කියන්නේ මෙම දිස්ත්‍රික්කයේ මුස්ලිම්වරුන්ගේ ඉතිහාසයයි. මස්ජිදය ගැන සඳහන් කර ඇති තුන්වැනි පරිච්ඡේදය ලියා ඇත්තේ අල්-හාජ් එම්. එම්. එම්. මහරූෆ් මහතාය. ඔවුන්ගේ භාෂාව හා සාහිත්‍යය ගැන සඳහන් කරන්නේ දකුණු ඉන්දියාවේ මදුරෙයි කාමරාජ් විශ්වවිද්‍යාලයේ ඉස්ලාම් දෙමළ සාහිත්‍ය මහාචාර්යවරයාව සිටි අල්-හාජ් එම්. එම්. උවයිස් මහතාය. අධ්‍යාපනය ගැන සඳහන් කරන පරිච්ඡේදය පිළියෙළ කර ඇත්තේ ශ්‍රී ලංකා පුස්තකාල සංගමයේ සභාපති අල්-හාජ් එස්. එම්. කමාල්දීන් මහතා විසිනි. සමාජ ජීවිතය ගැන සඳහන් කරන ඊළඟ පරිච්ඡේදය ලියා ඇත්තේ පේරාදෙණිය විශ්වවිද්‍යාලයේ දර්ශණ විද්‍යා අංශයේ ජ්‍යෙෂ්ඨ කථිකාචාර්යවරයා වන එම්. එස්. එම්. අනස් මහතා විසිනි. මරිනා ඉස්මායිල් මහත්මිය ඒ දිස්ත්‍රික්කයේ පැරණි මුස්ලිම්වරුන්ගේ වෘතිය ගැන ලියා ඇත. වර්තමාන මුස්ලිම්වරුන් රැකියාව ගැන අල්-හාජ් එම්. එම්. එම්. මහරූෆ් මහතා කියයි. පරිශිෂ්ඨ කිහිපයක්ම ඇතුළත්ය. මේ සියළු දෙනාටම මාගේ අවංක ස්තුතිය හිමිවෙයි.

මුස්ලිම්වරුන්ගේ ලබන සහයෝගය හා ඔවුන් ජාතියට ඉටුකරන සේවයේ සංකේතයක් වශයෙන් ශ්‍රී ලංකා මහජනතාවට මේ පොත පිළිගන්වමු.

**අල්-හාජ් අබ්දුල් හමීද් මුහම්මද් අස්වර්, පා.ම.**

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු පිළිබඳ රාජ්‍ය අමාත්‍ය.

මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු පිළිබඳ
රාජ්‍ය අමාත්‍යාංශ කාර්යාලය,
34, මැලේවීදිය,
කොළඹ 02,
ශ්‍රී ලංකාව.

1992.09.15

# முன்னுரை

" அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் " என்ற இந்நூலை 1992 அக்டோபர் 3 ஆம் திகதி ஆகிய இன்று மாண்புமிகு டி. பி. விஜேதுங்க, பிரதமர் அவர்கள் அநுராதபுரத்தில் நடைபெறும் தேசிய மீலாத் விழாவில் வைபவ ரீதியாக வெளியிட்டு வைக்கின்றார்கள். எனது இராஜாங்க அமைச்சர் அலுவலகத்தின் " மாவட்ட அறிமுக நூல்களின் வரிசை " யில் இரண்டாவது பிரசுரமாக இந்நூல் அமைகின்றது. இலங்கையின் பல பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் சரித்திரத்தையும் சம்பத்துகளையும் விவரிக்கும் முயற்சியாக இந்த வரிசையை நாம் முன் வைக்கிறோம்.

இலங்கைத் திருநாட்டை, மலர்ச் செண்டு ஒன்றிற்கு மேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள். மலர்ச் செண்டின் ஒவ்வொரு ·தனிப்பட்ட மலரும் தனது பிரத்தியேகமான நறுமணத்தினால் செண்டிற்கு சுகந்த வாசம் ஊட்டுவது போன்று இலங்கையின் வெவ்வேறு சமூகங்கள் தமது வரலாற்று, கலாசார தனித்துவத்தால் இலங்கைத் திரு நாட்டின் வளத்திற்கும் வனப்பிற்கும் மெருகூட்டுகின்றன.

இலங்கை மணிநாட்டில் வாழும் பல்வேறு சமுதாயங்களின் தனிப்பட்ட வரலாற்றையும் சுப சம்பத்துகளையும் வெளிக்கொணருதல், பாதுகாத்தல், போசித்தல் என்பன மேதகு ஜனாதிபதி அவர்களின் பேரவாவும், அழுத்தமான நெறியாக்கலும் ஆகும். அவ்வகையிலான ஒரு முயற்சியே இந்நூல் என நான் துணிவேன்.

இந்த நூல் வரிசையில் முதலாவது வெளியீடு " களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள் " என்ற ஆங்கில மொழி நூலாகும். அதனை ஜனவரி 1992 இல் களுத்துறையில் நடைபெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவையின்போது மேதகு ஜனாதிபதி அவர்களே விமரிசை பூர்வமாக வெளியிட்டு வைத்தார்.

இலங்கை வரலாற்றில் அநுராதபுர மாவட்டத்தின் பங்களிப்பு தன்னிகரற்றது எனலாம். இலங்கையின் முதலாவது நாகரிகம் என்ற முத்திரைக்கு மட்டுமே அநுராதபுர மாவட்டம் உரித்தானது அல்ல. இலங்கையின் முதல் பொற்காலமான நீர்ப்பாசன நாகரிகத்தின் ஆணிவேராகவும் அநுராதபுர மாவட்டம் திகழ்ந்தது. விஞ்ஞானத்தின் சிகரமாக இருக்கும் நம் காலத்தில்கூட அன்றைய அநுராதபுரத்தின் நீர்ப்பாசன மேம்பாடு உலக மக்களைப் பிரமிக்க வைக்கின்றது.

அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களின் பிரசன்னம் ஆயிரத்து நானூறு வருடங்களாகும். அநுராதபுர நாகரிகத்தின் பல மாற்றங்களையும் பின்னால் வந்த பல நிகழ்வுகளையும், சமகால அபிவிருத்திகளையும் யதார்த்தமாக முஸ்லிம்கள் அனுபவித்து வந்திருக்கின்றார்கள். ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்களைப் போன்று அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களும் தமது சமயத்தை, தமது இனத் தனித்துவத்தைக் கண்ணின் மணியாகக் காத்து வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல ; இலங்கையில் வாழும் எல்லா இனத் தவரோடும் சுபீட்சமாக, புரிந்துணர்வோடு செயற்பட்டு, நாட்டின் பெருமைக்கும் வளத்துக்கும் அயராது உழைத்திருக்கிறார்கள்.

இம்மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு உலகத்தின் எப்பாகத்தில் வாழும் சிறுபான்மையினருக்கும் மிகச்சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும். சுமார் 88 பள்ளிவாசல்களுடனும் 62 பாடசாலைகளுடனும் 102 கிராமங்களில் வாழும் இம்முஸ்லிம்கள் அன்றிலிருந்து இன்று வரை சிங்கள பௌத்த பெரும்பான்மை இனத்தவருடன் எவ்வித பிணக்குமின்றி அன்னியோன்னியமாகவும் புரிந் துணர்வுடனும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையின் ஒற்றுமையின் அடிநாதம் இதுவே.

இவை யாவும் இந்நூலில் துலாம்பரமாக விளக்கப்படுகின்றன. மஸ்ஜித்கள், கல்விக் கூடங்கள், முதுசொங்கள், மொழி, இலக்கியம், கலைகள், தொழிற்பாடுகள், சமூக அமைப்பு என்ற பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் தனித்துவ கலாசாரம் இந்நூலில் நிதர்சனமாகக் காணப்படுகின்றது.

அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் புராதன வரலா இந்நூலின் முதல் அத்தியாயமாக அமைகின்றது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிய மறீனா இஸ்மாயில் அவர்கள் இதனை எழுதியிருக்கிறார். இரண்டாம் அத்தியாயமாக அமைவது அநுராதபுர முஸ்லிம்களின் தற்கால வரலாறு ஆகும். இதனை எழுதியிருப்பவர் முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டுத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரான கன்சுல் உலூம் அல்ஹாஜ் எம். எம். எம். மஹ்ரூப் ஆவார். மூன்றாம் அத்தியாயமான மஸ்ஜித்துகளைப் பற்றியும் அவரே எழுதியிருக்கிறார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக இஸ்லாமிய, தமிழ் இலக்கியத்துறை முன்னாள் பேராசிரியர் அல்ஹாஜ் கலாநிதி எம். எம். உவைஸ் அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் மொழி, இலக்கியத்தைப் பற்றி எழுதுகிறார். பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம். எஸ். எம். அனஸ் அவர்கள் சமூகவியல் அத்தியாயத்தை எழுதியிருக்கிறார். கல்வி என்ற

அத்தியாயம் இலங்கை நூலகவியல் சங்கத்தின் தலைவரான கன்சுல் உலூம் அல்ஹாஜ் எஸ். எம். கமால்தீனின் ஆக்கமாகும். அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் தொழிற்பாடுகள் இரு அத்தியாயங்களாக விளங்குகின்றன. புராதன தொழிற்பாடுகள் பற்றி மறீனா இஸ்மாயில் அவர்களும் சமகாலத் தொழிற்பாடுகள் பற்றி அல்ஹாஜ் எம். எம். மஹரூப் அவர்களும் எழுதியிருக்கிறார்கள். இவர்களுக்கு எனது நன்றி உரித்தாகும்.

இலங்கைவாழ் முஸ்லிம்களின் சமூக உணர்வுக்கும் இந்நாட்டின் மேலான விசுவாசத்துக்கும் ஆக்கபூர்வமான முயற்சியாக இந்நூல் சமர்ப்பிக்கப் படுகின்றது.

அல்ஹாஜ் அப்துல் ஹமீத் முஹம்மத் அஸ்வர், பா. உ.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர் அலுவலகம்,
34, மலே வீதி,
கொழும்பு 2,
இலங்கை.

ஆகஸ்ட் 20, 1992

# FOREWORD

This book, 'The History and Heritage of the Muslims of Anuradhapura District' is being presented to the Prime Minister Hon. D. B. Wijetunga, M.P., on the occasion of the National Meelad-un-Nabi Celebrations which are being held at Anuradhapura on October 3, 1992.

This is the second in the series, 'Know your District' published by the Department of Muslim Religious & Cultural Affairs. This series is intended to give an epitome of the history and heritage of the Muslims living in various districts of Shri Lanka.

His Excellency Ranasinghe Premadasa, President of the Democratic Socialist Republic of Shri Lanka has compared the nation of Shri Lanka to a fragrant bouquet of flowers. Just as each flower adds its own fragrance and radiance to the glory of the entire bouquet, the various communities add their own contribution to the culture and heritage of the nation of Shri Lanka as a whole. It has been the noble aspiration and declared intention of His Excellency that the culture and heritage of each community of our nation should be promoted, preserved and developed to the greater splendour of the nation. This book is a step towards that realisation.

The first book in this series 'The History and Cultural Heritage of the Muslims of the Kalutara District', was released by His Excellency Ranasinghe Premadasa in January 1992, on the occasion of the Presidential Mobile Service held at Kalutara.

The place and role of Anuradhapura in the history of Shri Lanka is a unique one. Anuradhapura District is not only the cradle of civilization in Shri Lanka, but also, the bedrock of the hydraulic civilization, the first Golden Age of our nation. That hydraulic civilization, even in the advanced scientific achievements of our time, is a dazzling marvel to the world.

The Muslim presence in Anuradhapura District spans a period of one thousand and four hundred years, at the least reckoning. The Muslims have witnessed the various epoch in the Anuradhapura civilization as well as the subsequent developments and the present regeneration. The Muslims of Anuradhapura District, like the Muslims of all other parts of this country, have been characterised by intense commitment to their religion, Islam unflincing preservation of their ethnic identity and culture; and whole-hearted affection and co-operation with all communities in Shri Lanka.

The Muslims of Anuradhapura District, just as the Muslims of other districts have worked, single-mindedly, to the greater glory and well-being of the nation. Their history is an ample manifestation of the exemplary way of life to any Muslim minority in any part of the world. The Muslims inhabit 102 villages with 88 Mosques and 62 schools in total harmony with the majority Sinhala Buddhists of the district. This is symbolic of the unity of the Muslims with other communities in Sri Lanka.

All this and more are told within the pages of this book. The unique culture and life of the Muslims, with their own language, literature, mosques, educational institutions, arts and crafts, occupations, social life, are all epitomized in this book.

The first chapter, contributed by Mrs. Marina Ismail, a former Lecturer in Geography of the University of Peradeniya, is on the early history of the Muslims of Anuradhapura District. The second chapter, written by Kanzul Uloom Alhaj M. M. M. Mahroof, sometime Assistant Director of the Department of Muslim Religious & Cultural Affairs, speaks of the modern history of the Muslims of the district. Chapter Three on the mosques, is also by Alhaj M. M. M. Mahroof. Alhaj Dr. M. M. Uwise, sometime Professor of Islamic Tamil Literature at the Kamaraj University of Madurai, South India, writes on the language and literature. The chapter on social life is written by Mr. M. S. M. Anas, Senior Lecturer at the University of Peradeniya. The chapter on Education is by Kanzul Uloom Alhaj S. M. Kamaldeen, President of the Shri Lanka Library Association. The chapter on the early occupations of the Muslims is by Mrs. Ismail, and that on the occupations of the present day is by Alhaj M. M. M. Mahroof. Appendices are also given. My thanks are due to the contributors.

This book is offered to the public of Shri Lanka as a symbol of the Muslims' co-operation and commitment to the nation.

**Alhaj Abdul Hameed Mohamed Azwer,** *M.P.*
Minister of State for Muslim Religious & Cultural Affairs.

Office of the Minister of State for
Muslim Religious & Cultural Affairs,
34, Malay Street,
Colombo 2,
Shri Lanka.

August 20, 1992.

# பதிப்புரை

முஸ்லிம்கள் இலங்கை வள நாட்டின் இரண்டாவது சிறுபான்மை இனமாக விளங்குகின்றனர். இந்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வியாபித்துப் பரந்து வாழும் இவர்களது தொடர்பு கிழக்குக் கடல்களிலே அறபியர் வணிக ஆதிக்கம் செலுத்திய பல்லாயிரக் கணக்கான வருடங்களாகத் தொடர்ந்து இருந்து வருகிறது.

"கி. பி. 150 இல் தொலமி இலங்கை பற்றிய பூகோளப் படத்தை வரைந்தான். அதற்கு முன்னர் இருந்த ஒணஸ்கிறீட்டஸ் என்பவரிடம் இருந்து பெற்ற தகவல்களும் தொலமிக்கு உதவியாக இருந்தன.

மகாவலி நதியை ஃபாசிஸ் ஃபலூரசியஸ் (பாரசீகர் நதி) என்றும், தெதுறு ஓயாவைச் சோனா ஃப்றூசியஸ் (அறபியர் நதி) என்றும், கின் கங்கையை அஸானக் ஃப்சியஸ் (எதியோப்பியரின் நதி) என்றும் தொலமி குறிப்பிட்டதுடன், அப்பிரதேசங்களில் மேற்குறிப்பிட்ட பாரசீக, அறபு, எதியோப்பிய மக்களின் குடியிருப்புகள் இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தான்."

இலங்கையின் தேசிய வாழ்வில் அல்லது இதர இனங்களில் இருந்து தம்மை அன்னியப்படுத்திக் கொள்ளாத முஸ்லிம்கள் இந்நாட்டிற்கு அளித்த பங்களிப்புகள் பலவாகும். எனினும் தமது வர்த்தக நடவடிக்கைகளில் கண்ணும் கருத்துமாக இருந்த காரணத்தினாலும், கல்வி நிலையில் பின்தங்கி இருந்ததனாலும் தமது வரலாற்றுப் பதிவுகளைப் பேணுவதில் அசிரத்தையாக இருந்துவிட்டனர் எனலாம்.

இந்நாட்டு மக்களின் கலாசார, பாரம்பரியங்களை வெளிக்கொணர்வதோடு, மக்களின் அவ்வருட்செல்வங்களைப் பாதுகாத்து வளர்த்தலும் வேண்டும் என்பது மேதகு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்களின் பேரவா ஆகும். முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு என ஒன்று தனியாக உருவாக்கப்பட்டதும் இந்நோக்கத்தினாலேயே ஆகும்.

இதனைச் செயற்படுத்துமுகமாக முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், பா. உ. அவர்கள் நல்ல பல திட்டங்களை முன்வைத்து அமுல்நடத்தி வருகின்றார். அவரது வழிகாட்டலில், கடந்த 3 வருடங்களா தேசிய விழாவாகக் கொண்டாடப்படும் மீலாதுந் நபி விழாத் தொடர்பாக வளியிடப்படும் விசேட

மலர்கள் சாதாரண சஞ்சிகைகளாக அல்லாது அவ்விழா நடைபெறும் பிரதேசத்தின் பாரம்பரியம், கலை, கலாசாரம், பண்பாடு, இன்றைய நிலை ஆகியவற்றை வெளிக்கொணரும் பல அரிய கட்டுரைகளையும் தகவல்களையும் கொண்டவையாக வெளியிடப்படுகின்றன.

"வாழ்வோரை வாழ்த்துவோம்" திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் விழாக்கள் தொடர்பான மலர்களும் கூட, அவ்வாறான இலக்கிய முதுசொங்களை வெளிக்கொணரும் கருத்துக் கருவூலங்களாக ஆக்கப்படுகின்றன.

இதே அடிப்படையில் முஸ்லிம்களின் வரலாற்றினையும், முதுசொங்களையும் உள்ளடக்கிய நூல்களை மாவட்ட ரீதியாக வெளியிடும் மாண்புமிகு ராஜாங்க அமைச்சர் அவர்களது முயற்சியில் இது இரண்டாவது பிரசுரமாகும்.

இவ்வாறு கடந்த இரண்டரை வருடங்களுள் சிறிதும் பெரிதுமாக முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினாலும், திணைக்களத்தினாலும், மொத்தம் 14 பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு :—

01. முதலாவது தேசிய மீலாதுந் நபி விழா மலர் — மாவனல்லை 1990
02. ஹஜ் வழிகாட்டி 1990
03. அசன்பே சரித்திரம் — எம். சி. சித்திலெப்பை (மறுபதிப்பு)
04. செயல் அறிக்கை — 1990
05. இலங்கையின் முஸ்லிம் அகதிகள்
06. 'வாழ்வோரை வாழ்த்துவோம்' — முதல் முஸ்லிம் கலாசார விருது விழா மலர் — 1991
07. ஹஜ் வழிகாட்டி — 1991
08. இரண்டாவது தேசிய மீலாதுந் நபி விழா மலர் — புத்தளம் 1991
09. இரண்டாவது தேசிய மீலாதுந் நபி விழா விசேட மலர் — 1991
10. வரகவி செய்கு அலாவுதீன் — எம். எஸ். எம். அனஸ்
11. செயல் அறிக்கை — 1991
12. களுத்துறை மாவட்ட முஸ்லிம்கள்
13. 'வாழ்வோரை வாழ்த்துவோம்' — இரண்டாவது முஸ்லிம் கலாசார விருது விழா மலர் — 1992
14. ஹஜ் வழிகாட்டி — 1992

இவ்வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி நடமாடும் சேவை களுத்துறையில் நடைபெற்ற வேளையில் அம்மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு பற்றிய நூல் ஒன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அதனை அடியொற்றி இவ்வருடத்

தேசிய மீலாதுந் நபி விழா நடைபெறுகின்ற அநுராதபுர மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் வரலாறு பற்றிய இந்நூல் வெளிவருகின்றது.

இந்நூலுக்குச் சிறப்பான கட்டுரைகளை வழங்கிய அறிஞர்கள் அவரவர் துறைகளிலே நிபுணத்துவம் பெற்றவர்கள். அவர்களினால் ஆக்கப்பட்டுள்ள இக்கட்டுரைகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல் ஆக்கத்தில், எமது திணைக்களப் பணிப்பாளர் கே. எம். ஷெரீப், உதவிப் பணிப்பாளர் ஜனாபா பேகம் ஜஹுபர், எஸ். எம். எஸ். ஸெயின் மௌலானா ஆகியோரும், அநுராதபுரத்தைச் சேர்ந்த எம். எஸ். எம். பௌஸி, என். எஸ். முக்தார், ஏ. எச். எம். சித்தீக் ஆகியோரும் ; தாஜுல் உலூம் கலைவாதி கலீல், காத்திபுல் ஹக் எஸ். ஐ. நாகூர்கனி ஆகியோரும் பெருந்துணை நின்றனர். அவர்களுக்கும் எமது நன்றிகள்.

இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் பாரம் பரியத்தை வெளிக்கொணரும் நூல்களையும் தொடர்ந்து இவ்விராஜாங்க அமைச்சு வெளியிட அல்லாஹ் துணை புரிவானாக!

அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல்
இராஜாங்க அமைச்சின் செயலாளர்.

20. 08. 1992.

# 1

# வரலாற்றுப் பாரம்பரியம் – 1796 வரை

— மரீனா இஸ்மாயில் —

பண்டைய இலங்கையின் முக்கிய மூன்று நிலப் பகுதிகளாகத் திகழ்ந்த ரஜரட்ட, ரோஹண, மலய என்பனவற்றுள் அதிமுக்கியமான " அரசனின் நாடு " (King's Country) என அழைக்கப்பட்ட ரஜரட்ட மாகாணத்துள் அடங்கியதே இன்றைய அனுராதபுர மாவட்டம் ; அல்லது வட மத்திய மாகாணப் பிரதேசமாகும். வடக்கே காணப்படும் வரண்ட பிரதேசத்தை வடபுலமாகவும், மத்திய மலையகத்தின் அடிவாரத் தாழ் பூமியையும் பாய்ந்தோடும் மகாவலி கங்கையையும் தென்புலமாகவும் கொண்டதே ரஜரட்ட பகுதியாகும். " சிங்கள நாகரிகத்தின் ஊற்றுக் கண்ணாக " ரஜரட்ட பகுதியே விளங்கிற்றென வரலாற்றாசிரியர்கள் விதந்துரைக்கின்றனர்.

இந்த ரஜரட்ட நிலப்பிரதேசமே — ஆதிகால இலங்கையின் அதிகப் பெரும்பான்மை மக்கள் தொகையையும், அதிகளவிலான குடியேற்றங் களையும், பிரதான நீர்ப்பாசனங்களையும் கொண்டிலங்கியது எனலாம். இப்பிரதேசமே யாழ்ப்பாணம் (ஜம்புக்கொல), மாந்தை (மஹதித்த), திருகோணமலை (கோகான) முதலிய பிரதான துறைமுகங்களையும், ஊர்காவற்றுறை (உரதொட), குதிரைமலை, முல்லைத்தீவு ஆகிய சிறு துறைமுகங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்க அம்ச மாகும்.

கி. மு. 5 ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 10 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பிரிவில் அரசன் வாழ்ந்து வந்த அனுராதபுரமே தலைநகரமாகவும், நிர்வாக கேந்திர ஸ்தானமாகவும் விளங்கி வரலாயிற்று. அதே வேளை, வர்த்தகத் துறைக்கான மத்திய நிலையமாகவும் அனுராதபுரமே திகழ்ந்தது. அநுராதபுரத்தையும் துறைமுகங்களையும் பிரதான பாதைகள்

இணைத்தன. உள்நாட்டு வர்த்தகமும் அனுராதபுரத்திலிருந்தே மேற்கொள் ளப்பட்டு வந்தது. அதனால் துறைமுகம் சார்ந்த வெளிநாட்டு ஏற்றுமதி வர்த்தகத்தையும் உள்நாட்டு வர்த்தகத்தையும் அனுராதபுரமே தன் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தமை கவனிக்கத்தக்கது.

ஆரம்பகால இலங்கையின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளுள் ஒன்றாக விளங்கிய வர்த்தகம், அரபியர்களுடனும், கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் தோற்றத்தினை அடுத்து, முஸ்லிம்களுடனுமே முக்கியமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது என வரலாறு கூறுகின்றது. கிழக்கு மேற்குக்கான வர்த்தக கப்பற் பாதையில், இலங்கைத் துறைமுகங்களே கப்பல்கள் சதாவும் வந்துபோகும் இடங்களாகத் திகழ்ந்தன. 9 ஆம் நூற்றாண்டளவில் இவ்வர்த் தகத்தைத் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த அரபியரே, வர்த்தக மத்தியஸ்தர்களாகப் பணியாற்றியதன் மூலம் இலங்கைத் துறைமுகங்களை வர்த்தக உலகின் தலைவாசல்களாக ஆக்கினர் எனலாம்.

பழங்கால கிரேக்க — ரோமானிய எழுத்தாதாரங்கள், " இலங்கைத் துறை முகங்களில் அரபியர்களே வர்த்தக நோக்கில் செல்வாக்குப் பெற்றிருந்தனர் " எனக் குறிப்பிடுகின்றன. ' த பெரிப்பிளஸ் ஒப் த எறித்திறியன் ஸீ — (The Periplus of the Erythraen Sea), என்னும் கிரேக்க வர்த்தகக் கைநூல், " கி. பி. முதலாம் நூற்றாண்டு காலத்தில் இலங்கைத் துறைமுகங்களுக்கு அரபியர்களே அடிக்கடி போய் வந்திருந்தனர் " எனக் குறிப்பிடுவதோடு , பிளைனி (Pliny) (கி. பி. 1) ; ஒனஸ்கிறிட்டஸ் (Onescritus) (கி. பி. 3) ; கொஸ்மோஸ் இண்டிகோபிளஸ்ரஸ் (Cosmos Indicopleustes) (கி. பி. 6) ஆகியோர் கிறிஸ்தவ விவரண நூலில் ' அக்கால இலங்கைத் துறைமுகங்களில் அரபியர் பெற்றிருந்த செல்வாக்கினை ' உறுதி செய்கின்றனர்.

டெனன்ற் (Tennent) அவர்களின் கூற்றுப்படி கி. பி. 4 ஆம் 5 ஆம் நூற்றாண்டு காலங்களில் அரபியர் இந்திய மலபார் கரையோரங்களில் குடியேறி, தங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டதை அடுத்து, இலங்கைக்கும் வந்தனர். " இங்கு புகலிடம் தேடி வருவோரை விருந்தோம்பற் பண்பினால் வரவேற்று, எல்லாச் சமய பிரிவுகளுக்கும் சகிப்புத் தன்மையுடன் இடங் கொடுத்தல் அன்றைய இலங்கை அரசின் விசேட அம்சமாகும் " [1] இதனைத் தொடர்ந்து அரபு நாட்டிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் பல முஸ்லிம்கள் இலங்கையின் வடமத்திய பிரதேசங்களில் குடியேறினர் என்பது சாத்திய மானவொரு விடயமாகும்.

இப்பிரதேசங்களில் அராபியர்களின் குடியேற்றம் தொடர்பான ஆரம்பக் குறிப்பு மகாவம்சத்தில் ( X : 90) கி. மு. 437 — 407 காலத்தில் அரசாண்ட பண்டுகாபயன் அனுராதபுரத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது " யோன கருக்கென ஒதுக்கப்பட்ட இடம் . . . " எனக் குறிப்பிடப்படுவதாகும். " யோனகர் " என்பது வெளிநாட்டினரைக் குறிப்பதோடு, அவர்கள் பெரும் பாலும் அரபியரின் வழித்தோன்றல்களே எனலாம். இக்கூற்றினை உண்மை என ஏற்றுக்கொள்ளும் திரு. இ. ஆர். அய்ட்டன் (E. R. Ayrton) என்னும் வரலாற்றாசிரியர், தான் யோனகர் — சோபோவினர் ஆகிய இரு சாராரையும் " அரபியர் " என்றே மொழிபெயர்க்க விரும்புவதாகக் கூறுவதுடன், "அனுராதபுரப் பகுதியில் குடியேறியோர் இன்றைய சோனகர்களின் முந்தையோரே ; அவர்களின் வம்சத்தவர்கள் சிங்கள மக்களால் இன்றும் யோனகர் என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகின்றனர். " [2] என்கிறார்.

பழங்கால அராபிய எழுத்தாளர்கள், இலங்கைத் தீவின் வர்த்தக முக்கியத்துவம் பற்றி அடிக்கடி குறிப்பிட்டுள்ளபோதும், தற்போதைய வடமத்திய மாகாணப் பகுதியில் முஸ்லிம்களின் குடியேற்றம் பற்றி அரிதாகவே குறிப்பிட்டுள்ளனர்.

இருந்தபோதும், அபூ செய்த் போன்ற கடலோடிப் பயணிகளின் குறிப்புகளை அடியொற்றி, இதிரிஸி (கி. பி. 1101 — 54) என்னும் பிரபலமான புவியியல் நிபுணர் கூறுகிறார் : " . . . இத்தீவிலுள்ள அகா (Agha) (அனுராதபுரம்) எனும் நகரில் வாழ்ந்து வந்த அரசர், 16 மந்திரிமார்களைத் தன்னாட்சியில் நியமித்திருந்தார் ; அவர்களுள் தனது சமயத்தைச் சார்ந்தோர் நால்வர், நாலு கிறிஸ்தவர்கள், நாலு முஸ்லிம்கள், நாலு யூதர்கள் ஆவர். அவ்வரசர், தம் மந்திரிகளின் சமயச் சீடர்கள் ஒன்றிணைந்து தத்தம் சமய அனுஷ்டானங்களில் ஈடுபடுவதற்கான இடங் களை ஒதுக்கிக் கொடுத்திருந்தார் . . . [3]

இக்கூற்றிலிருந்து, அக்கால கட்டத்தில் ரஜரட்ட இராசதானியில் கணிசமான முஸ்லிம் குடியேற்றவாசிகள் — அன்னவர்களின் பிரதிநிதிகள் அரச சபையில் பிரதிநிதித்துவம் செய்யும் அளவிற்கு — வாழ்ந்திருக்கின்றனர் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

முஸ்லிம்களின் இலங்கை வருகை தொடர்பாக, கி. பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல் — பலதூரி [4] என்பவரும் குறிப்பிட்டுள்ளார் ; இந்நாட்டிற் குடியேறி வாழ்ந்து மரணித்த அராபியர் சிலரின் துணைவிமாரை அன்றைய மன்னன் இரண்டாம் தாதோபதிஸ்ஸன் (கி. பி. 650 — 658)

தைகிரிஸ் நதிப் பள்ளத்தாக்கிலுள்ள அவர்களது பூர்வீக நாட்டுக்கு அனுப்பிய வேளையில் கடற்கொள்ளைக்காரரினால் அவர்கள் தாக்கப்பட்டனர் எனக் குறிப்பிடுகிறார்.

இக்காலப் பிரிவில் அரசியல், நிர்வாக நடவடிக்கைகளுக்கு மத்திய தலமாக இப்பிரதேசம் திகழ்ந்தமையினால், வடமத்திய மாகாணத்தில் இவர்கள் குடியேறியிருந்ததையே இது சுட்டிக்காட்டுகின்றது.

துறைமுகப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் இருந்தமைக்கும் ஆதாரங்கள் உள்ளன. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கிறிஸ்தவர்கள் ஒரு தேவாலயத்தைக் கட்ட நினைப்பதற்கு முன்னமே — போர்த்துக்கேயர் இலங்கையின் கரையில் கால் பதிக்குமுன்னமே, முஸ்லிம்கள் நல்லூரில் ஒரு பள்ளிவாசலைக் கட்டியிருந்தனர். ஏனெனில், போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கைப்பற்றி அங்கு கோவிலொன்று கட்டுவதற்கு முற்பட்ட போது " அது மிகச் சிறந்த இடத்தில் அமைய வேண்டுமென எண்ணிய பாதிரியார், துறைமுகத்தின் மேல் ஆதிக்கம் செலுத்தக்கூடியதாகவும், மக்கட் குடியிருப்புக்கு அருகில் அமைந்திருந்ததுமான பள்ளிவாசலையும் ஆவல் கண்ணோடு நோக்கினார். " [5]

திருகோணமலையின் துறைமுகப் பகுதியில் இரு கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. [6] அவை 13 ஆம் 14 ஆம் நூற்றாண்டு காலத்தைச் சேர்ந்தவையாகும். இதேவேளை மன்னார் மாவட்ட புளியந்தீவுப் பகுதியில் 12 ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பிரிவைச் சேர்ந்த அராபிய எழுத்துக்களையுடைய மற்றொரு கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் குடியிருப்புக்கள் இருந்தமையை இவை தெட்டத் தெளிவாகக் குறிப்பிடுகின்றன.

10 ஆம் நூற்றாண்டளவில் மன்னார், மாந்தையின் சுற்றுப்புற பகுதிகளில் அராபியரின் குடியிருப்புகள் இருந்தமை பிரசித்தமானது. 8 ஆம் நூற்றாண்டு காலப்பிரிவில் குதிரைமலையில் வசித்த அராபியர் முத்துக் குளிப்பில் ஈடுபட்டு, மாந்தை வியாபாரிகளுக்கு அவற்றினை விநியோகித்தும் வரலாயினர். [7] இப்பிரதேசத்தில் இவ்வாறான வேறு குடியிருப்புகளும் அமைந்திருந்த சாத்தியம் உண்டு.

துறைமுகம் சார்ந்த வெளிநாட்டு வர்த்தகத்துடன் சேர்ந்து உள்நாட்டு வர்த்தகமும் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத் தக்கது. வியாபாரிகள் துறைமுகங்களிலிருந்து பொருட்களைக் கொள்வனவு

செய்து, உள்ளூர்ப் பகுதிகளில் விநியோகித்ததோடு, உள்ளூர் தானிய வகைகளையும் — வாசனைப் பொருட்களையும் துறைமுகங்களுக்கு எடுத்து வந்து ஏற்றுமதி செய்து வரலாயினர்.

இவ்வியாபாரிகள் அனேகமாக முஸ்லிம்களாகவே இருந்திருக்கலாம் என்பதோடு, பிற்காலத்தில் இத்தகைய வர்த்தகங்களை அவர்களே செய்து வரலாயினர். பொலன்னறுவ, அனுராதபுரம் போன்ற உள்ளூர் நகரங்கள், “பதி” (Padi) என அழைக்கப்படும் சந்தைத்தலங்களைக் கொண்டிருந்தன. துறைமுகங்களிலிருந்து பொருட்களைக் கொண்டுவரும் முஸ்லிம் வர்த்தகர்களிடம் பொருட்களைப் பெற்று, வியாபாரம் செய்யும் நிரந்தரக் குடியிருப்பாளர்களை இத்தலங்கள் கொண்டிருந்தன. உள்ளூர் வியாபாரப் பாதைகளின் இடைத்தலங்களிலும் முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

ரஜரட்ட இராஜதானியின் வீழ்ச்சியை அடுத்து, மக்கள் தென்புலம் நோக்கி இடம்பெயர்ந்து சென்றமையால், இன்றைய வடமத்திய மாகாணம் கைவிடப்பட்ட பிரதேசமாயிற்று. இறுதியாகக் கண்டியைத் தலைநகராகக் கொண்டு மத்திய மலையகத்தில் சிங்கள இராஜதானி உருவாக, கரையோரப் பிரதேசங்கள் போர்த்துக்கேயரினதும், பின்னர் ஒல்லாந்தரினதும் நிர்வாகங்களின் கீழ் வரலாயின.

16 ஆம் நூற்றாண்டின் பின், ரஜரட்டைப் பிரதேசம் சிதைந்து, சிறுசிறு ஆள்புலங்களாக மாறி, கண்டி மன்னனுக்கு விசுவாசமுள்ள சிற்றாட்சியாளராலும், வன்னியர்களாலும் ஆளப்பட்டு வந்தது. இவ்வாறு மேற்கே மன்னார் தொடங்கி சிலாபம் வரை, கிழக்கே திருகோணமலை முதல் பாணமை வரையிலான முழுப் பிரதேசமும் வன்னிமைகளாக மாறின, இவ் வன்னியர்களுள் ஒருவர் குமார வன்னியர் என அழைக்கப்பட்ட முஸ்லிமாவார். புத்தளம் திசாவையின் கீழ் பல முஸ்லிம் கிராமங்களை இவர் தனது அதிகாரத்தின் கீழ் நிர்வகித்தார்.

வடபுலத்துத் துறைமுகங்களில் வர்த்தகம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், கொழும்பு, பேருவளை, காலி போன்ற மேற்கு, தென்மேற்குக் கரையோரத் துறைமுகங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டன. கரையோரப் பகுதிகள் ஐரோப்பிய நிர்வாகத்தின் கீழ் வந்தபோதும் உள்நாட்டு வர்த்தகத்தை மேற்கொண்டோரில் முஸ்லிம்களே பிரதான பங்கேற்றனர். மேற்கே புத்தளம், கற்பிட்டி ; கிழக்கே திருகோணமலை, கொட்டியாரம், மட்டக்களப்பு முதலிய துறைமுகங்களைச் சிங்கள கண்டி மன்னர்கள்

தொடர்ந்தும் தமது வர்த்தகத் தலங்களாக உபயோகிக்க முடிந்தது. அவ் வேளையில் முஸ்லிம்களே வியாபாரிகள் தொடர்பாளராகச் செயற்பட்டு, தென்னிந்தியாவுக்குப் பாக்கு போன்றவற்றை ஏற்றுமதி செய்து, அதற்குப் பகரமாக துணிவகைகளைப் பண்டமாற்றுச் செய்யப் பேருதவி புரிந்து வரலாயினர்.

கரையோரப் பகுதிக்கும் உள்நாட்டுக்குமிடையிலான வர்த்தகத்தையும் முஸ்லிம்களே மேற்கொண்டனர். இம்முஸ்லிம் வர்த்தகர்கள் பிரஸ்தாப கிராமங்களில் இருந்து பாக்கு — தானிய வகைகள் போன்ற சரக்குகளைக் கரையோரப் பகுதிகளுக்கு எடுத்து வந்து, மீண்டும் கரையோரப் பகுதி களிலிருந்து உப்பு, கருவாடு, துணிவகைகள் போன்றவற்றை வாங்கி வந்து பண்டமாற்று வியாபாரம் செய்தனர். உள்நாட்டுக் கிராமங்கள் தன்னிறை வுடையனவாயிருந்தாலும் கரையோரப் பிரதேசப் பொருட்களைப் பெறு வதற்கு முஸ்லிம் வியாபாரிகளிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது.

முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வர்த்தகப் பொருட்களைப் பொதி சுமக்கும் மாடுகள் மீதேற்றிப் பயணக் குழுக்களாகத் தவளமுறையில் எடுத்துச் சென்றனர். இவ்வாறு அவர்கள் துறைமுகங்களுக்கும் கண்டிக்குமிடையிற் பயணஞ்செய்த வழி நெடுகிலும் பல இடங்களைத் தரிப்பிடங்களாகக் கொண்டிருந்தனர். இத்தரிப்பிடங்களே நாளடைவில் முஸ்லிம் குடியேற்றப் பிரதேசங்களாக மாறின. முஸ்லிம்களால் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட மகாவலி கரையோடு செல்லும் கண்டி — கொட்டியார் பாதை — "தவளம்" வியாபார முறையில் மிகப் பிரசித்தமானதாகும்.

கரையோரப் பகுதிகளிலிருந்து பண்டமாற்றுப் பொருளாக உப்பைப் பெறுவதற்காக, உள்நாட்டுத் தானியங்களைப் பொதி சுமக்கும் மாடுகள் மீதேற்றிச் செல்லும் முஸ்லிம் தவளக்குழு ஒன்றினை, 1762 ஆம் ஆண்டில் ஒருநாள் திருகோணமலையிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற "பீபர்ஸ்" (Pybus) என்பவர் தன் பயணத்தின்போது நேரில் சந்தித்த சம்பவத்தைக் குறித்து வைத்துள்ளார். தவளப் பாதைகளில் உருவான முஸ்லிம் குடியிருப்புக்களுக்குச் சிறந்த உதாரணமாக பங்குராணை, நிக்கவட்டனை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.[8] நேகமக் கிராமமும் இவ்வாறே உருவாயிற்று. வட மத்திய மாகாணத்தில் இவ்வாறு மேலும் பல குடியிருப்புக்கள் உருவாகியிருக்கும் எனக் கருதலாம்.

வடமத்திய பிரதேசத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிய சில கிராமங்களும் ஒரு சில நகரங்களும் இருந்தபோதும், அவற்றைத் தங்களது

செல்வாக்கிற்கு ஆட்படுத்தி, முன்னேற்றம் அடையச் செய்ய, போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும் பாரதூரமான முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை எனலாம். உள்நாட்டு வர்த்தகத்தில் முக்கிய ஸ்தானமாகவும், நாடெங்கும் இருந்து திரண்டுவரும் யாத்திரிகர்களுக்கு முக்கிய சமய ஸ்தலமாகவும் அநுராதபுரம் தொடர்ந்தும் இருந்து வரலாயிற்று. இங்கெல்லாம் முஸ்லிம் குடியேற்றங்களும் தொடர்ந்திருந்தமைக்கும் ஆதாரமுண்டு.

18 ஆம் நூற்றாண்டில் அநுராதபுரம், முசலிப்பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் மன்னாரிலுள்ள கம்பெனி ஒன்றுடன் மிளகு வர்த்தகம் செய்ய முன்வந்ததை ஒல்லாந்து ஆவணங்கள் குறிப்பிடுகின்றன.

விக்ரம ராஜசிங்க மன்னன், தனக்கு விசுவாசமாகச் சேவையாற்றிய நான்கு முஸ்லிம்களுக்கு "நேகம" என்னும் கிராமத்தை அன்பளிப்புச் செய்தான் என்பது கர்ண பரம்பரைத் தகவலாகும். இத்தகைய மக்களின் குடும்பங்களும் அந்தப் பகுதிகளில் தத்தம் வாசஸ்தலங்களை அமைத்துக் கொண்டன. அத்துடன் புத்தளம் — அநுராதபுரம் வியாபாரப் பாதையில் தொழில் நிமித்தம் பயணம் மேற்கொண்ட முஸ்லிம் வர்த்தகர்கள் சிலரும் இங்கு குடியேறினர். பயிர்ச்செய்கை — நீர் நிலையங்களின் வாய்ப்புக்களைக் கருதி, சூழவுள்ள கிராமங்களிலிருந்து சுமார் 500 வருடங்களுக்கு முன் குடியமர்ந்தவர்களே முக்கிரியாவை முஸ்லிம்கள் என்ற தகவலும் உண்டு.[9]

வடமத்திய மாகாணப் பிரதேசங்களில் முஸ்லிம்களின் குடியேற்றம் தொடர்பான, புதைபொருள் — இலக்கிய சான்றுகள் பிரித்தானியரின் வருகைக்கு முந்தைய காலப்பிரிவில் குறைவாகவே காணப்பட்டாலும், முஸ்லிம்கள் அங்கு வாழ்ந்திருந்தமை நிச்சயமாகும். 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரின் வருகையின் பின்னர், குளங்கள் பழுது பார்க்கப்பட்டு, அவை விவசாயத்துறைக்கு பயன்படுத்தத் திறந்துவிட்டதை அடுத்து, இப்பகுதிகளில் இன்றைய முஸ்லிம் குடியேற்றங்கள் நிலைகொள்ளலாயின.

### குறிப்புக்கள்

1. Tennent, *Ceylon,* Vol. I, Sixth Edition 1977, p.492
2. Note on the Mahavamsa, JRASCB Vol. XXIII, p. 171
3. An Ethnological Survey of the Muslims of Sri Lanka, Chap. II
4. Ibid.

5. Pieris, P. E., *Ceylon-Portuguese Era*
6. Moors Islamic Cultural Home Souvenir, No. 3
7. An Ethnological Survey of the Muslims of Sri Lanka, Chap. II
8. Muslims of Sri Lanka, Chap. VII
9. Information given by the people of these villages

# 2

# வரலாற்றுப் பாரம்பரியம் 1797 – இன்றுவரை

— எம். எம். எம். மஹரூப் —

**1796** இல் பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் உதயமானபோது, அநுராதபுரி முஸ்லிம் மக்கள் வாழ்க்கையில் புதிய யுகம் ஒன்று பிறக்க வழி கோலியது. 1796 இல் இருந்து அனுராதபுரி மாவட்டத்தை அண்மித்த கண்டி இராச்சியம் பிரித்தானியருடன் நட்புரிமை கொண்டாடாதபடியால் பிரித்தானியர் அனுராதபுரி மாவட்டத்தைப் பற்றி அக்கறை காட்டவில்லை. (இங்கு வசதிக்காகத்தான் அனுராதபுரி மாவட்டம் என எழுதப்படுகின்றது. உண்மையில் பிரித்தானியரின் ஆட்சியின் முதற்பகுதியில் அத்தகைய நிர்வாகப் பிரிவு இருக்கவில்லை. எனவே அனுராதபுரி மாவட்டம் எனக் குறிப்பிடுகையில், தற்கால அனுராதபுரி மாவட்டத்தின் பிராந்தியம் என்றே கருத வேண்டும்.)

1829 இல் கோல்புரூக் அரசியல் யாப்புக்குப் பின்னர் பிரித்தானியர் தமது இலங்கைக் காலனித்துவம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார்கள்.[1] வரவுக்கு மிஞ்சிய செலவு அதற்கு முக்கிய காரணமாக இருந்தது. இலங்கையை ஆளுவதற்கு அதிக பணம் தேவைப்பட்டது. எனவே, பிரித்தானியர் இலங்கைச் செலவினங்களைச் சுருக்கவும், இலங்கையின் வளங்களைப் பயன்படுத்தவும் எண்ணினார்கள். அத்தகைய வளங்களுள் ஒன்று, அனுராதபுரி மாவட்டமாகும். அடர்த்தியான முட்காடுகள், சாதாரணமாக உலாவும் வன விலங்குகள், ஒற்றையடிப் பாதைகள், ஆங்காங்கே சிறு கிராமங்கள், பாழ்டைந்த வாவிகளின் நீரிலிருந்து உற்பத்தியாகும் நுளம்புகள், மலேரியா ஜுரம் — இவையே அனுராதபுரி மாவட்டத்தின் 1800 ஆம் வருடத் தோற்றமாகும்.

காலக் கிரமத்தில் பிரித்தானிய அரசு தனது நிலைப்பாட்டை இலங்கையில் உறுதியாக்கிக் கொண்டது. வீதிகள், பாலங்கள் அமைக்க திணைக்களங்கள்

ஏற்படுத்தப்பட்டன. அஞ்சல், தொலைத்தொடர்புத் திணைக்களம் என்பன உருவாகின.[2] அதே வேளையில் பிரித்தானியரின் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் கோப்பிப் பெருந்தோட்டங்கள் தோன்றின. 1840 ஆம் ஆண்டு வரைக்கும் கோப்பிப் பயிர்ச்செய்கைக்காக அரசு 40,000 ஏக்கர் காணிகளைக் குறைந்த விலையில் வெள்ளைக்காரருக்கும் ஏனையோருக்கும் விற்றது.[3] அதன் பயனாக இலங்கை ஏற்றுமதி இறக்குமதி நாடாகியது. பொருளாதாரத் துறையில் இலங்கை முன்னேறியது. (பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை உள்ளடக்கி எல்லா ஐரோப்பியப் பேரரசுகளும் தமது காலனித்துவக் கொள்கைகளில் தமது சுயநலங்களைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளன .[4] சென்ற நூற்றாண்டின் கடைசிக் காலகட்டத்தில் இலங்கையின் ஏற்றுமதிகள், அதற்கு முந்திய காலகட்டத்தின் ஏற்றுமதிகளை விட இரண்டு மடங்கு கூடின.[5] இலங்கையின் இத்தகைய சுபீட்சம் இலங்கையின் பல பாகங்களுக்கும் வியாபித்தது.

## அநுராதபுரி மாவட்டத்தில் துளிர்த்த அபிவிருத்தி

அநுராதபுரி மாவட்டம், சென்ற நூற்றாண்டின் கடைசிக் காலகட்டத்தில் இலங்கை வாழ் மக்களின் கரிசனத்தையும், துறைத்தளத்தின் அக்கறையையும் பெற்றுக்கொண்டது. அதற்குப் பல காரணங்களைச் சுட்டிக்காட்ட முடிகின்றது. புதைபொருள் அகழ்வும், ஆராய்ச்சியும் தொடங்கின. பாளி மொழியின் கருவூலமாக அநுராதபுரி மாவட்டம் கவனத்தை ஈர்ந்தது. ஐரோப்பிய தென்னாசிய மொழி வல்லுனர்கள் அங்கு விஜயம் செய்தார்கள்.

மேலும் பண்டைய அநுராதபுரி நாகரிகத்தின் பெருமையையும் சாதனங்களையும் மக்கள் (உள்வாரி, வெளிவாரி மக்கள் உட்பட) தெரிந்து கொண்டார்கள். புதையுண்ட நகரங்கள் (Buried Cities) என்ற புகழ் அந்நாகரிகத்திற்கு ஏற்பட்டது. பல நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன.[6] சர்வதேச புகழ் ஏற்பட்டது. கொழும்பு நூதன சாலையை அமைத்த ஆளுனர் சேர் வில்லியம் இறகரி போன்றோர் அந்தப் புகழைப் பலப்படுத்தினர். அத்துடன் பண்டைய குளங்களும் வாவிகளும் சீர்திருத்தம் செய்யப்பட்டன.

இந்தத் தாக்கங்கள் யாவும் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களைப் பாதித்ததில் வியப்பில்லை. அடர்த்தியான காடுகளில் வசித்து வந்த முஸ்லிம் குடும்பங்கள் குளங்களுக்கும் வாவிகளுக்கும் அணித்தான இடங்களுக்கு வந்தன. அத்துடன் வெளி மாவட்ட முஸ்லிம்கள் அநுராதபுரி மாவட்டத்தில் நிலைபெறத் தலைப்பட்டனர்.

1901 இல் நடந்த இலங்கை மக்களின் குடிசன அறிக்கை (Census) இவ்வாறு சுட்டிக்காட்டியது.

அநுராதபுரி மாவட்டம — 8589 முஸ்லிம்கள்

இந்த க்ஷீணித்த தொகைக்கு முக்கியமான காரணமாக அமைந்தது, வட மத்திய மாகாணத்தின் அக்காலத்திய பொருளாதார, சுகாதார நிலை எனலாம். இயற்கையின் வளங்களையும், சம்பத்துகளையும் கொண்டிருந்த அநுராதபுரி மாவட்டம் இயற்கையின் பிரதிகூலங்களையும் பெற்றிருந்தது. பாழடைந்த குளங்களின் காரணமாக மலேரியா ஜுரம் அங்கு வெகுவாகப் பரவியிருந்தது. (மலேரியாவுக்கு அக்காலத்தில் கிரமமான தடுப்புச் சாதனங்களோ, நோயை மட்டுப்படுத்துவதற்குத் தகுந்த மருந்து வகைகளோ இல்லை) மலேரியாவை அக்காலத்தில் குளிர் காய்ச்சல் (Ague) என ஐரோப்பிய வைத்திய நூல்கள் விவரித்தன.

கடந்த நூற்றாண்டின் கடைசிக் கட்டத்திலும், இந்நூற்றாண்டின் முதல் பகுதியிலும் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் சமூக அமைப்பு எவ்வாறு இருந்தது என்பதை நான் பிறிதோர் இடத்தில் விவரித்திருக்கிறேன்.

" அநுராதபுரி மாவட்டத்தில் முஸ்லிம்களின் சமூக அமைப்பை, மடிகே சமூக அமைப்பின் மாறுபட்ட தோற்றம் " எனக் கூற முடிகிறது. அங்கு கண்டி இராசதானியைப் போன்று மக்கள் செறிவோ, பண்டைய கலாசாரத்தின் உறுதி பெற்ற நிலைப்பாடுகளோ, அல்லது அரசின் வலுவான ஆளுமையோ அங்கு இல்லை. பரந்துபட்ட காடுகள், தாமே தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம், அதிக செழுமையற்ற பூமி என்பன அங்குள்ள முஸ்லிம்களுக்கு மனோவலிமையையும் தேக பலத்தையும் கொடுத்தன. வெளிப் பிரதேசங்களின் தொடர்பு அவ்வளவு இல்லாதபடியால் தமக்குத் தேவையான வற்றைத் தாமே உருவாக்கிக் கொண்டார்கள். வர்க்க பேதங்கள் அங்கில்லை. ஆளுமையை இயற்கையாகக் கொண்டுள்ளவர்கள் சமூகத்தின் தலைவர் களாகச் செயற்பட்டனர். பொருள் வசதி குறைந்திருந்தபோதிலும், ஆளுமையும், சமய அனுட்டானங்களும் நிறைந்திருந்தன. அங்கு முஸ்லிம் தலைவர்கள் வெவ்வேறு அரசியல் அமைப்புகளில் உள்ள ஏனைய இயக்கங் களோடு ஒத்துழைத்தனர்.

உதாரணமாக, 1901 இல் வடமத்திய மாகாணத்தில் 18 கிராம சபைகள் நடைமுறையில் இருந்தன. அன்று கிராம சபைகள் முக்கியமான பங்கை வகித்தன. ஏனென்றால் சாதாரண மக்கள் ஆங்கிலத் துரைமாரை இலகுவாகச்

சந்திக்க முடியாமல் இருந்தது. கிராம சபைகளே அரசையும், மக்களையும் இணைக்கும் பாலமாகச் செயற்பட்டன. கீழ்க்காணும் விபரங்கள் அதற்குச் சான்றாகும்.

| கிராமசபை | முஸ்லிம் உறுப்பினர் |
|---|---|
| கிரலு கோரலே | 02 |
| மமியாய கோரலே | 01 |
| நேகம் பத்து கோரலே | 01 |
| மெற பத்து | 02 |
| எகொட பத்து | 01[7] |

எனவே, வடமத்திய மாகாணம் என்ற பகைப்புலத்தில் அநுராதபுரி மாவட்டம் தனது பாரிய பங்கினை அளித்தது எனலாம். அநுராதபுரி மாவட்டத்தில் பண்டைய நாகரிகங்களின் நிலைபேறுகள் சீர்திருத்தப்பட்டன ; புனருத்தாரணம் அடைந்தன. அவற்றைச் சுற்றி மக்களின் தொகையும் சஞ்சாரமும் அதிகரித்தன. அங்கு முஸ்லிம் சனத்தொகையும் காத்திரமாக வளர்ந்தது எனலாம். ஏனைய இனங்களோடு முஸ்லிம்கள் காட்டிய நல்லுறவு, புரிந்துணர்வு, சகோதரத்துவம் என்பன அவர்களுக்கிடையே ஓர் இணைப்புப் பாலமாக அமைந்தது எனலாம்.

## அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் (1920 — 1948)

அநுராதபுரி மாவட்டம் தனது கலாச்சார பாரம்பரியத்தின் மகிமையால் பொது சனங்களின் மதிப்பையும் ஆளும் விழுமியோர்களது கரிசனையையும் நிரந்தரமாகக் கொண்டிருந்தது. அதனைப் பற்றி இலங்கைச் சட்ட நிரூபண சபையில் பல கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஆனாலும் ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களைப் போன்று அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களுக்கும் சிசு மரணங்கள், மகப்பேறு மரணங்கள் விகிதாசாரம் போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்ந்திருந்தன. [8] 1930 ஆம் ஆண்டில் இலங்கையில் மகத்தான அரசியல் மாற்றம் ஏற்பட்டது. அரச கழகம் (State Council) தோன்றியது. மக்களின் பிரதிநிதிகளின் கைகளில் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் வந்து சேர்ந்தன.[9]

அநுராதபுரி மாவட்டத்தின் விசேடம் என்னவென்றால் அங்கு அரசாங்க அதிபராகப் பலகாலம் இருந்த பிரிமன் (Mr. H. R. Freeman) என்ற

ஆங்கிலேயர் மக்களின் பெருமதிப்புப் பெற்று மாவட்ட பிரதிநிதியாக அரச கழகத்தில் வீற்றிருந்தார். மக்களின் பிரதிநிதிகள் அமைச்சர்களாக நியமனம் பெற்று மக்களுக்குத் தொண்டு செய்தனர். அதன் பண்டைய குளங்களின் நிமித்தமாக அநுராதபுரி மாவட்டம், காணி, விவசாய அமைச்சரின் கவனத்தை அதிகமாகப் பெற்றுக்கொண்டது. அக்காலத்தில் அப்பதவியை வகித்தவர், காலஞ்சென்ற கௌரவ திரு டீ. எஸ். சேனநாயக்க அவர்கள் ஆவார்.

1939 இலிருந்து 1945 வரை உலக மக்களை வாட்டிய இரண்டாம் உலக மகா யுத்தம், அநுராதபுரி மாவட்டத்தின் மகிமையை இன்னும் உயர்த்தியது. வெளி நாட்டிலிருந்து அரிசி தருவிக்க முடியவில்லை. இலங்கையின் வளங்களையே அரசு நம்பியது. " அதிக உணவு பயிரிடுக " என்ற பல அபிவிருத்தித் திட்டங்களை அரசு அமுலாக்கியது. அவற்றுள் அநுராதபுரி மாவட்டம் பங்கு கொண்டது. அரிசி, பிற தானியங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு அரசு பல ஊக்கங்களை அளித்தது. அதன் பயனாக முஸ்லிம் களும் வளர்ந்தார்கள்.

அக்கால கட்டத்தில் முஸ்லிம்களுக்கென சில திட்டங்கள் இயற்றப்பட்டன. அவற்றுள் முஸ்லிம் விவாக, விவாக முறிவுச் சட்டம் மிக முக்கியமானது. 1931 இல் இயற்றப்பட்ட இச்சட்டம் தொடர்ந்து பல திருத்தங்களை மேற் கொண்டது.[10] இச்சட்டம் முஸ்லிம் விவாக பதிவுக்காரர், காதிமார் ஆகியோரை நியமித்துச் செயற்படுத்தியது. முஸ்லிம் குடும்பச் சட்டம், அதனால் மெருகு பெற்றது; பொலிவு பெற்றது.

அநுராதபுரி மாவட்ட முஸ்லிம் மக்கள் பல பிரதேசங்களுக்கும் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களுக்கும் சென்று தமது வியாபார முன்னேற்றத்தைத் துரிதமாக்கினர். 1942 க்குப் பின்னர் இலங்கை கல்வி முறைகளிலும் பாடவிதானத்திலும் புதிய திருப்பம் வந்தது. 1943 - 1944 ஆம் ஆண்டுகளில் இலவச கல்வித்திட்டத்தை அரசு முன்வைத்து அமுலாக்கியது. அநுராதபுரி மாவட்டம் முஸ்லிம் கல்விக்கு இது பாரிய உந்துசக்தியாகச் செயற்பட்டது.

சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் மகத்தான அபிவிருத்தி 1947, 1948 காலப்பகுதியில்தான் நிகழ்ந்தது. அக்காலத்தில் டி. டி. ரி. என்ற பூச்சி கொல்லி வெகுவாகப் பயன்படுத்தப்பட்டது. அதன் பயனாக நுளம்புகளும், மலேரியாவும் ஒழிந்தன. அதன் பெறுபேறுகளாக உடல்நலன் பெருகியது. ஐந்து வயதுக்கு உட்பட்ட சிசு மரண விகிதாசாரம், மகப்பேற்று மரண விகிதாசாரம் மிகவும் குறைந்தன, தேக ஆரோக்கியமும் திடகாத்திரமும் கூடின.

முஸ்லிம் மக்களின் சுகாதாரப் புள்ளி விபரங்களில் இவ்வகை நல்ல அம்சங்களைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஐம்பதுகளில் முஸ்லிம் சட்டத் தின் முக்கிய பிரிவு ஒன்று அமுலாக்கத்திற்கு வந்தது. 1951 ஆம் ஆண்டில் வக்புச் சட்டம் இடம் பெற்றது.[11] இலங்கையில் அத்தனை பள்ளிவாசல்களும் வக்புச் சபையின் ஒழுங்கேற்பாடுகளின் கீழ் வந்தன. வக்பு ஆணையாளர் பள்ளிவாசல்களைப் பதிவு செய்தார். அவ்வாறே, அநுராதபுரி மாவட்ட பள்ளிவாசல்களும் தம்மை நம்பிக்கையாளர்கள் மூலமாகப் பதிவு செய்து கொண்டன.

## அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் தற்கால சரிதம்

1950 க்குப் பின்னர் அநுராதபுரி மாவட்டத்தில் வெளிப்பிரதேச முஸ்லிம் கள் வருகை தருவதை, அங்கு நிலைகொள்வதை அவதானிக்க முடிகிறது. மூன்று வகைக் குடி அமர்வுகளைச் சுட்டிக்காட்டத் துணியலாம். ஒன்று, மேற்கிலிருந்து (அதாவது மன்னார் போன்ற பிராந்தியத்திலிருந்து) குடி யமர்வு. இரண்டு, கிழக்கு (அதாவது கிழக்கு மாகாணத்திலிருந்து) குடியமர்வு. மூன்று, பின்னர் தெற்கிலிருந்து (அதாவது மாத்தளை போன்ற மாவட்டங்களி லிருந்து) குடியமர்வு.

இந்த நிகழ்வுகளினால் அனுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் சனத்தொகை யையும் அதன் பரவலாக்கத்தையும் கீழ்க்காணும் குடிமதிப்பு அறிக்கையினால் (Census Report 1961) காட்ட முடியும்.

| அநுராதபுரி மாவட்டம் | முஸ்லிம் சனத்தொகை |
|---|---|
| நுவரகம கோரளை | 778 |
| கல்பே கோரளை | 1979 |
| உடியன் குளம் கோரளை | 2163 |
| உலுகல கோரளை | 1011 |
| கிராமசேவக பிரிவு எண். 584 (யோடய எல) | 1598 |
| அநுராதபுரி நகரம் | 1026 |

வரலாற்று அடிப்படையில் மேற்கூறிய சனத்தொகைப் பரம்பலை நோக்குமிடத்து சில அனுமானங்களை நாம் முன்வைக்கக் கூடியதாக இருக்கிறது.

1. நகர மாந்தரை விட கிராமப்புற முஸ்லிம்கள் தாம் அதிக தொகை யினராகக் காணப்படுகின்றனர்.

2. கிராமப் புறங்கள், அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் நிலைக்களன் களாக இருக்கின்றன. ஊன்று கோல்களாகவும், தூண்டுகோல்களாகவும் இருக்கின்றன. தேசிய சம்பத்துகளின் கருவூலமாக இருப்பவையும் அவைதாம்.

3. கிராமப் புறங்கள் வளர்ச்சியடைந்தால், நகரங்களின் சேவை தொழில் கள் (Service Industries) வளர்ச்சி பெறுகின்றன. சேவை தொழில் களில் முக்கியமானவை மருத்துவம், நீதி சட்டவியல், பொதுநிர்வாகம், கல்வி தாபனங்கள் முக்கியமானவை.

4. கல்வி அபிவிருத்திக்கு கிராமங்களின் முன்னேற்றம் இன்றியமை யாதவை.

5. கிராமங்களில் அபிவிருத்தி வேறு பல தொழில்களை ஊக்குவிக் கின்றன.

6. அபிவிருத்தி அடைந்து வரும் கிராமங்களிலிருந்து பலர் நகரங்களில் குடியேறி, அவற்றைச் செழுமைப்படுத்துகிறார்கள்.

தற்கால அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் முன்னேறி வரும் சமுதாய மாகும். தமது இனத்துக்கும் — தாய் நாட்டுக்கும் சேவை செய்யும் திறன், ஆற்றல், ஆளுமை அவர்களிடம் உண்டு. கல்வித் துறையிலும் ஏனைய மாவட்ட முஸ்லிம்களுக்கு ஈடுகொடுக்கும் சில சமயம் விஞ்சும் நிலையில் அவர்கள் உள்ளனர். துரித மகாவலித் திட்டம் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களுக்குப் புத்துயிர் அளிக்கின்றது.

அவர்கள் இலங்கையில் உள்ள எல்லா மொழிகளிலும் பரிச்சயம் பெறுகின்றார்கள் ; பெற்றிருக்கின்றார்கள். இஸ்லாமிய ஷரிஅத் விவகாரங் களில் அவர்கள் யாருக்கும் சளைத்தவர்கள் அல்லர். அநுராதபுரி மாவட்டத்தில் அதன் முஸ்லிம் சனத்தொகையின் அடிப்படையில் மதிப்பிடும்போது மிகக் கூடுதலான பள்ளிவாசல்கள் இருக்கின்றன என்று கூறலாம்.

ஆதாரக் குறிப்புக்கள்

1. Sir Ivor Jennings & H. W. Tambiah, *Ceylon–the Development of its Laws and Constitution* (London 1951); H. W. Thambiah, *Principles of Ceylon Law.* (Colombo 1970); M. M. M. Mahroof, *Islam in Sri Lanka; The Long Road to Accommodation* in Journal Institute Muslim Minority Affairs Jeddah/London Vol. II No. 1 (January 1990)

2. M. M. M. Mahroof, *Muslim Education in Sri Lanka (Ceylon) 1881-1901* in Islamic Culture (Hyderabad, India), Vol. LXIII, No. 4 (October 1973)

3. H. A. J. Hulugalle, *British Governors of Ceylon* (Colombo); Kandyan Peasantry Commission Report (1948)

4. M. M. M. Mahroof, *Impact of European-Christian Rule on the Muslims of Sri Lanka;A Historical Analysis* in Islamic Studies (International Islamic University, Islamabad, Pakistan), Vol. 29 No. 4 (Winter 1990)

5. H. A. de S. Gunasekera, *From Dependent Currency to Central Banking in Ceylon 1815 to 1957* (London)

6. Bella Woolf, *Guide to Ruined Cities* (London), Frank Rutter, *Ruined Cities* (London)

7. M. M. M. Mahroof, *SomeAspects of the Social Organization of the Muslims of Ceylon – 1901-1912* in Serendib Islamic Review (Beruwela 1981), Vol. 1 No. 2

8. M. M. M. Mahroof, *An Educational and Sociological Perspective of the Muslims of Sri Lanka 1902-1914* in Islamic Culture (India), Vol LXI No. 2 (April 1987)

9. Jennings & Tambiah, op. cit.

10. M. M. M. Mahroof, *The Enactment of Muslim Marriage and Divorce Legislation in Sri Lanka; the Law in Context* in Journal Institute Muslim Minorities Affairs. Vol. 8 No. 1 (January 1987)

11. Muslim Mosques and Charitable Tursts or Wakfs Act (1956)

# 3

# மஸ்ஜித்கள்

— எம். எம். எம். மஹ்ரூப் —

முஸ்லிம்களின் பண்டைய வரலாற்றை ஆராய்வதில், பள்ளிவாசல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. உண்மையில், அவைதாம் முஸ்லிம்களின் புராதன சுவடுகளாக இருக்கின்றன.[1] முஸ்லிம்கள் சிற்பம் போன்ற கலை வடிவங்களை ஏற்றுக் கொள்ளாததினால் பள்ளிவாசல்களே முஸ்லிம்களின் சுவடிக் கூடங்களாக, சுவடுகளாக இருத்தல் நியாயமானதே !

இலங்கை முஸ்லிம்கள், இலங்கையில் ஆண்டாண்டு காலமாக வசித்து வருகின்றார்கள். குடியிருக்கும் இடங்களில் எல்லாம் பள்ளிவாசல்களை எழுப்பி, தமது வாழ்க்கையை செவ்வனே நடத்தி வந்திருக்கின்றார்கள்.

முஸ்லிம்கள் ஆவதற்கு முன்னரே, அராபியர் இலங்கையில், ரஜரட்டையில் வசித்து வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கென அரசர்கள் அநுராதபுரி (நகரில்) தலம் அமைத்தார்கள். அநுராதபுரியின் தென் பகுதியில் குறிப்பிட்ட வீதிகளில் அரேபியரின் வீடுகள் இருந்தன என மஹாவம்சம் கூறுகின்றது.[2] அவ்வகை பிரத்தியேக வீதி அமைப்புக்கள் இந்தியாவிலும் இருந்தன. மலையாள நூல்கள் இக்கூற்றுக்கு ஆதாரமாகும். உதாரணமாக, துஹ்பதுல் - முஜாஹிதின்.[3]

எனவே, அராபியர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிய பின்னர் அங்கு அவர்கள் தமது பள்ளிவாசல்களை அமைத்திருக்க வேண்டும். அராபியரின் (முஸ்லிம்களின்) அநுராதபுரி வாசம், தற்காலிக விஜயம் அல்ல. தொன்று தொட்டு வந்த, நிலையான குடியிருப்பாகவே அது அமைந்தது.

அக்கால முஸ்லிம்களின் முக்கிய வியாபாரம், உயர்சாதி அரேபிய குதிரைகளை இலங்கைக்கு கொணர்தலும், அவற்றை பராமரிப்பதும், பாதுகாப்பதும் ஆகும். ரத, கஜ, துரக, பதாதி என்ற நாற்படைகளுள் குதிரைப்படை முக்கிய பங்கு வகித்தது. அரேபிய குதிரைகளை இலங்கையில் இனவிருத்தி

செய்வது இயலாத காரியம்.[4] குதிரைகள் இருக்கும் வரையில், குதிரை வியாபாரிகளும் இருப்பார்கள் என்ற ஹோதாவில், அநுராதபுரியில் முஸ்லிம்கள் செழித்து வளர்ந்தார்கள் போலும்.

அக்காலத்தில் (கி. பி. 9 ம், 10 ம் நூற்றாண்டுகளில்) பள்ளிவாசல்கள் எளிமையாக இருந்தன எனலாம்.

படிக்கல் அமைந்த நீண்ட கட்டடம் ; உள்ளே ஒரு பெரிய கூடம் ; அதன் முடிவில் மிம்பர். கட்டடத்திற்கு வெளியே உழு (புறச்சுத்தி) செய்வதற்கு தடாகம் ஒன்று ; அல்லது கிணறு. தரையில் தொழுவதற்கு கோறப்பாய்கள் பாவிக்கப்பட்டன எனலாம். மினாராக்கள், குமிழ்வுகள் அவ்வளவாக இல்லை. பெரும்பாலும் வெளியில் ஒரு மதில் பள்ளிவாசலைச் சுற்றி அமைக்கப்பட்டது. (அவ்வகையில், மலையாளத்தில் குறிப்பாக கள்ளிக்கோட்டை (கோழிக்கோடு), திராங்கனூர், ஆழப்புழை போன்ற நகரங்களில் பண்டைய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன). அநுராதபுரியின் சீதோஷ்ண நிலைமை ஒருவாறு மத்திய கிழக்கு நாடுகளின் வெப்ப நிலையை ஒத்திருந்தபடியால், அநுராதபுரி பள்ளிவாசல்களும் அரேபிய பள்ளிவாசல்களும் ஒத்து இருந்தன போலும். உதாரணமாக, இரு பிரதேசங்களிலும் கட்டடத்தின் (பள்ளிவாசலின்) வெப்ப நிலையை குறைப்பதற்காக தடித்த சுவர்களைக் கொண்டிருந்தன.[5]

அநுராதபுரி காலத்து பள்ளிவாசல்களின் நிர்மாணம் சில குறிப்பிட்ட வழிகளில் இருந்தன. மிக எளிமையானவை, "வரிச்ச" சுவர்களால் கட்டப் பட்டவை ஆகும். மூங்கில் "கழிகளை" குறுக்கும், நெடுக்குமாகக் கட்டி, அவற்றை களிமண்ணால் அடைத்து, சுவர்கள் எழுப்பினார்கள். வேறு சில பள்ளிவாசல்கள், கூழ்கற்கள் (Conglomerate) போன்ற கற்களால் கட்டப்பட்டவை. கற்களை சமனாக வெட்டி அடுக்கப்பட்டன. மேலே உள்ள கற்களின் அமுக்கமும் கீழேயுள்ள கற்களின் அமுக்கமும் சமனாக இருந்த படியால் அவை நகராது நிலை கொண்டன. இன்னும் சில பள்ளிவாசல்கள் வெவ்வேறு தினுசான கற்களால் உருவாக்கப்பட்டன. அவற்றை இணைப் பதற்கு தேன், தேன்மெழுகு, வில்வப்பழச் சாறு ஆகியவை பாவனையில் இருந்தன போலும். அவ்வகை இணைப்பு சாந்துகளை எறும்பு, கறையான் போன்றவை தாக்காத வண்ணம் அவற்றுடன் சுட்ட சுண்ணாம்பு, எருக்கலைச் சாறு சேர்ப்பது வழக்கமாகும்.

அவ்வாறான பள்ளிவாசல்கள் தொடர்ந்து இருந்தன. தினசரி தொழுகை முறைமைகள், ஜும்மா தொழுகை ஆகியவை பள்ளிவாசல்களின் பாவனையை நிரந்தரமாக்கின, நிரந்தரமாக்குகின்றன. நாளடைவில், பற்பல காரணங்களின்

உந்துதலால் அநுனுராதபுரி அரசு ஆட்டம் கண்டது. எனவே வாணிபமும் சீர்கெட்டது எனலாம். அவ்வாறான சம்பவங்களால் மக்கள் அநுராதபுரி நகரத்தை கைவிடலானார்கள். நகரத்தின் மாந்தர்கள் குறைந்தனர். நிலை பெயர்ந்தனர். அக்காலத்தில் பள்ளிவாசல்கள் தகர்ந்தனவெனச் சொல்வதற் கில்லை. வீடு போன்ற அமைப்பைக் கொண்ட பள்ளிவாசல்கள் மீண்டும் வீடுகளாக மாறின போலும்.

அநுராதபுரி மன்னர்களின் ஆதிக்கம் நெகிழ்ந்து, தளர்ந்த போதிலும் பள்ளிவாசல்கள் மீது அவ்வளவு பாதிப்பு ஏற்படவில்லை எனலாம். அதற்கு இரு காரணங்களை சுட்டிக்காட்ட முடிகின்றது. ஒன்று, அநுராதபுரி அதன் பிரதேசம் ஆகியவற்றில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் பிரமாண்டமான கலை சொட்டும் மஸ்ஜிதுகளாக பெரும்பாலும் இல்லாதபடியால், அவை கொள்ளைக்காரர்கள், துஷ்பிரயோகம் செய்வோர் ஆகியோரின் கவனத்தை ஈர்க்கவில்லை.

அதேவேளையில், மன்னார் பகுதி குறிப்பாக மன்னார் நகரம் கி. பி. 10 ம் நூற்றாண்டிலிருந்து 13 ம் நூற்றாண்டு வரையில், முஸ்லிம் ஆதிக்கத்தில் உட்பட்டு வளர்ந்தது, செழித்தது. அங்கு ஸ்தாபிதமான பெரும் முஸ்லிம் வணிகர்கள் மன்னாரை தமது வாணிப கேந்திர தானமாக அமைத்து ஏனைய பிரதேசங்களில் தமது முகவர்களை நிலைகொள்ளச் செய்தனர். முகவர்களின் முக்கிய பணி, அந்தந்தப் பிரதேசங்களின் வர்த்தகப் பொருட்களைச் சேகரித்து மன்னாருக்கு அனுப்புவதாகும். எனவே, அநுராதபுரி அவ்வகை தவளம் வணிகத்தில் சேர்ந்துக்கொண்டது.[6] எனவே, பள்ளிவாசல்கள் தமது பணி களை கிரமமாக நடத்துவதில் சிரமங்கள் ஏற்படவில்லை. மஸ்ஜிதுகள் தொடர்ந்து செயலாற்றின.

ஆனால் கி. பி. 1505 லிருந்து அநுராதபுரி பிரதேசத்திலும், முஸ்லிம்களின் நிலைமையிலும், பள்ளிவாசல்களின் நிலைகொள்ளுதலிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. தென்மேற்குக் கரையோரத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய போர்த்துக்கேயர் மன்னாரையும், யாழ்ப்பாணத்தையும் ஆக்கிரமித்தனர். அப்பகுதிகளினுள் உள்ள அரசுகளையும் அமைப்புகளையும் போர்த்துக்கேயர் சிதைத்தனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில், அவர்களின் மன்னார் வர்த்தக அமைப்புகள் சீரழிந்தன.[7] அதன் தாக்கம் அநுராதபுரிப் பிரதேச மக்களையும் பீடித்தது. முகவர் நிலையங்கள் மறைந்தன. மக்கள் தமது பொருளாதார நிலைப்பாட்டைப் பேணுவதற்காக, இதர பிராந்தியங்களுக்குச் சென்றார்கள். ஏனையோர் தமது வாழ்க்கைப் படிமங்களை சுருக்கிக் கொண்டார்கள்.

மேலும் அநுராதபுரி பிரதேசம் வாவிகளையும் குளங்களையும் கொண்ட பூமியாகும். அநுராதபுரி பண்டைய நாகரிகம் அவற்றின் அடிப்படையில் தான் எழுந்தது. தற்பொழுது அங்கு மூவாயிரம் சிறு குளங்கள் இருக்கின்றன. (முன்பும் அங்கு அவற்றுள் பல இருந்தன.) விவசாயம் அற்ற பாழ் குளங்கள் நுளம்புகளின் உற்பத்திக் கிடங்காக மாறுவது வியப்பில்லை. அதன் விளைவு, மலேரியா நோய் ஆகும். அதன் காரணமாகவும் மக்கள் தொகை குறைந்தது.

ஜமாஅத்தார் பலரை இழந்த பள்ளிவாசல்களை கானகம் சூழ்ந்து கொண்டது. அவற்றுள் சில 1850 க்குப் பின்னர், மீண்டும் காட்டிலிருந்து மீட்கப்பட்டு புனருத்தாரணம் பெற்றன. போர்த்துக்கேயரும், அவர்களைப் பின்தொடர்ந்த ஒல்லாந்தரும் அநுராதபுரி பிராந்தியத்தைப் பற்றி அவ்வளவாக அக்கறை கொள்ளவில்லை. அவ்விரு ஏகாதிபத்தியங்களும், கறுவாவை தமது வர்த்தகத்தின் அதிமுக்கிய பொருளாக மதித்தனர். அநுராதபுரி பிராந்தியம் கறுவாப் பயிருக்கு ஒவ்வாத இடமாகும்.

அநுராதபுரி மாவட்டத்தின் எழுச்சி, பிரித்தானியர் வருகைக்குப் பின் எழுந்த முன்னேற்றம் எனத் துணியலாம். 1829 ம் ஆண்டில் இலங்கைக்கு அரசியல் யாப்பை அளித்த டப்ளியு. எம். ஜி. கோல்புரூக் அக்காலத்திலேயே அநுராதபுரி பிராந்தியத்தின் வளங்களை கிரகித்துக் கொண்டார்.[8]

1840 ம் ஆண்டுக்குப் பின்னால் கோப்பி பெரும் தோட்டங்களின் எழுச்சியே, அநுராதபுரி மாவட்டத்தின் புனர்ஜீவனுக்கு புத்துயிர் அளிக்கும் சஞ்சீவியாக அமைந்தது.[9] பிரித்தானிய ஆளுனர்களும், அவர்களின் சிரேஷ்ட உத்தியோகத்தரும் அநுராதபுரி மாவட்டத்திலும், அதன் மக்களிலும் அக்கறை காட்ட ஆரம்பித்தனர்.

முஸ்லிம்களைப் பொறுத்த வரையில், மன்னாரும் முன்னேறத் தொடங்கியது. இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் மன்னார் பகுதி வழியாக தமது தோட்டங்களைச் சேர்ந்தனர். எனவே, அப்பாதைகளில் சிறுசிறு வியாபாரங்கள் ஆரம்பித்தன. அவற்றில் பலவற்றை முஸ்லிம்கள் நடத்தினார்கள். அதன் பயனாக, அநுராதபுரி பிராந்தியம் புத்துயிர், புத்துணர்வு பெற்றது. பள்ளிவாசல்கள் மீண்டும் பரிணமித்தன. மீண்டும் பள்ளிவாசல்கள் அநுராதபுரி மாவட்டத்தில் புதுக்கிய வாழ்வு பெற்றபோது அவை அநுராதபுரி மாவட்டத்தை ஏனைய கேந்திர தானங்களோடு இணைக்கும் பகுதிகளில் தோன்றின போலும்.

## அநுராதபுரி பிராந்தியத்தில் பள்ளிவாசல்களின் பங்களிப்பு

கடந்த சுமார் நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகள் வரை, அநுராதபுரி பிராந்தியம் வளர்முக பிரதேசமாக இருந்தது எனப் பல அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். அடர்த்தியான ஆனால் மனித சஞ்சாரத்தினால் சிதைந்து வரும் காடுகள் பரந்த வாவிகள் (அவற்றினால் அங்கு ஈர்க்கப்படும் விலங்குகள், பறவைகள், ஊர்வன) வெளித்தொடர்பற்ற தனித்தியங்கும் முஸ்லிம் கிராமங்கள், நிர்வாக அரச தலைமை பீடங்களிலிருந்து தொலைவு - இவை வளர்முக பிரதேசங்களை இனங்காட்டும் தடயங்களாகும். இவை யாவும் அநுராதபுரி பிராந்தியத்தில் ஆழமாகப் பதிந்திருந்தன. அவ்வகை சூழலில் பள்ளிவாசல்களின் பங்களிப்பு காத்திரமானது. சூழல் வாழ்க்கைக்கு மெருகும் பொலிவும் ஊட்டுவது.

முஸ்லிம்களின் தனித்துவத்தை அச்சொட்டாகப் பேணும் சாதனமாக பள்ளிவாசல்கள் இயங்குவது சரியானதே. பள்ளிவாசல்கள் பக்கத்தில் குர்ஆன் மத்ரஸாக்கள் நடத்துவது எளிதாகின்றது ; அத்தியாவசியமாகின்றது.[10].
தினசரி மாலை வேளைகளில் அஷர் தொழுகைக்கும் மஃரிபுக்கும் இடையில் அல்லது மஃரிபுக்கும் இஷாக்கும் இடையில் பள்ளிவாசலின் முன்றலில் மார்க்கப் பிரசங்கங்களும், சமூக கலந்தாலோசனைகளும் நடைபெறுவது வழக்கமாகிறது. முஸ்லிம்களின் ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் மீண்டும் மீண்டும் மீட்டும் நிகழ்ச்சிகளாக அவை அமைகின்றன. (இந்தியாவில் பல பாகங்களில் அத்தகைய வழக்கங்கள் பல்லாண்டு காலமாக நடைபெற்று வருகிறது)[11].

எனவே, வேறு சில பிரதேசங்களைப் போலல்லாது அநுராதபுரி மாவட்டத்தில் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் கதீப், முஅத்தின் போன்ற பதவி தாங்குபவர்களுக்கும் ஏனைய முஸ்லிம்களுக்கும் இடையில் பரஸ்பர பாசமும் மரியாதையும் இருந்தமை கண்கூடு.[12] (இந்த உறவுகள் மாறினால் சமூக வாழ்வு புதிதொரு பிரமாணத்தை அடைகிறது என்றுதான் கொள்ளல் வேண்டும்.)

அநுராதபுரி மாவட்டத்தில் பள்ளிவாசல்களிலிருந்துதான் கல்வி அறிவு வியாபித்தது. 1901, 1911 போன்ற காலகட்டத்தில் இலங்கை முஸ்லிம்களின் கல்வியறிவு, மிகவும் குறைந்து இருந்தது. அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் இதற்கு விதிவிலக்கு அல்ல.[13] அநுராதபுரி மாவட்டத்தில் குர்ஆன் ஓதுவது, கொஞ்சம் தமிழ், கணிதம் போன்ற அப்பாடசாலைகள் வளர்த்தன. சில வேளைகளில் தனிப்பட்ட படித்தவர்கள் அவ்வகையில் உதவினார்கள்.

அதே வேளையில் பள்ளிவாசல்களின் தொண்டிஎால் கல்வியறிவு பெற்றவர்கள் அக்காலத்தில் பரவலாயிருந்த முஸ்லிம்கள் சம்பந்தமான வசன நூல்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். விறகு வெட்டியார் கிஸ்ஸா, கல்சர்காமா வசனம், தமீமுல் அன்சாரி சரிதம் போன்றவை இவற்றுள் சில. கந்தூரிகளையும், சமய ரீதியான விருந்துகளையும் தருவது முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சமாக இருக்கின்றது.

இவை சில இறைநேசர்களின் பெயரால் அவர்களை நினைவு கூறும் முகமாக அமைகின்றன. அவற்றுக்காக மவ்லிதுகளும், ராத்திப்களும் பள்ளிவாசல் முன்றலில் "மேற்கட்டி" (படுதா) கட்டி நடைபெறுவது வழக்கமாக உள்ளது. (பிற சமூகத்தினர் வாழும் பிரதேசங்களில் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் ஐக்கியத்தையும் இவை பேணுகின்றன எனலாம்.) அவற்றுள் சுபுஹான மவ்லிது, இலூரி மவ்லித், குவாஜா மெய்னுத்தின் மவ்லித், ஹராரி மவ்லித், ஷெய்க் தாவூத் மவ்லித் பிரசித்தமானவை. அதேபோன்று, ராத்திப்களும் முக்கியமாக இருந்தன. பதுபாத்துல் ராத்திப், ஹதாத் ராத்திப், அதாஸ் ராத்திப், ஜலாலியா ராத்திப் என்பன. பதுர்ஸஹாபாக்கள் மவ்லிதும் மக்கள் மத்தியில் மிகப் பிரபலமாக இருந்து வந்தது.[14]

இவ்வகையான மவ்லிதுகளையும், ராத்திபுகளையும் முன்னின்று நடத்திய வர்கள் பள்ளிவாசல்களின் கதீப்கள் எனக் கருதலாம். அரபுமொழி பதப்பிரயோகங்களை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்வதில் இந்த வைபவங்கள் துணை புரிந்த அதே வேளையில், மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தையும் வளர்த்தன.

சுமார் 150 வருடங்களுக்கு முன்பதாக இலங்கையில் தரீக்காக்கள் வியாபித்தன. சில இந்தியாவின் தென் பகுதி மூலமாகவும், சில அந்தரத் தீவுகள் வாயிலாகவும், இன்னும் சில மலேசிய இந்தோனேசிய பிரதேசங்கள் மூலமாகவும் இலங்கைக்கு வந்தன போலும். (கி. பி. 14 ம் நூற்றாண்டில் இலங்கைக்கு வருகை தந்த மொரோக்கோ நாட்டு அறிஞர் இப்னு பதூதா அவர்தம் வரலாற்று நூலில், இலங்கையில் தாபிதமான தரீக்காக்களைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை.)[15]

அநுராதபுரி மாவட்டத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த, வெளிப் பிரதேசங்களோடு நிரந்தரமான தொடர்பு வைத்திருந்த முஸ்லிம்கள் தரீக்காக் களை இங்கு அறிமுகம் செய்திருக்க வேண்டும் என நினைப்பதற்கு இடம் உண்டு. இலங்கையில் தாபிதமான முக்கியமான தரீக்காக்களில் சில ; ஒன்று காதிரிய்யா தரீக்காவாகும். இஸ்லாமிய தத்துவஞானியும், இறைநேசருமான

முஹியத்தீன் அப்துல் காதர் ஜெய்லானி காதிரிய்யா தரீக்காவின் தாபகராவார். இத்தரீக்கா இந்தியாவில் பிரபலமாகி தென்பகுதியில் கீழக்கரை, பறங்கிப் பேட்டை, கோட்டாறு போன்ற நகரங்களில் பல கிளைகளை உருவாக்கி யுள்ளது. காதிரிய்யா தரீக்கா பிரமுகர்களால் நிர்வகிக்கப்பட்ட பள்ளிவாசல்கள், தக்கியாக்கள் என்ற அடைமொழியைப் பெறுவதோடு, அவை முஹியத்தீன் என்ற சொல்லையும் பள்ளிவாசலின் பெயரில் கொண்டுள்ளன. அநுராதபுரி மாவட்டத்தில் பல பள்ளிவாசல்கள் இத்தகைய பெயர்களைக் கொண்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

முஹியத்தீன் என்ற அடைமொழி கொண்ட பள்ளிவாசல்கள் அநுராதபுரி மாவட்டத்தில் நிறைய உள்ளன. அவற்றுள் சில,

1. முஹிதின் பள்ளிவாசல், மதவாச்சி.
2. முஹிதின் மஸ்ஜித், ரம்பட்டவெவ.
3. முஹிதின் பள்ளிவாசல், மரதன்வெல.
4. முஹிதின் ஜும்மா பள்ளிவாசல், அநுராதபுரி.
5. முஹிதின் பள்ளிவாசல், தலகஹவெவ.
6. முஹிதின் பள்ளிவாசல், மஹரவில.
7. முஹிதின் பள்ளிவாசல், கரடிக்குளம்.
8. முஹிதின் ஜும்மா பள்ளிவாசல், கெப்பிட்டிகொல்லாவ.
9. முஹிதின் பள்ளிவாசல், கொமரங்கவெல.
10. முஹிதின் பள்ளிவாசல், மஹாசியபலாஸ்கட.
11. முஹிதின் பள்ளிவாசல், கல்லங்குட்டிய.
12. முஹிதின் ஜும்மா பள்ளிவாசல், மரக்கல அடுவ.

அநுராதபுரி மாவட்டத்தில் பெருமளவில் ஜும்மா பள்ளிவாசல்கள் உள்ளன. கீழ்க்காணும் இடங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். கெகிரியாவ, பலவெல, நெகலிகம, கம்பரவெவ, அனுராதபுரம், கெகிராவ, கெப்பிடிகொல்லாவ, திவுவெவ, அங்குச்சிய, செப்புக்குளம், துனமெத, கரகொலவெவ, மகரவெவ என்பனவாகும்.

நாகூர் சாகுல் ஹமீத் (ரஹ்) மிகவும் பிரசித்தி பெற்ற இறைநேசர் ஆவார்கள். அவர்களை நினைவு கூறுமுகமாக, அநுராதபுரி மாவட்டத்தில் சில பள்ளிவாசல்கள் நாகூர் என்ற பெயரை தாங்குகின்றன. உதாரணமாக, நாகூர் பள்ளிவாசல், கட்டுகல்வெவ நாகூர் பள்ளிவாசல், கஹகடகில்யாய.

சில பள்ளிவாசல்கள், வேறு பல இறைநேசர் இமாம்களை நினைவு கூறுகின்றன. உதாரணமாக ஷாபிஈ பள்ளிவாசல், கட்டுக்கெல்யாய

பள்ளிவாசல் இஸ்லாத்தின் பிரதான மத்ஹப் ஒன்றின் தபாகரான இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்களை நினைவு கூறுவதாகும்.

கடந்த மூன்று வருடங்களாக அனுராதபுரம் மாவட்டப் பள்ளிவாசல்கள் துரிதமான முன்னேற்றம் கண்டிருக்கின்றன. பொருளாதார வசதி படைத்த முஸ்லிம்கள் அவற்றைக் கட்டுவதற்கும், புனருத்தாரணம் செய்வதற்கும் முன் வந்திருக்கிறார்கள். முஸ்லிம் சமய, பண்பாட்டு இராஜாங்க அமைச்சும், அதன் திணைக்களமும் அவற்றின் வளர்ச்சிக்காக பல்வேறு உதவிகளை உவந்து அளித்திருக்கின்றது.

## ஆதாரக் குறிப்புக்கள்


1. M. M. M. Mahroof, M. Azeez, M. M. Uwise, H. M. Z. Farouque and M. J. A. Rahim, *An Ethnological Survey of the Muslims of Sri Lanka* (Colombo, Sir Razik Fareed Foundation, 1986) pp. 256. Maps. Bibliography; M. M. M. Mahroof, *The Mosques of Sri Lanka;A Historical Survey* in Journal, Muslim World League, Makkah, Saudi Arabia, vol. 14 no. 11/12 (1988); and, M. M. M. Mahroof, *Wanted*; an Integrated history of Mosques in the Asian Region; in Al-Nahda (Kualalampur, Malaysia) vol. 9 no 2/4 (1989/1990)
2. Wilhelm Geiger M. Bode, *The Mahawamsa or the Great Chronicle of Ceylon* (Colombo 1960) reprint
3. *Tufjatul Mujahideen* (English Translation by S. Hossain (Madras)
4. Lady Anne Blunt, *The History of the Arabian Horse* (London 1888)
5. Edward William Lane, *The Manners and Customs of the Medern Egyptians* (London 1834); Anelia B. Edwards, *A thousand Miles up the Nile* (London, 1989–reprint of original 1889 edition)
6. Sir Alexander Johnston, *Letter to Secretary, Royal Asiatic Society of Gt. Britain and Ireland* (1834) (reprinted in I. L. M. Abdul Aziz, *Ethnology of the Moors of Ceylon . .*) (Colombo 1956 reprint)
7. M. M. M. Mahroof, *Impact of European-Christian Rule on the Muslims of Sri Lanka;A Historical Analysis* in *Islamic Studies* (International Islamic University, Islamabad, Pakistan) vol. 29 no. 4 (Winter 1990)
8. G. C. Mendis (editor), *The Celebrooke-Cameron Papers; Documents on British Colonial Policy in Ceylon*–1833 (Oxford, 1956) two vols
9. H. A. J. Hulugalla, *British Governors of Ceylon* (Colombo)
10. M. M. M. Mahroof, *A Millennium of Madrassah Education in Sri Lanka;* in Journal WML (Makkah) vol. 15, No. 11/12 (July 1988); M. M. M. Mahroof, *A Millennium of Quran Schools in Sri Lanka; The Chequered Career of a Folk Tradition* in Muslim Education Quarterly (Cambridge, England) vol. 6 no. 1 (Autumn 1988)

11. cf. Abbe Dubois, *Journeys in India* (English translation); M. M. M. Mahroof, *Some Aspects of Social Organization of the Muslims of Ceylon 1901-1912 in Serendib Islamic Review* (Beruwela) vol 1 no. 1 (January 1981)

12. ibid.

13. Article in Rate of Literacy in *Education in Ceylon A Centenary Volume* (Ministry of Education, Colombo, 1969)

14. M. M. M. Mahroof, (a) *The Enactment of Wakf Legislation in Sri Lanka; The Law in Context* in Journal Institute Muslim Miriority Affairs, Jeddah/London (July 1986 (b) *Islamic Law in Sri Lanka; Formal and Informal Aspects* in Islamic Studies (Pakistan) vol. 20 no. 1 (Spring 1990)

15. H. Gibbs (editor *Ibn Battuta; Travels inAsia andAfrica* (London, 1990 reprint of original Travellers Library edition); also, Husseins's translation of Ibn Batuta's Travels, Baroda Oriental Series)

# அநுராதபுர மாவட்டப் பள்ளிவாசல்கள்

01. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், பத்தாவ, கபுகொல்லாவ
02. மஸ்ஜிதுல் ஹுதா ஜும்மாப் பள்ளிவாசல், பள்ளி வீதி, கஹடகஸ்திகிலிய
03. ஜும்மாப் பள்ளிவாசல், பண்டாரபொதான, மடாடுகம
04. கெகிராவ ஜும்மாப் பள்ளிவாசல், கெகிராவ
05. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், பிரதான வீதி, மதவாச்சிய
06. பலலுவெவ ஜும்மாப் பள்ளிவாசல், பலலுவெவ, பலாகல
07. கல்லஞ்சியாகம ஜும்மாப் பள்ளிவாசல், கல்லஞ்சியாகம, காகம
08. நெல்லியாகம ஜும்மாப் பள்ளிவாசல், நெல்லியாகம, பலாகல
09. முகிதீன் மஸ்ஜித், றம்பட்வில, கஹடகஸ்திகிலிய
10. கொமரங்கடவெல ஜும்மாப் பள்ளிவாசல், கொமரங்கடவெல, அநுராதபுரம்
11. கம்பிரிகஸ்வெவ ஜும்மாப் பள்ளிவாசல், கம்பிரிகஸ்வெவ
12. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், அலஹபெருமகம, விஜிதபுர
13. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், நெலுகொல்லகட, ரட்மல்கஹவெவ
14. மஸ்ஜிதுல் மன்பஹுல் ஹஸனாத் ஜும்மாப் பள்ளிவாசல், ஹொரவபொத்தான
15. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், நாச்சதுவ, ஹிதோகம
16. முகிதீன் பள்ளிவாசல், மரதன்கடவெல
17. ஜும்மாப் பள்ளிவாசல், டஹனகவெவ, முகிரியாவ
18. கட்டியாவ ஜும்மாப் பள்ளிவாசல், கட்டியாவ, கலாவெவ
19. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், பள்ளி வீதி, புதிய நகர், அனுராதபுரம்
20. முஸ்லிம் பள்ளிவாசல், இகிரிகொல்லாவ, வஹமல்கொல்லவ
21. கலாவெவ முஸ்லிம் பள்ளிவாசல், கலாவெவ, விஜிதபுர
22. நாகூர் ஜும்மாப் பள்ளிவாசல், கடவத் ரத்மலெ, ஹொரவபொத்தான
23. நேகம முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், நேகம, நேகம்பக
24. ஹொரபொல ஜும்மாப் பள்ளிவாசல், ஹொரபொல, கெகிராவ

25. தக்கியா பள்ளிவாசல், எபாவெல
26. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், புத்தளம் வீதி, நொச்சியாகம
27. முஸ்லிம் பள்ளிவாசல், யாழ்ப்பாண வீதி, மிஹிந்தலை
28. முகிதீன் பள்ளிவாசல், தலகஹவெவ, ரம்பாவ, அனுராதபுரம்
29. நாகூர் ஜும்மாப் பள்ளிவாசல், கனதர — கடுகெலியாவ, கைபிடியாவ, இஹலகம
30. முகிதீன் பள்ளிவாசல், இஹலகொடியாவ, அனுராதபுரம்
31. முகிதீன் பள்ளிவாசல், மரக்கலஹல்மில்லாவ, பூனாவ
32. ஜும்மாப் பள்ளிவாசல், புதுதென்னாவ, காகம
33. உடனிடிகம ஜும்மாப் பள்ளிவாசல், உடனிடிகம, மடாடுகம
34. மடாடுகம ஜும்மாப் பள்ளிவாசல், கெகிராவ வீதி, மடாடுகம
35. ஜும்மாப் பள்ளிவாசல், நிகவெவ, கனேவல்பொல
36. ஜும்மாப் பள்ளிவாசல், ஆனஒலந்தாவ, கபுகொல்லாவ
37. ஜும்மாப் பள்ளிவாசல், வீரச்சோலை, கபுகொல்லாவ, ஹொரவ பொத்தான
38. முகிரியாவ முஸ்லிம் பள்ளிவாசல், முகிரியாவ, கலென்பின்துனுவெவ
39. ஜும்மாப் பள்ளிவாசல், ஹெட்டுவெவ, மஹபொதான
40. நாகூர் பள்ளிவாசல், மஹகிரிபேவ, கஹடகஸ்திகிலிய
41. ஜும்மாப் பள்ளிவாசல், கலுமீவகடவெவ, ரத்மல்கஹவெவ
42. ஜும்மாப் பள்ளிவாசல், தெமடகம, திரப்பன
43. ஜும்மாப் பள்ளிவாசல், கிவுலகட, ஹொரவபொத்தான
44. முகிதீன் பள்ளிவாசல், எய்தல்வெடுனுவெவ, ஹொரவபொத்தான
45. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், வலஹவிதவெவ, ஹொரவபொத்தான
46. எலவெவ பள்ளிவாசல், எலவெவ, கெபிடிகொல்லாவ
47. ஜும்மாப் பள்ளிவாசல், அலாவ, ஆலன்குளம், கெபிடிகொல்லாவ
48. மஸ்ஜிதுல் அன்வர் ஜும்மாப் பள்ளிவாசல், நாச்சியாதீவு வீதி, சிராவஸ்திபுர
49. முஸ்லிம் பள்ளிவாசல், இஹலபுளியங்குளம், மரதன்கடவெல
50. முஸ்லிம் ஜும்மாப் பள்ளிவாசல், முகரவெவ, ஹொரவபொத்தான
51. மஸ்ஜிதுல் முனவ்வரா, முஸ்லிம் கொளனி, சேனபுர
52. மஸ்ஜிதுல் நஜாத் ஜும்மா மஸ்ஜித், இஹலகுபுக்கொல்லாவ, ஹொரவபொத்தான
53. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், கொமரங்கடவெல, கலென் பின்துனுவெவ
54. மஸ்ஜிதுல் அஸ்ஹர், கனேவல்பொல, கெகிராவ
55. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், மஹஸியம்பலாகஸ்கட, நேரியகுளம்,

56. ஜும்மா மஸ்ஜித், திவுல்வெவ, கஹடகஸ்திகிலிய
57. ஜாமியுல் மிலுபர் ஜும்மாப் பள்ளிவாசல், நிக்கவெவ, ஹொரவ பொத்தான
58. ஜும்மாப் பள்ளிவாசல், அலிகிம்புலாகல, ஹொரவபொத்தான
59. ஜும்மாப் பள்ளிவாசல், அங்குநொச்சியாவ, ஹொரவபொத்தான
60. வெலிகொல்லாவ ஜும்மாப் பள்ளிவாசல், வெலிகொல்லாவ, கலென் பின்துனுவெவ
61. கலென்பின்துனுவெவ ஜும்மாப் பள்ளிவாசல், கலென்பின்துனுவெவ, சீப்புக்குளம் வீதி, அநுராதபுரம்
62. சீப்புக்குளம் ஜும்மாப் பள்ளிவாசல், திருகோணமலை வீதி, சீப்புக்குளம்
63. துனுமன்தலாவ ஜும்மாப் பள்ளிவாசல், துனுமன்தலாவ, கலென்பின்துனுவெவ
64. கரகொல்லாவ ஜும்மாப் பள்ளிவாசல், கரகொல்லாவ, உபுல்தெனிய
65. முகிதீன் பள்ளிவாசல், கொல்லன்குட்டிகம, மரதன் கடவெல
66. மஸ்ஜிதுல் ஹஸனாத் ஜும்மாப் பள்ளிவாசல், உடும்புகல, நேரியகுளம்
67. அல் மஸ்ஜிதுல் நூரியா, நூறு ஏக்கர் பிரிவு, ஹொரவபொத்தான
68. மஸ்ஜிதுல் தக்வா ஜும்மாப் பள்ளிவாசல், இவுலகட, கம்பிரிகஸ்வெவ
69. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், மரக்கல எட்ட, வீரவெவ, கெபிடிகொல்லாவ
70. மஸ்ஜித் முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், கெட்டியாவ, பரஸன் கஹவெவ
71. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், குடாநெலுபேவ, ஹிதோகம
72. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், ஹொரவபொத்தான வீதி, கெபிடிகொல்லாவ
73. முகிதீன் ஜும்மாப் பள்ளிவாசல், கோவில்பண்டவெவ, பரஸன் கஸ்வெவ
74. ஜும்மாப் பள்ளிவாசல், ஹலன்பகஸ்வெவ, கம்பிரிகஸ்வெவ
75. முகிதீன் பள்ளிவாசல், அலுத்கம, கம்பிரிகஸ்வெவ
76. ஜாமியுல் ஸலாம் ஜும்மாப் பள்ளிவாசல், அசிரிகம, கம்பிரிகஸ்வெவ
77. மஸ்ஜிதுன் நூர் ஜும்மாப் பள்ளிவாசல், முரியகடவெல, கஹடகஸ் திகிலிய
78. மஸ்ஜிதுஸ் ஸலாம் ஜும்மாப் பள்ளிவாசல், பமுனுகம, முரியகடவெல, கஹடகஸ்திகிலிய
79. முகிதீன் பள்ளிவாசல், முஸ்லிம் கொளனி, பரஸன்கஸ்வெவ
80. முகிதீன் தக்கியா, மஹசியம்பலாகஸ்வெவ, கம்பிரிகஸ்வெவ

81. உல்பொத்த ஜும்மா பள்ளிவாசல், உல்பொத்த, கனேவல்பொல
82. அல் மஸ்ஜிதுல் மனாருல் ஹுதா, மரக்கல ஹல்மில்லாவ, சம்மளன் குளம், பூனாவ
83. அல் மஸ்ஜிதுல் ரப்பானியா, மாவத்தாவ, ஹொரவபொத்தான
84. மஸ்ஜிதுத் தக்வா ஜும்மாப் பள்ளிவாசல், பண்டாரபொதான, புபோகம, மாட்டுகம
85. அல் அக்ஸா ஜும்மாப் பள்ளிவாசல், கடன்டுகம, புபோகம
86. முகிதீன் தக்கியா, மரதன்கடவெல வீதி, ஒலுகரந்த, கெகிராவ
87. அல் மஸ்ஜிதுல் நூரானியா, அமானவெட்டி, கலாவெவ
88. மஸ்ஜிதுல் முனவ்வரா ஜும்மாப் பள்ளிவாசல், கடுகெலியாவ, கம்பிரிகஸ்வெவ

# 4

# இலக்கியப் பாரம்பரியங்கள்

— பேராசிரியர் ம. மு. உவைஸ் —

மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது இலக்கியம். அந்தப் பிரதிபலிப்பை எடுத்துக் காட்டுவது மொழி. அந்த மொழிப் பரம்பலைப் பிரதிநிதித்துவம் செய்வது பள்ளி செல்லும் மாணவர் சமுதாயம். ஒரு மாவட்டத்தில் உள்ள மாணவர் சமுதாயம் எந்தெந்தத் துறைகளில் சிறந்து விளங்குகின்றது என்பதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்பது அந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிக்கூடங்களின் பரம்பலேயாகும். அத்தகைய பள்ளிக்கூடங்களின் போதனா மொழி எதுவோ, அதுவே அந்த மாவட்டத்தில் இலக்கியப் பாரம்பரியம் ஒன்று உருவாவதற்குக் காலாக அமைந்து விடுகின்றது.

பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியே பொதுவாகப் பள்ளிக் கூடங்களில் போதனா மொழியாக அமைகிறது. அநுராதபுர மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கே வாழும் மக்களுள் பெரும்பான்மையானோர் சிங்கள மக்களாவர். ஆதலினால் அங்கே சிங்கள மாணவர்களின் போதனா மொழி பெரும்பாலும் சிங்களமாகவே அமைந்துவிடுகின்றது.

தமிழ் பேசும் மக்களும் அநுராதபுர மாவட்டத்தில் வாழ்கின்றனர். அங்ஙனம் தமிழ் பேசும் மக்களுள் பெரும்பாலானோர் முஸ்லிம் மக்களாவர். பெரும்பான்மையாக முஸ்லிம் மக்கள் தமிழ் மொழியையே வீட்டு மொழியாகப் பயன்படுத்தி வருவதால், அத்தகைய முஸ்லிம் மாணவரின் போதனா மொழி தமிழாகவே அமைந்து விடுகின்றது. தமிழ் மொழியைப் போதனா மொழியாகக் கொண்டு பயின்ற முஸ்லிம் மாணவர், பிற்காலத்தில் அவர்கள் இலக்கிய பணி புரியும் பொழுது தமிழிலே தான் இலக்கியங்களை ஆக்க முற்படுவர்.

அநுராதபுர மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மாணவரின் போதனா மொழி என்பது பற்றியும் அவர்களின் சாதனைகள் எவை என்பது பற்றியும் அறிய முற்படின், அவர்கள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் தோற்றிய ஏதாவது ஒரு பரீட்சையைப் பற்றிய விவரங்களையும் அந்தப் பரீட்சையில் அந்த மாணவர்

தமது திறமையைக் காட்டி உள்ள விவரங்களையும் தான் அறிதல் இன்றியமையாததாகும்.

1979 ஆம் 1987 ஆம் ஆண்டுகளை எடுத்துக்கொள்வோம். அநுராத புரத்தில் உள்ள சாஹிறா முஸ்லிம் வித்தியாலயம், கம்பிறிஸ்கம மன் அருள் உலூம் முஸ்லிம் மகாவித்தியாலயம், பலலுவெவ முஸ்லிம் வித்தியாலயம், ஹொறொவபதன முஸ்லிம் வித்தியாலயம், கணதற கட்டுகெலியாவ முஸ்லிம் வித்தியாலயம் (இஹலகம), கம்பிறிஸ்கஸ்வெவ, அலுத்கம முஸ்லிம் வித்தியாலயம், கள்ளஞ்சியகம அறபா முஸ்லிம் வித்தியாலயம், பலகல, நெலியகம முஸ்லிம் வித்தியாலயம், நச்சதுவ முஸ்லிம் மகா வித்தியாலயம், கணதுறகட்டுகெலியாவ முஸ்லிம் வித்தியாலயம், தளகஹவெவ முஸ்லிம் வித்தியாலயம், மதவாச்சிய முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம், வஹமல்கொல்லாவ, இங்கிரிகொல்லாவ முஸ்லிம் வித்தியாலயம் முதலிய முஸ்லிம் வித்தியாலயங்களிலிருந்தும் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத் திலிருந்தும் முஸ்லிம் மாணவ மாணவிகள் 1979 ஆம் ஆண்டிலும் 1987 ஆம் ஆண்டிலும் திசெம்பர் மாதத்தில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றி உள்ளனர்.

1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர)ப் பரீட்சைக்கு அநுராதபுர மாவட்டத்திலிருந்து 163 முஸ்லிம் மாணவ மாணவியரே தோற்றி உள்ளனர். அவர்களுள் எட்டுப் பேர் மாத்திரமே எட்டுப் பாடங்களிலும் சித்தி அடைந்துள்ளனர். அவர்கள் அனைவருடைய போதனா மொழி தமிழாகத்தான் இருந்திருக்கின்றது. 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றிய 115 முஸ்லிம் மாணவ மாணவியருள் எழுவர் மாத்திரமே எட்டுப் பாடங்களிலும் சித்தி எய்தி உள்ளனர். அவர்களுடைய போதனா மொழியும் தமிழாகத்தான் இருந்திருக்கின்றது. அவர்களுள் ஒரு சிலரே சிங்கள மொழியை இரண்டாம் மொழியாகக் கொண்டு பரீட்சைக்குத் தோற்றி உள்ளனர். அங்கும் கூட அத்தகையோர் திறமைகாட்டி உள்ளனர் என்று சொல்லமுடியாது. மற்றுஞ் சிலர் ஆங்கிலத்தை சர்வதேச மொழியாகத் தேர்ந்து பரீட்சைக்குத் தோற்றி உள்ளனர். அங்கும் அவர்களுடைய திறமையை அவர்கள் காட்டவில்லை.

அநுராதபுர ஸாஹிரா மகா வித்தியாலயம் 1968 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்றது. அது 1993 ஆம் ஆண்டு அதன் வெள்ளி விழாவைக் கொண்டாட உள்ளது. அந்தக் கல்லூரி சிரேட்ட மாணவர் மன்றம் பிறையொளி என்னும் சஞ்சிகையை றோனியோ முறையில் வெளியிட முன்வந்துள்ளது. அதன் 20 ஆவது இதழ் மே — ஜூன் மாத இதழாக வெளிவந்துள்ளது. அடுத்த

ஜனவரி மாதம் அது அதன் வெள்ளிவிழாவைக் கொண்டாட உள்ளது. மாணவ மாணவியரின் தரமான கட்டுரைகள், கவிதைகள் அதில் இடம் பெற்றிருப் பதைக் காணலாம். எதிர்காலத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கர்த்தாக்களைத் தோற்றுவிப்பதற்கு இத்தகைய இதழ்கள் நிச்சயம் உதவி புரியக் கூடியவை. மே — ஜூன் இதழில் வெளிவந்துள்ள ஐ. எச். முபாயிஸ் ஹக் என்பவரின் இரு கவிதைகள் பின்வருமாறு அமைந்துள்ளன :

(1) பெண் இனம் அழிந்து பேயினம் விளைந்த
ஜாஹிலியா இருளில் இரவு சூரியனாக
மனிதக் குலத்தின் மன்னராக
அல்லாஹ்வின் றசூலாக வந்துதித்தார்
மாபெருந் தலைவர் முகம்மது (ஸல்)
ஹம்ஸா றலியின் ஈரலை
கடித்துமிழிய ஹிந்து என்னும்
பெண்ணுக்கே மனம் குளிர்ந்து
மன்னிப்பளித்தார் மகத்தான
தலைவர் முகம்மது (ஸல்)
வாழ வக்கற்ற காபிர்களுக்கு
வாழ வழி வகுத்த உண்மையான
தலைவர் முகம்மது (ஸல்)
இறுதிவரை நின்று
இஸ்லாத்தைப் பரப்பிய
இறுதி நபி முகம்மது (ஸல்)

(2) முன்னேறப்பா முன்னேறு
முன்னோர் வழியில் முன்னேறு
கண்ணே மணியே முன்னேறு
கட்டிக் கரும்பே முன்னேறு
பள்ளி சென்றே முன்னேறு
பாடம் படித்தே முன்னேறு
துள்ளித் துள்ளி முன்னேறு
துன்பம் தள்ளி முன்னேறு
பிறரை மதித்தே முன்னேறு
பெற்றோர் மகிழ முன்னேறு
உறவாய் நல்ல நண்பர்களை
உடன் கொண்டே முன்னேறு
பொய் சொல்லாமல் முன்னேறு

பொறுமையோடு முன்னேறு
மெய்யே பேசி முன்னேறு
மேன்மை பெறவே முன்னேறு

பிறையொளி 21 வது இதழ் ஜூலை — ஓகஸ்ட் இதழாக வெளிவந்துள்ளது. அந்த இதழிலும் ஏ. பி. நியாஸ் என்பவரின் கடமை பற்றிய கருத்து, கவிதையாக உருவாகி உள்ளது பின்வருமாறு :

கடமை

காலைக் கதிரிலே எழுந்து
காலைக் கடன்களை முடித்து
கல்வி என்னும் ஏட்டினைப் படித்து
கருணை மிகுந்தவனாய்
கல்லூரி சென்று நீயும்
கண்ணான குருமார் சொல்வதனை
கண்ணியத்துடன் ஏற்று
கடமைதனைச் சிரமேந்தி
கல்வியினைக் கசடறக் கற்பாயாக.

தற்காலப் பின்னணி

அநுராதபுரம் இலங்கையின் தலைநகராகத் திகழ்ந்த பண்டைய காலத்தில் அறபு மக்கள் அங்கு வாழ்ந்து வந்துள்ளனர். பாஹியன் என்று அழைக்கப்பட்ட சீன தேச சஞ்சாரியின் கூற்றுக்கிணங்க, அன்றைய அரச அவையில் நான்கு அறபியர் ஏனையரோடு அரச ஆலோசகர்களாக விளங்கி உள்ளனர். இது பற்றிய மேலதிகமான விவரங்கள் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றிய கட்டுரையில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

அன்றைய அறாபியர் முஸ்லிம்களின் இலங்கை வருகைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தோராவர். அறாபியரையும் ஏனைய வெளிநாட்டவர்களையும் இலங்கைக்கு ஈர்க்கும் ஆற்றல் பாவா ஆத மலைக்கு இருந்தது. அதனைத் தரிசிக்கவே பெரும்பாலானோர் இலங்கைக்கு வந்துள்ளனர். அரச அவைக்களத்தில் உறுப்பினராக அமைவதற்கு அந்தக் கால அறாபியர் ஆற்றலிலும் ஒழுக்கத்திலும் கல்வி கேள்விகளிலும் சிறந்து விளங்கியவர்களாக இருந்திருக்க வேண்டும். அத்தகையோரின் பிற்காலச் சந்ததியினராக

அநுராதபுரத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் அவர்களுக்கே உரிய ஓர் இலக்கியப் பாரம்பரியத்தை உருவாக்கி இருத்தல் வேண்டும்.

சிங்கள இலக்கியம் பற்றிய எமக்குக் கிடைத்துள்ள தகவல்களும் பிற்காலத்தனவாகவே இருக்கின்றன. காசியப்ப மா மன்னன் காலத்தில் தோன்றிய சீகிரியச் சுவரோவியங்களும் அந்தச் சுவரோவியங்கள் பற்றிப் பொறிக்கப்பட்டிருந்த மக்கள் கருத்துக்களுமே சிங்கள இலக்கியத்தின் மிகப் பழமையான இலக்கியங்களாக கருதப்படுகின்றன. சீகிரிய சுவரோவியங்களைப் பார்க்கச் சென்ற பண்டிதரும் பாமரரும் அந்தச் சுவரோவியங்கள் பற்றிய தமது கருத்துக்களை அங்கே பொறித்துவிட்டுச் சென்றுள்ளனர். அவை நூலுருப் பெற்றுள்ளன. அவற்றோடு பண்டைய கல்வெட்டுக்கள் தவிர்ந்த பண்டைய சிங்கள நூல்களைப் பெறுதல் அரிதினும் அரிதாகும். தமிழ் நூல்களும் அத்தகையனவே. முஸ்லிம் புலவர்களால் படைக்கப்பட்ட நூல்களைத் தேடிப் பிடிப்பது கடினமாயிருக்கும் அல்லவா ?

அநுராதபுரம் தமிழ், சிங்களம் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்கு எல்லைக் கோடாக அமைந்துள்ளது. அமைதியற்ற நிலைமை காரணமாகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்கள் அழிந்தொழிந்து போயின என அநுராதபுரத்தில் வாழும் அன்பர் ஏ. ஸி. எம். ஜவ்ஹர்ஷா குறிப்பிடுகிறார். அவர் அநுராதபுர மாவட்டத்தில் வாழ்ந்த தமிழ் இலக்கியம் படைத்த முஸ்லிம் புலவர்கள் பற்றிய தகவல்களைத் தந்து உதவி உள்ளார்.

அத்தகைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பிரமுகர்களுள் ஒருவர் முகம்மது மீறா லெவ்வை ஆலிம் அவர்கள். 1900 ஆம் ஆண்டில் பிறந்தவர். சிங்களம், தமிழ், அறபு, ஆங்கிலம், பாளி முதலிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றிருந்தவர். அவர் ஒரு வரகவியாகச் சிறந்து விளங்கி உள்ளார். முதன் முதலாக சித்திலெவ்வை அறபிக் கல்லூரியை ஆரம்பித்து அதன் முதல் அதிபராகத் திகழ்ந்தார். அநுராதபுர மாவட்டத்திலிருந்து முதன் முதலில் தமிழகம் சென்று அங்குள்ள அறபிக் கல்லூரியில் பயின்று மௌலவிப் பட்டம் பெற்றவராவார்.

முகம்மது மீறா லெவ்வை ஆலிம் சாகிபு அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பொருள் உதவி புரிந்தவர் முகாந்திரம் முகையதீன் தம்பி மரைக்காராவார். மூன்று தொகுப்புக்களில் அவரது கவிதைகள் உருப் பெற்றுள்ளன.

1929 ஆம் ஆண்டில் மறைந்து அநுராதபுரத்தில் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ள சைகு சிக்கந்தர் வலியுல்லாஹ் அவர்களின் சிறப்பாற்றல்களைப் பற்றி "சிக்கந்தர் மகத்துவக் கும்மி" என்னும் ஒரு நூலை இயற்றி உள்ளார். ஒழுக்கம் பற்றிய நூலை அவர் 1938 இல் வெளியிட்டுள்ளார். அவர் 1935 ஆம் ஆண்டில் இயற்றிய அஹ்காமுத்தீன் என்னும் தீன் நெறி நியமம் இன்னும் அச்சியற்றப்படவில்லை. விதி — அறிவு — விளக்கம் என அந்நூல் குறிப்பிடுகின்றது. கைப் புட்பச் சிசு மாலை என்னும் நூலை 1930 ஆம் ஆண்டளவில் இயற்றிய அ. லெ. உமறு லவ்வை ஆலிம் சாகிபு என்பவர் அஹ்காமுத்தீன் என்னும் நூலுக்குச் சாற்றுகவி வழங்கி உள்ளார். அவருடைய சாற்று கவியாக அமைந்த வெண்பா வருமாறு :

ஆலோலஞ் செய்யும் அருங்கடல்சூழ் பூவுலகில்
சாலச் சிறந்ததோர் சத்யமறை — மேலாந்
திருவிஸ்லாங் கூறுநெறி செப்பினார்மாந் தர்மன்
இருள்விலகப் பாவா யிசைத்து

ஆழ்ந்த அறபு ஞானமும் சிறந்த தமிழ் அறிவும் சமயத் தெளிவும் மிக்கவராய் விளங்கினார் உமறு லவ்வை ஆலிம் சாகிப் அவர்கள்.

அன்புதாசன் எனப் புனைப்பெயர் பூண்டவர் காலியைப் பிறப்பிடமாகக் கொண்டு அநுராதபுரத்தில் வாழ்ந்த ஏ. ஸி. முகம்மது ஹனிபா என்பவர். இலங்கைச் செய்தித் தாள்களில் கட்டுரைகள் பல இவர் எழுதி உள்ளார். இவருடைய மூத்த புதல்வர் ஜவஹர்ஷா தமது தந்தையாரைப் பின்பற்றித் தம்மை அன்பு ஜவஹர்ஷா என அழைத்து வருகிறார்.

முகம்மது மீறா லவ்வை அவர்களின் புதல்வரான முகம்மது ஹுசைன் கல்லூரிச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து அரும் பணியாற்றி வந்துள்ளார். இவர் தம் சிறுகதைகள் இலங்கை நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. சமாதான நீதவானாக விளங்கிய எம். ஏ. சுல்தான் என்பவர் இளைஞன் குரல் என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்ததோடு எம். ஸி. எம். சுபைர் அவர்களை ஆசிரியராகக் கொண்ட மணிக்குரல் மாசிகையில் இவருடைய ஆக்கங்கள் இடம் பெற்றிருந்தன. மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் சிலவற்றையும் இவர் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இலக்கிய ஆர்வலர்க்கெல்லாம் போஷகராக அநுராதபுரத்தில் சிறந்து விளங்கிய வள்ளல் முகாந்திரம் முகையதீன் அவர்களின் கனிஷ்ட புதல்வர் சுல்தான் என்பவர். வித்தகன் என அழைக்கப்பெற்ற காலஞ்சென்ற எஸ். எம்.

சாலி சிறுகதை, கவிதை, கட்டுரைகள் பலவற்றை எழுதி உள்ளார். பேரறிஞர் அண்ணாவின் தேன் துளிகள் என்பது இவர் வெளியிட்ட நூலாகும்.

இன்று வாழும் எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் அன்பு ஜவஹர்ஷா. 'மாணவர் குரல்' என்னும் சஞ்சிகையின் ஆசிரியராக எழுத்துத் துறையில் புகுந்தார். தமிழ்ச் சுடர், புத்தொளி போன்ற சஞ்சிகைகளில் துணை ஆசிரியராகக் கடமை ஆற்றி உள்ளார். சிறுகதை, கவிதை, புதுக்கவிதைகள் இயற்றி உள்ளார். ஸாஹிராக் கல்லூரியினால் வெளியிடப்படும் பிறையொளி யின் முன்னோடியாகத் திகழ்ந்தார். புத்துலகம் படைப்போம், சிதைந்து போகும் சிறப்புக்கள், பொறிகள், காவிகளும் ஒட்டுண்ணிகளும் என்பன அன்பு ஜவஹர்ஷாவின் தொகுப்பு நூல்களாகும். பலாலி ஆசிரியர் கலாசாலை முஸ்லிம் மஜ்லிஸின் 'யாழ் பிறை' என்னும் சஞ்சிகையின் செயலாசிரியராகக் கடமை ஆற்றி உள்ளார்.

அநுராதபுரத்தின் சீதக்காதியாக விளங்கியவர் 1889 இல் பிறந்து 1967 ல் காலமான முகாந்திரம் முகைதீன் என்பவர், தமது சொத்து, முதுசொம் எல்லாம் இலக்கியப்பணிக்காக அர்ப்பணஞ் செய்தார். நூல்களை வெளியிடுவதிலும் அறபுப் பாடசாலைகளைத் தொடங்குவதிலும் அவர் முன்னோடியாகத் திகழ்ந்தார்.

சட்டத்தரணி எம். எச். முகம்மது சஹீர் இலங்கை சட்டக் கல்லூரியினால் வெளியிடப்பட்ட மீஸான் சஞ்சிகையில் முஸ்லிம்களின் பேச்சுத் தமிழ் பற்றி ஆராய்ச்சி ரீதியிலான கட்டுரை எழுதி இருந்தார். சிறுகதை, புதுக்கவிதை, உருவகக்கதை போன்ற பல ஆக்கங்களின் ஆசிரியர் எப். றாசீக் பரீட் அண்ணன் என்னும் சஞ்சிகையை வெளியிட்டு வருகிறார். இந்த மாவட்டக் கவிஞர்களின் கவிதைகளை ஒன்று திரட்டி 'மந்தாரம்' என்னும் பெயரில் தொகுப்பு நூலொன்றை வெளியிடுவதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

பெண் எழுத்தாளர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் அப்றினா பளீல்தீன். இயற்பெயரிலும் பல புனைப் பெயர்களிலும் சிறுகதை, உருவகக் கதை, புதுக்கவிதை, கட்டுரை என்பன இவர்தம் பேனாவில் உருவாகி உள்ளன. கெக்கிராவையில் ஆசிரியராகப் பணிபுரியும் ஏ. எஸ். சஹானா என்பவர், கெக்கிராவ சஹானா எனப் புனைப் பெயரில் மறைந்திருந்து சிறுகதைகள் எழுதியுள்ளார். மல்லிகை போன்ற சஞ்சிகைகளில் அவை இடம்பெற்றுள்ளன.

1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் 30 ஆந் தேதிகளிலும் ஜூலை மாதம் 1 ஆந் தேதியும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டின் ஓர் அங்கமாக நிகழ்ந்த கவியரங்கில் பங்கு பற்றி கவிதை பாடும் வாய்ப்பைப் பெற்றவர் பதுறுன்னிஸா இஸ்ஸத் என்பவர். இவரும் அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்தவராவார். ஏ. பி. எஸ். ஹமீட், ஏ. பி. மஹ்முத், கே. எம். அஹமட் கான், நூர் ஜஹான் ஹனிபா, பாத்திமா பேகம், எஸ். எச். அபுல் ஹஸன், எம். எஸ். எம். பௌமி, எம். எஸ். எம். பௌசி ஆகியோர் அநுராதபுர மாவட்டத்தைச் சார்ந்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர் களாவர். ராவுத்தர் நைனார் முஹம்மது அவர்கள் வானொலி நிகழ்ச்சிகளில் பங்குபற்றித் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு தமிழ் மொழி வளர்ச்சியிலும், இலக்கிய வளர்ச்சியிலும் அநுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் அன்று தொட்டு இன்றுவரை ஆற்றிவரும் பணிகள் பாராட்டுக்குரியனவாகும்.

# 5

# வாழ்வியலும் பண்பாடும்

— எம். எஸ். எம். அனஸ் —

அநுராதபுர மாவட்டத்தின் அனேக முஸ்லிம் கிராமங்கள் குளங்களை அண்மித்த நிலப்பரப்பிலேயே அமைந்துள்ளன. இக் கிராமங்களில் பல அதன் ஆரம்பக் குடியேற்றக் காலங்களில் அல்லது அதற்கு முன்னர் பெரும்பாலும் தூர்ந்துபோன குளங்களின் உட்பகுதியிலே காணப்பட்டன. குளங்கள் திருத்தப்பட்ட காலங்களிலேயே பல கிராமங்கள் குளத்திற்கு வெளியே உள்ள நிலப்பரப்பில் உருவாகின. ஜனசஞ்சாரமற்ற காலங்களில், மலேரியாவுக்கு அஞ்சி மக்கள் குடியேறி வாழத் தயங்கிய போது முஸ்லிம் குடியேற்றங்கள் இப்பிரதேசத்தில் நிகழ்ந்துள்ளன. குளங்களும் சூழ உள்ள காடுகளுமே அன்றிலிருந்து இன்று வரை இம் முஸ்லிம் மக்களின் வாழ்க்கையின் பிரதான ஆதாரங்களாக விளங்கி வருகின்றன.

சேனைச் செய்கை, வேளாண்மை, மீன்பிடி, சிறுவியாபார முயற்சிகள், காடுசார்ந்த தொழில்கள், இவையே இப் பிரதேசத்து முஸ்லிம்களின் பாரம்பரியத் தொழில்களாகும். கால்நடை வளர்ப்பு மற்றொரு முக்கிய தொழிலாகும். ஒவ்வொரு குடும்பமும் தனக்கென ஆடு மாடுகளைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் ' பட்டிகள் ' முக்கிய பகுதியாக அமைந்தன. கால்நடை அவர்களின் பரம்பரைச் சொத்தாகும்.

## வீடு

பழைமையான அல்லது பாரம்பரிய வீடுகள் மிகச் சிறியவை. களிமண் சுவரையும் வைக்கோல் கூரையையும் கொண்டவை. தரையும் சுவரும் களிமண்ணால் மெழுகப்பட்டிருக்கும். முன் திண்ணையும், ஒரு அறையும் கொண்ட இவ்வீடுகளின் கூரை தாழ்வானதாக அமைந்திருக்கும். வீட்டிற்குச் சிறிது தூரத்தில் அடுக்களை காணப்படுகின்றது. இது ஒரு சிறு குடிலைப் போன்றது. ஓரளவு வசதியானவர்களின் வீடுகள் நீள் வாக்கில் மூன்று அறைகளையும் முன் திண்ணையையும் கொண்டுள்ளன. மத்தியில் உள்ள அறை பொது அறையாகும். நெல் குத்துவதற்கும் இது பயன்படுத்தப்படும்.

வீடுகளின் முன்னால் அல்லது ஒரு பகுதியில் ' பறுவ ' எனப்படும் நெல் கொட்டு அல்லது நெற்களஞ்சியம் காணப்படும்.

செல்வந்தர்களின் வீடுகள் நாட்டு ஓடு வேயப்பட்ட, சுற்றிவர ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளையும் முன் திண்ணையையும் நிலா முற்றத்தையும் கொண்டதாக விளங்கின. இவ்வகை வீடுகளில் பல அழிந்து விட்டன. நாகாமத்தில் (நேகம) பள்ளிக்கு அருகே அழியும் நிலையில் உள்ள அழகிய வீட்டை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

## மஸ்ஜித் தலைமைத்துவம்

அநுராதபுர மாவட்டக் கிராமங்களின் நிர்வாகம் கடந்த காலத்தில் பெரிதும் பள்ளி அமைப்பின் கீழேயே இருந்து வந்துள்ளது. இப்பிரதேச மஸ்ஜித் தலைமைத்துவத்தை ' மரைக்கார் ஆட்சி ' எனக் கூறலாம். மரைக்கார், மத்திஸம், கணக்குப்பிள்ளை ஆகியோர் இவ்வாட்சி முறையில் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர்.[2] குடும்பப் பிரச்சினைகள் முதல் கிராமத்தின் பல்வேறு தகராறுகள் வரை மரைக்கார் ஆட்சி தீர்த்து வைத்தது.

மக்களின் சமயம், வாழ்க்கை விவகாரங்கள் அனைத்திலும் மரைக்கார் ஆட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஜும்ஆவுக்கு வராதவர்கள், மது, ஸினா (விபச்சாரம்) முறைகேடான திருமணப் பந்தங்கள், ஆண் பெண் உறவுகள் முதலியவற்றில் மரைக்கார் ஆட்சி கடுமையான கண்காணிப்புடையதாய் நடந்துகொண்டது. தெண்டப்பணம் அறவிடவும், தண்டனைகள் வழங்கவும் அதற்கு அதிகாரம் இருந்தது. குற்றவாளியாகக் காண்போரை ஊரின் பொதுவான வாழ்வில் இருந்து ஒதுக்கி வைக்க அதனால் முடிந்தது. திருமண விவகாரங்களில் பள்ளித் தலைமையின் தலையீடு தெளிவானது. பள்ளித்தலைமையின் அங்கீகாரத்தைப் பெறாத திருமணங்கள் சமூக அங்கீகாரத்தைப் பெறுவதில்லை. முறையற்றதெனக் கருதிய உறவுகளுக்காக ' பத்வாக் ' கள் வழங்கப்பட்டு ' ஹத் ' அடிக்கப்பட்ட சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

## குடும்பம்

சமூக அமைப்பின் அடிப்படை அலகு குடும்பமாகும். கணவன் மனைவி என்ற உறவின் மூலம் குடும்ப அலகின் அடிப்படைக் கட்டமைப்பு உருவாகிறது. உலகின் அநேக இனங்களிற் காணப்படுவதைப் போல முஸ்லிம்

சமூகமும் குடும்ப அமைப்பை முதன்மையாக மதிக்கிறது. திருமண பந்தத்தின் ஊடாகவே மார்க்கம் இதனை ஏற்றுக் கொள்கிறது.

கடந்த காலத்தில் இப்பிரதேசக் குடும்ப அமைப்பு கூட்டுக் குடும்ப (Joint Family) த்தையே பெரிதும் கொண்டிருந்தது. புதிதாகத் திருமணம் செய்து கொள்பவர்கள் தொடர்ந்தும் தமது பெற்றோருடனேயே வாழ்ந்தனர். ஒரு வீட்டிலேயோ அல்லது அந்த வீட்டு எல்லைக்குள் கட்டப்படும் மற்றொரு சிறு வீட்டிலேயோ வாழ்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். உணவு வேளைகளில் எல்லாரும் ஒன்று கூடுவர். குடும்பங்கள் பிரியாது ஒரு எல்லைக்குள் வாழும் போக்கு இங்கு நிலவியதெனக் கூறலாம். வீட்டு எல்லைக்குள் அமையும், புதிய வீடுகள் ' வாடி ' எனப்படும். எனினும் இன்று இந்தக் கூட்டுக் குடும்ப அமைப்பு குறைந்து வருகிறது.

நவீன குடும்பம் தாய் தந்தை பிள்ளைகள் அல்லது கணவன் மனைவி பிள்ளைகளைக் கொண்ட ஒரு தனிக்குடும்ப (Nuclear Family) மாகும். இப்பிரதேசக் குடும்ப அமைப்பு தற்காலத்தில் நவீன தனிக்குடும்ப அமைப்பை நோக்கியே மாற்றமடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

## திருமண சம்பிரதாயங்கள்

சடங்குகளை (Rituals) வாழ்வியல் சடங்குகள், சமயச் சடங்குகள் என இரண்டாக வகுக்கலாம். இப்பிரதேச மக்களின் வாழ்வியல் சடங்குகளாக திருமணம், கர்ப்பிணி சம்பிரதாயம், பெயரிடும் சடங்கு, சுன்னத்துக் கல்யாணம், சாமத்தியச் சடங்கு, மரணச் சடங்கு என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப் பிடலாம். சமய நம்பிக்கைகள், கிராம நடைமுறைகள், பிரதேசத் தாக்கங்கள் என்பனவற்றினால் இவை இப்பிரதேசத்திற்குரிய தனித்தன்மையைப் பெற்று விளங்குகின்றன.

திருமண நிறுவனம் மிகப் பழைமையானது. ஆண் பெண் இருவரின் இணைவாக மட்டுமல்ல உயிரியல், பொருளியல், சமூகவியல் அம்சங்களின் முக்கிய கூட்டாகவும் சக்தியாகவும் அது விளங்குகின்றது. சம்பிரதாயங்களும் சடங்குகளும் சமய, சமூக நிலைகளில் இதன் முக்கியத்துவத்தை வலியுறுத் தவோ, விளங்கப்படுத்தவோ முயல்வதை பழைய திருமண மரபுகள் காட்டு கின்றன. அநுராதபுர மாவட்ட முஸ்லிம் திருமண பாரம்பரியத்தில் ஏராளமான மரபுகளும் சம்பிரதாயங்களும் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கு சுருக்கமாகப் பார்க்கலாம்.

'பெற்றோர் பேசிச் செய்தலே' இப்பிரதேசத்தின் பாரம்பரிய மரபாகும். 'சம்பந்தம்' பேசுவதன் மூலமே திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. இது பேச்சுவார்த்தைக்குரிய சந்தர்ப்பமாகும். இப்பேச்சின் போதே கைக்கூலி, சீதனம், மஹர், திருமண தினம், மாப்பிள்ளை பெண் எங்கு வாழ்வது என்பன தீர்மானிக்கப்படுகின்றன. இப்பிரதேசத்தின் பழைய மரபில் 'கைக்கூலி' (மாப்பிள்ளைக்கான பணக் கொடுப்பனவு) இல்லை. பெண்ணின் பெற்றோர் தமது விருப்பத்தின்படி பெண்ணுக்கு வழங்கும் பொருட்டு சீதனங்கள் உண்டு. கால் நடைகள், தளபாடங்கள், கருவிகள், பாத்திரங்கள், காணி என்பன இதில் அடங்கும். சமயம் வற்புறுத்தும் 'மஹர் தொகை' அல்லது ஆண் தரப்பில் பெண்ணுக்குத் தரப்படும் மணப்பணமும் (Bride Price) இதில் தீர்மானிக்கப் படுகிறது. ரூபா 25.50, 35.50, 101.00 என இத்தொகை அமையும். பெரும்பாலும் இம்மஹர் தொகை பெண்ணுக்கு உடனடியாகக் கொடுக்கப்படுவதில்லை.

சம்பந்தம் பேசி முடிவானதன் பின்னர் மாப்பிள்ளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பெண்ணின் பெற்றோரின் சமூக பொருளாதாரச் செயற்பாடுகளில் முழுமையாகப் பங்கு கொண்டு தனது தகுதியை நிரூபிக்க வேண்டும். இப்பிரதேசத்தின் சில கிராமங்களில் இம்முறை ஒரு காலத்தில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டதை அறிய முடிகிறது. காடு வெட்டுதல், உழுதல், சூடு மிதித்தல் முதலிய அனைத்துத் தொழில்களிலும் மாப்பிள்ளை மாமனாருக்கு உதவவேண்டும்.

இக்கால இடைவெளியில் மாப்பிள்ளையின் தொழில் திறனையும் நற்குணங்களையும் மாமனார் அவதானிக்கிறார். மாப்பிள்ளையின் நடவடிக்கைகளில் பெண்ணின் பெற்றோர் திருப்தியடைந்தால், திருமணத்திற்கு விருப்பம் தெரிவிக்கின்றனர். இல்லையெனில் திருமணம் முறிவடைகிறது. பெற்றோர் தமது பெண்ணுக்கு வேறு மாப்பிள்ளையைத் தேடுவர். இத்தகைய திருமணங்களை மானிடவியல், தகுதிகாண் திருமணங்கள் (Probationary Marriage) என்று கூறுகிறது. இன்று இம்முறை பொதுவாக இல்லை என்றே கூற வேண்டும்.

மாப்பிள்ளை, திருமணத்தின் பின் தனிக் குடித்தனம் போகும் காலத்தில் காடு வெட்டும் கத்தி, மண்வெட்டி, கோடரி, கருக்கத்தி, பாக்குவெட்டி முதலியவற்றை பெண் தரப்பிலிருந்து பெற்றுக் கொள்வார். இந்த நிகழ்ச்சிகள் தொழில் செய்து பிழைக்கக்கூடிய தகைமை மாப்பிள்ளைக்கு இருக்க வேண்டும் என்பதையே காட்டுகின்றன எனக் கருதலாம்.

திருமணத்திற்கான வீட்டு அலங்காரங்களில் இப்பிரதேசத்திற்கே உரிய சில தனித்தன்மைகள் உள்ளன. சிவப்பு மண்ணால் களிமண் சுவர்கள் மெழுகப்படுகின்றன. அதில் மாலை அடித்தல் என்பது முக்கிய அலங்காரமாக இடம் பெறுகிறது. அரிசி மாவினால் கரைத்த கலவையில் நூலைத்தோய்த்து நூலினால் கோடுகளும் பூ அலங்காரங்களும் இடப்படுகின்றன. வீட்டு முன் சுவரும், மாப்பிள்ளை பெண் அமரும் அறைச் சுவர்களும் இவ்வாறு அலங்கரிக்கப்படுகின்றன.

திருமணத்திற்கு சில வாரங்களுக்கு முன்னால் நெல் காயவைத்தல், அரிசி ஊறப் போடுதல், மாவிடித்தல் போன்ற வேலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதில் பெண்கள் பங்கு கொள்வர். இவ்வேலைகளின்போது பெண்கள் விருத்தங்களும் கவிகளும் பாடுவர். அதன் பின்னர் பலகாரம் சுடும் பணிகள் ஆரம்பமாகின்றன. திருணமத்திற்காக முதலில் சுடப்படுவது 'வாலுப்பன் பணியாரமாகும்'.[3]

திருமண தினத்தில் வீட்டின் தலைவாசலில் தென்னங்குருத்து, தென்னம் பூ அலங்காரம் இடம் பெறும். வாழை மரம் நடப்படுவதும் உண்டு. 'பெண்ணும் மாப்பிள்ளையும் அமரும் அறையில் காணப்படும் சுவர் அலங்காரத்தில் இரு தென்னை மரங்களும் அதன் நடுவே ஒரு குத்து விளக்கும் வரையப்பட்டிருக்கும். 'பெண்ணும் மாப்பிள்ளையும் இதற்கு எதிரே அமர்வர். (நிக்காவெவ)

இப்பிரதேசத் திருமண மரபில் பந்தல் முக்கிய இடத்தைப் பெறுகிறது. பந்தல் அமைப்பதற்கு முன்னர் 'பந்தற் கால்' நடப்படுகிறது. சில கிராமங்களில் இதற்காக பிராசங்கம்பை நடுவர். (நாச்சியா தீவு) பொதுவாகப் பால் வடியக்கூடிய மரமே இதற்காகத் தெரிவு செய்யப்படுகிறது. இதனை மாப்பிள்ளைக்கப்பு அல்லது மாப்பிள்ளைத் தூண் எனக் கூறுவர். கப்பு நடமுன் நடுமிடத்தில் தேங்காய்ப்பால் ஊற்றி அறுகம்புல்லும் வெள்ளிக்காசும் போடப் படும். மாப்பிளைக் கப்பினை மூன்று நிறங்களினாலான மூன்று சேலைகளி னால் சுற்றி அலங்கரிப்பர். கப்பின் மேற்பகுதியில் இளநீர்க் குலை தொங்கவிடப்படும். கப்பின் அடிப்பாகத்தில் உரலும் அதன் மீது தேங்காயும் தென்னம் பூவும் கொண்ட குடமும் வைக்கப்படும். திருமணத்தின் போது மாப்பிள்ளை இந்த அலங்காரத்திற்கு அருகிலேயே அமர்த்தப்படுகிறார்.

பெண் வீட்டிற்கு மாப்பிள்ளை தனது பயணத்தைத் தொடருமுன் மஸ்ஜிதுக்குச் சென்று காணிக்கை செலுத்துகிறார். அங்கு பாத்திஹா ஓதப்படுகிறது. அதன் பின்னரே மாப்பிள்ளை ஊர்வலமாக பெண்வீடு நோக்கிச் செல்கிறார். முன்னால் மேளக்காரர் செல்வர். பைத்துகள் பாடிய வண்ணம் ஊர்வலம் நகர்கிறது.

மாப்பிள்ளையுடன் ' பணியாரப் பெட்டி', 'மாப்பிள்ளைச் செப்பு' (வெண் கலத்தினாலானது), 7 தேங்காய், அரிசி, கண்ணாடி, சீப்பு, மஞ்சள், மருதோண்டி முதலியனவும் கொண்டு செல்லப்படுகின்றன. பணியாரப் பெட்டியில் 101 பலகாரம் அல்லது 500 பலகாரம் வைக்கப்படும். பணியாரப் பெட்டியில் எத்தனை பலகாரம் கொண்டுவர வேண்டும் என்பதை பெண் வீட்டாரே நிர்ணயிக்கின்றனர். (நாகாமம், கலாவெவ).

திஸாவெவ (அனுராதபுர பழைய நகரவாசிகள்) கிராமத்தவரிடையே மாப்பிள்ளை ஊர்வலத்திற்கு முன்னர் 'மருதோண்டி' யிடும் நிகழ்ச்சி நடை பெறும். மாப்பிள்ளையின் சகோதரிகளும் உறவுக்காரப் பெண்களும் 'கொட்டு மேளத்துடன்' வந்து பெண்ணுக்கு மருதோண்டியிட்டுச் செல்வர். அதன் பின்னர் பெண்ணின் சகோதரிகள் 'கொட்டு மேளத்துடன்' மாப்பிள்ளை வீடு வந்து மாப்பிள்ளையின் முகத்தில் பால் தொட்டு வைக்கும் நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பர். இது மாப்பிள்ளையின் முக அலங்காரத்துக்கான முன்னோடி நிகழ்ச்சியாகும். இதன் பின்னரே, மாப்பிள்ளை புறப்படும் நிகழ்ச்சி ஆரம்பமாகிறது.

மாப்பிள்ளையுடன் கொண்டு வரப்படும் 'சீலைப் பெட்டியில்' பெண்ணுக் கான சாரிகளுடன் மாமிக்கும் ஒரு சேலை இருக்கும். அதில் ஒரு பவுண் முடிந்து வைப்பது பழைய வழக்கம். இதனைக் 'கொடி சீலை' என்பர் (திஸாவெவ).

மாப்பிள்ளை பெண் வீட்டை அடைந்ததும் பெண்வீட்டு எல்லையைக் கடப்பதற்காக மாப்பிள்ளை வீட்டார் 100 வெற்றிலைகள் கொடுக்க வேண்டும். அதன் பின்னரே மாப்பிள்ளை பந்தலுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்படுவார். இதனைத் தாண்டும் வெற்றிலை அல்லது கடக்கும் வெற்றிலை என்று கூறுவர் (கலாவெவ).

மாப்பிள்ளை பெண் வீட்டிற்குள் வரும் போது 'மேற்கட்டி' பிடிக்கப்படும். தரையில் 'வெள்ளை' விரிப்பர். மூன்று விதமான ஆராத்திகள் எடுப்பது மற்றோரு சிறப்பு வழக்கமாகும். அழகு ஆராத்தி, பால் ஆராத்தி (தேங்காய்ப் பாலில் மஞ்சள் கலந்தும் கலக்காமலும்), செம்புக்குட ஆராத்தி என்பனவே அம்மூன்றுமாகும். செம்புக்குட ஆராத்தி ஆராத்திகளில் பெரியது. அலங் கரிக்கப்பட்ட செம்புக்குடத்தை மாப்பிள்ளையைச் சுற்றி நிற்கும் பெண்கள் தமது கைகளினால் வட்டமாக கை மாற்றுவர். பெண்ணின் சகோதரி பால் ஆராத்தியில் தனது கழுத்தணியைப் போட்டு எடுக்கும் ஆராத்தி பொன்மணி

ஆராத்தி எனப்படும். மாப்பிள்ளை வீட்டினுள் பிரவேசிக்கும்போது மாப்பிள்ளையின் கால்களை பெண்ணின் இளைய சகோதரன் தேங்காய்ப் பாலினால் அல்லது நீரினால் கழுவும் வழக்கமும் உண்டு.

மாப்பிள்ளை பந்தலில் அமர்ந்திருக்கும் போது விருத்தங்களும், கவிகளும், அறபு பைத்துகளும் பாடுவர். மாப்பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் இதில் பங்கு கொள்வர். புத்தகப் பாடல்களும் உள்ளூர்க் கவிகளால் இயற்றப்பட்ட பாடல்களும் இதில் இடம் பெறும். பாடல்களைப் பாடும் போது பந்தலில் இருப்போர் ஒவ்வொரு சீரின் இடையேயும் 'ஆமோ' என்று கூறுவர். உதாரணத்திற்குக் கீழ்க் காணும் பாடலைப் பார்க்கலாம்.

பண்பான மாப்பிள்ளை பந்தலில் உட்கார்ந்து
பாவையை முடித்தருள்வாய் (ஆமோ)
அதள சீதள பூ பாதாள லோகமும்
அண்டமும் யாமுஹம்மதே (ஆமோ)
உந்தனது அர்ஷிலே அப்துல்லா புதல்வரே
திருமறைக்குரிய நபிமார் (ஆமோ)

என்று இது தொடரும்.

அழகான மாப்பிள்ளை
திறமான ஜோடியினை
அணைந்து ஏகிவரவே

என்று மற்றொரு பாடல் ஆரம்பமாகிறது. இப் பாடல்களில் பல இன்று கிடைக்கும் நிலையில் இல்லை.

'நிக்காஹ்' முடிந்த பின்னர் மாமனார் மாப்பிள்ளைக்கு மோதிரம் அணிவிப்பார். மாப்பிள்ளைத் தோழன் ஒரு 'இலேஞ்சியை' (கைக்குட்டை) கையில் பிடிப்பார். அதில் சபையில் உள்ளோர் காசு போடுவர். இது மோதிரக் காசு எனப்படும். மோதிரக் காசு போடுபவர்கள் அனைவரையும் பெண்வீட்டார் அவதானித்து அடுத்த நாள் தமது வீட்டில் நடக்கும் விருந்துக்கு அழைப்பர். (கலாவெவ) 'காவின்' முடிந்த பின்னர் மாப்பிள்ளைக்கு பெண்ணின் தகப்பன் மூன்று மிடர் பசும்பால் கொடுப்பார். மீதிப்பாலை பெண்ணுக்கும் மூன்று மிடர் கொடுப்பார். இது காவின் பால் என்று கூறப்படுகின்றது (திஸாவெவ). இந்த வழக்கம் இன்றும் இங்கு உள்ளது.

இந்த நிகழ்ச்சிகளின் பின்னர் பெண் இருக்கும் இடத்திற்கு மாப்பிள்ளை அழைத்து வரப்படுகிறார். பெண்ணின் தகப்பன் பெண்ணின் உச்சிமுடியைப்

பிடித்து மாப்பிள்ளையின் கையில் கொடுப்பார். மாப்பிள்ளை பின்னர் பெண்ணின் கையில் இருக்கும் இரு வெற்றிலைகளையும் பிய்த்து பெண்ணின் தலையில் சொருகுகிறார். அடுத்ததாகத் தாலி கட்டும் நிகழ்ச்சி நடைபெறும். தற்காலத்தில் தாலி கட்டும் மரபு குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

மறுநாள் ' மாப்பிள்ளை பெண் ' குளிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது தண்ணீர் வார்த்தல் எனப்படும். மாப்பிள்ளை கொண்டு வரும் வெள்ளைத் துணியை அணிந்தே ' மாப்பிள்ளை பெண் ' குளிக்கின்றனர். பிரத்தியேகமாக வைக்கப்பட்டுள்ள ஏழு குடம் தண்ணீரை மாப்பிள்ளை பெண்ணுக்கு உறவினர் சமமாக ஊற்றுவதிலிருந்து தண்ணீர் வார்த்தல் ஆரம்பமாகிறது. உறவினரின் கேலிப் பேச்சுக்களும் இச்சந்தர்ப்பத்தில் இடம் பெறும். மாப்பிள்ளை தொடர்ந்து ஏழு நாட்கள் பெண் வீட்டிலேயே இருப்பார். அதன் பின்னர் மாப்பிள்ளை வீட்டார் வந்து மாப்பிள்ளை பெண்ணை அழைத்துச் செல்வர். அன்று பெண்வீட்டில் விருந்துபசாரம் நடக்கும்.

திஸாவெவ வாசிகளிடத்தில் ஏழு நாட்களின் பின் ' பிலால் விடுதல் ' என்ற மச்ச உணவு பரிமாறும் விருந்து சிறப்பாக நடக்கும். அன்றைய தினம் மாப்பிள்ளை கடைவீதி சென்று பழவர்க்கங்களும் கற்கண்டும் வாங்கி வருவார். இது மடிமாங்காய் என்று கூறப்படும். (திஸாவெவ) இவை உற்றார் உறவினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

பிரசவ காலத்தில் பெண் தாய் வீட்டிற்கே அழைத்து வரப்படுகிறாள். இதற்கு முன்னர் சில நிகழ்ச்சிகள் நடக்கின்றன. ஆறு மாதமளவில் கர்ப்பிணித் தாய்க்கு உறவினர் பலகாரம் செய்து அனுப்புகின்றனர். சில கிராமங்களில் ' புளிச்சோறு ' ஆக்கிக் கொடுப்பர் (திஸாவெவ). பெண்ணைத் தாய் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வரும் போது பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டிற்குப் பலகாரம் கொண்டு வருவர் இது பலகாரம் காவுதல் என்று கூறப்படும் (திஸாவெவ). 9 ம் மாதம் மாப்பிள்ளையின் பெற்றோர் சேலை, பலகாரம் முதலியவற்றுடன் சென்று மருமகளைக் பார்த்துச் செல்வர். நாற்பது அன்று பிள்ளைக்குப் பெயரிடும் வைபவமும் விருந்துபசாரமும் நடைபெறும்.

## நோன்பு

நோன்பின் அடிப்படை விதிகள் எல்லா இடங்களுக்கும் பொதுவானதாகும். ஆனால் சில தினங்களை மக்கள் சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். தலை நோன்பு ஒரு தினமாகும். இத்தினத்தில் ஆண்களும் பெண்களும் பெற்றோர்களையும் பெரியோர்களையும் தேடிச்

சென்று சலாம் சொல்லுவர் (திஸாவெவ). அன்று விஷேட உணவு வகைகளும் சமைக்கப்படும் (திஸாவெவ).

நாச்சியார்தீவு (நாச்சாதுவ) பகுதியில் பத்தாம் ஸஹர் விஷேட தினமாகும். மகரிபில் இருந்து இஷாவரை ஒவ்வொரு வீடுகளிலும் யாசீன் ஓதுவர். பின்னர் பாத்திஹா ஓதி சோறு அல்லது ' வாலுப்பன் ' பணியாரம் வழங்குவர். இவை பள்ளிக்கும் அனுப்பப்படும். பள்ளியில் தராவீஹ் தொழுகையின் பின் இத் தினத்தில் யாசீன் ஓதுவர். 21 ம் நோன்பில் அலி (ரலி) பேரில் கத்தம் (யாசீன்) ஓதும் வழக்கம் சில ஊர்களில் காணப்படுகின்றது. 10 ம் நோன்பு பாத்திமாநாயகி பேரில் விசேட தினமாக விளங்குகின்றது. 17 ம் நோன்பை பதுறு சஹாபாக்கள் பேரில் விஷேடமாகக் கருதும் வழக்கம் இன்று அதிகரித்து வருகிறது. பொதுவாக 7, 10, 15, 17, 21, 27 ஆகிய தினங்கள் சிறப்புத் தினங்களாக மதிக்கப்படுகின்றன.

ஸஹருக்கு தயிரும் நல்ல கறிகளும் இலவசமாக வழங்குவர். ஸஹர் நேரத்தில் அயலவர்களை எழுப்பி அவர்களுக்கு இவற்றை வழங்குகின்றனர். இவ்வழக்கம் இன்றும் உள்ளது (நாச்சியாதீவு).

## பெருநாள்

நோன்புப் பெருநாளில் 27 ம் நோன்பில் இருந்து ' பித்ரா ' அரிசியை ஏழைக்கு வழங்குவர். பெருநாள் முடிந்து மூன்று இரவுகள் களிகம்பு ஆடுவர். அக்காலத்தில் களிகம்பு பெருநாள் கொண்டாட்டத்தில் முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது. பெண்கள் ' றபான் ' அடிப்பர். இது பெருநாளைக்குச் சில தினங்களுக்கு முன்னரே ஆரம்பித்துவிடும். பெருநாள் முடிந்து ஒரு வாரம் வரை இது நீடிக்கும். பெண்கள் ஊஞ்சல் ஆடுவர். பாண்டி, முத்து முதலிய விளையாட்டுக்களிலும் ஈடுபடுவர். ஒருவர்க்கொருவர் போட்டிக் கவிகளும் பாடுவர்.

## தர்ஹா நிகழ்ச்சிகள்

ஒட்டுப்பள்ளம் ஷெய்கு சிக்கந்தர் ஒலி தர்ஹா இப் பிரதேசத்தில் முக்கிய தர்ஹாக்களில் ஒன்றாகும். நாச்சியா தீவிலும் ஷெய்கு சிக்கந்தர் ஒலி பெயரில் தர்ஹா உண்டு. நாகாமத்திலும், அம்பகஹவெவவிலும் 40 முழ கபுறடிகள் உள்ளன. 11 முழ கபுறடியும் உண்டு. இவற்றில் கொடியேற்று வைபவங்களும் மௌலூதுகளும் நடைபெறுகின்றன. நேர்ச்சைகள் செய்யும் வழக்கமும்

காணப்படுகிறது. கொடியேற்று காலங்களில் தர்ஹாவில் பெரிய கொடிமரம் ஏற்றப்படும். சிறுவர் கொடிகளை ஏந்தி பைத்துக்கள் பாடி ஊர்மனை சுற்றி வருவர். பல வருடங்களுக்கு முன்னர் நாகாமத்தில் சந்தனக் கூடு எடுத்ததாகவும் அறிய முடிகிறது. பொதுவாகப் பத்து அல்லது பதினொரு தினங்கள் தர்ஹாவில் மௌலூது ஓதி இறுதித் தினத்தில் நேர்ச்சைகள் கொடுப்பர். இவ்வழக்கங்கள் இன்று பெரிதும் அருகி வருகின்றன.

ஆஷுறா

ஆஷுறா (முஹர்ரம்) தினம் பத்து நாட்கள் இடம் பெறுகிறது. 10 ம் நாள் பள்ளியில் யாசீன் ஓதுவர். இத்தினத்தில் உணவு சமைத்து பள்ளிவாசலுக்கு அனுப்புவர். நோய்களுக்காகவும், சிறுவர்களின் ' சிரங்கு ' போன்ற பிணிகள் நீங்குவதற்காகவும் செய்த நேர்ச்சைகள் நிறைவேற்றப்படுகின்றன. ' நேர்த்தி வைத்தவர்கள் ' அன்றைய தினத்தில் அரிசி அல்லது சோறு பிச்சையாகப் பெறுகின்றனர். இது ' மடிப்பிச்சை ' எனப்படும். சிறுவர்கள் தோளில் ' பொக்கணம் ' (சோளியா) அணிந்து மடிப் பிச்சைக்காகச் செல்வர். சில ஊர்களில் கொழுக்கட்டை, பால்ரொட்டி, பால்கஞ்சி முதலியன செய்து பள்ளிக்கு அனுப்புகின்றனர். ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பஞ்சா எடுப்பதும் தீக் குளிப்பதும் இத்தினத்தில் நடைபெற்றுள்ளது.

அநுராதபுர மாவட்டம் முழுக்க தலைப்பாத்திஹா ஓதல் ஒரு முக்கிய நிகழ்ச்சியாக இருந்துள்ளது. இது பெண்கள் பெண்களுக்காக நடத்தும் பிரார்த்தனை நிழ்ச்சியாகும். பெரிய நிய்யத்து என்பது கர்ப்பிணிப் பெண்களின் நலனுக்காக ஓதப்படும் தலைப் பாத்திஹாவாகும். வயதான இரு மூதாட்டிகள் இரட்டை முக்காடிட்டு வாய் பேசாது இலை குழைகளால் வீட்டைத் துப்புரவு செய்கின்றனர். அன்றைய தினம் வீட்டில் மச்சம் மாமிசம் சமைக்கப் படுவதில்லை. கீரைவகைகள் மட்டுமே சமைக்கப்படுகின்றன. அன்று சுடப்படும் முக்கிய பணியாரம் வலுப்பானாகும். இத் தலைப் பாத்திஹாவை பெரும்பாலும் 7 பெண்கள் சேர்ந்து ஓதுகின்றனர். ' பிள்ளைத்தாச்சிக்காக, ' ஓதப்படும் நிய்யத்து ' என்றும் அல்லது ' நாச்சியார் நிய்யத்து ' என்றும் இது கூறப்படுகின்றது.

பதினொரு அவுலியாக்கள் மௌலூதும் பெரிய நிய்யத்து என்றே அழைக்கப்படுகிறது. யாக்கூபு நபியின் பதினொரு புதல்வர்களின் பேர் நாமத்தில் இது ஓதப்படுகிறது. பர்சஞ்சி மௌலூது, வித்ரியா, புர்தா ஆகிய மூன்றும் இதற்காக ஓதப்படும். இது பெரும் ஆபத்துக்கள் நீங்குவதற்காக நேர்ந்து ஓதும் மௌலூதாகும். இதற்கு 11 கொத்து அரிசி (முதற்பானை) 11

கோழி சமைப்பர். இந்த மௌலூதை பதினொரு பேர் ஓதுவர். இதுதவிர நோய்கள் ஆபத்துக்கள் நீங்குவதற்கு ஆபத்து மௌலூது ஓதுவர். இவ்வழக்கங்கள் இன்று பெரிதும் அருகிவிட்டன.

கடும் வரட்சிக் காலங்களில் மழைக்காகப் பிரார்த்தனை புரிவர். இப்னு நபாத்தாவின் கொத்துபாத் தொகுதியில் உள்ள மழை கொத்துபா வெள்ளிக்கிழமையில் ஓதப்படும் (நாகாமம்). மழை பைத்துப் பாடி மக்கள் ஊர்வலமாக வருவர். விருத்தங்களும் பாடுவர். சின்ன ஆலிம் அப்பாவின் மழைக்காவியம் பாடும் வழக்கமும் இருந்துள்ளது (நாகாமம்).

## கலை நிகழ்ச்சிகள்

இப்பிரதேசத்தின் பிரதான கலை நிகழ்ச்சியாகக் களிகம்பைக் குறிப்பிடலாம். மக்களின் பொழுது போக்கிற்கும் கலை ஆர்வத்திற்கும் இரசனைக்கும் உற்சாகமூட்டும் கலை விருந்தாக களிகம்பு விளங்கியது. பெருநாட்கள், கல்யாணம், காதுகுத்து, சுன்னத்து, மற்றும் விஷேட தினங்களில் கோலாட்டமே அன்று தலைமை நிகழ்ச்சியாக இடம் பெற்றது. நாகாமம், கெக்கிராவை, கலாவெவ, நொச்சியாமம், நாச்சியார்தீவு போன்ற பல கிராமங்க்ளில் கோலாட்டம் இன்றும் சில குழுக்களால் ஆடப்படுவதை அறியக் கூடியதாக உள்ளது.

கோலாட்டத்தைப் பயிற்றுவிப்பவர் அண்ணாவியாகும். கோலாட்டத்தை நடாத்துபவரும் அவரே. கோலாட்டம் தொடங்கும் போதும் முடியும் போதும் அண்ணாவியிடம் கம்பை நீட்டி ஆடுவோர் ஆசீர்வாதம் பெறுகின்றனர். களிகம்பு ஆடும்போது கைத்தாளம் (கைமாணி) இசைக்கப்படுகிறது. ' தாராதரத்தையே மேலே கவிக்கவே ' என்ற சீறாவின் விருத்தம் அல்லது அது போன்றதொரு விருத்தம் பாடி முடிந்த பின்னரே ஆட்டம் ஆரம்பிக்கிறது.

கோலாட்டத்திற்காகப் பாடப்படும் பல பாடல்கள் இக் கிராமங்கள் தோறும் அன்று இருந்தன. உள்ளூர்க் கவிகளும் பல பாடல்களைப் பாடியளித்தனர். வழி நடைச் சிந்து பாணியில் அமைந்த பல பாடல்கள் இங்கு இயற்றப்பட்டிருப்பதை அறியக்கூடியதாக உள்ளது.

1. பள்ளியலங்காரம் மானே
   அதைப் பார்த்து வருவம் தேனே
   பாரினில் நாகமம் ஊரினில். . . . . . . .

2. நாயனருள் பெறும் நாயகியே — எட்டி
நடந்துவாடி என் பெண்ணே — இன்னும்
நாட்டிற் சிறந்திடும் நாச்சியார் தீவெனும்
நந்நகர் பார்த்திடலாம் கண்ணே

போன்றவை இவ்வகையில் உதாரணங் காட்டக் கூடிய பாடல்களாகும். அக்காலத்து வேட்டைத் தொழிலைக் கூறும் கோலாட்டப் பாடல் ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது :

புங்கம் சுள்ளி ஏழு வண்டில் — தாயே
புளியம் சுள்ளி ஏழு வண்டில் — தாயே
சுள்ளிவகையெல்லாம் சேர்த்துக் கொண்டேன்
(தை, தை மல்லியடி)

வில்வத் தோக்குகள் ஆயிரமாம்
வில்லில்லாத் தோக்குகள் ஆயிரமாம்
சின்ன மருந்து ஏழு வண்டில் — தாயே
பெரிய மருந்து ஏழுவண்டில் — தாயே
(தை, தை, மல்லியடி)

இவை தவிர, கப்பல் பாட்டு மரபில் இயற்றப்பட்ட பாடல்களும் இப்பிரதேசத்தில் இருந்துள்ளன.

கோலாட்டம் தவிர அருவி வெட்டும் போதும் சூடு மிதிக்கும் போதும் அரிசி இடிக்கும் போதும் றபான் அடிக்கும் போதும் பாடல்கள் பாடுவார்கள். விருத்தங்கள் பாடுவார்கள். சில வேளைகளில் உடனுக்குடன் கவிகள் இயற்றிப் பாடுவர். இயற்கையாகவே பாடல்களை இயற்றிப் பாடும் ஆற்றல் உள்ள எழுதப் படிக்கத் தெரியாத பெண்களும் ஆண்களும் பலரிருந்துள்ளனர். இன்றும் அவ்வாறான ஆற்றல் உள்ள ஒரு சிலரை இக்கிராமங்கள் பெற்றுள்ளன. முன்னோர்கள் பாடியதையும் தமது சுய கற்பனைகளையும் கலந்து அவர்களால் அழகாகப் பாட முடிகின்றது. நாச்சியார் தீவில் ஜுனைதா உம்மா அஜ்மயீன் அவ்வாறான ஆற்றல் பெற்ற கிராமக் கவியாகும். அவர் பாடியதிலிருந்து சில வரிகள் வருமாறு :

“ஊரை மறந்தேன்
உடன் பிறப்பை தான் மறந்தேன்
தாயை மறந்தேன் — என்
தலை விதியோ என் ஆண்டவனே

ஆலத்தைப் படைத்து
அதிலே சில பயிர் எழுப்பி
வானத்தை மூடி வைத்தாய்
வல்லவனே உன் உதவி.

### தொழில் — சடங்குகள்

வயலில் நெல் விதைப்பதற்கு முன்னர் தேங்காய்ப்பால் தெளிப்பர். நல்ல விளைச்சலுக்காக ' நேத்திவைப்பர் '. அறுவடையின் பின்னர் எல்லா வயல்காரரும் சேர்ந்து மௌலூது ஓதி சோறு பகிர்வர். இது 'ஊர் நிய்யத்து' என்று கூறப்படும் (நாச்சியார்தீவு). சில கிராமங்களில் வயல் வேலை ஆரம்பமாகுமுன் பச்சைத் தேங்காயைக் கட்டித் தொங்க விடுவர். இதில் சுண்ணாம்பினால் சக அடையாளமிடப்பட்டிருக்கும். அறுவடையின் பின்னர் இத் தேங்காய்களையும் வேறு தேங்காய்களையும் கொண்டு இச்சடி (சர்க்கரைக் கஞ்சி) காய்ச்சிப் பகிர்வர் (நாகாமம்).

களத்து மேட்டிற்கு வரும் ஏழைகளுக்கு இலவசமாக நெல் வழங்குவது தொன்று தொட்டு நிலவும் வழக்கமாகும். ' பறுவ ' வில் நெல்லைக் களஞ்சியப்படுத்து முன்னர், உறவினர்களுக்கும் நெல் வழங்குவர்.

வேட்டை ஒரு முக்கிய ஜீவனோபாய முறையாக விளங்கியது. அக் காலத்தில் வேட்டைப் பொருள் விற்கப்படுவதில்லை. ' ஹயாத்து நபிக்கு ' நேர்த்தி வைத்த பின்னரே, வேட்டைக்குச் சென்றனர். காட்டில் வழி தவறாதிருக்கவும், வனவிலங்குகளிலிருந்து பாதுகாப்புப் பெறவும் அதிக மிருகங்களை வேட்டையாடவும் அவர்கள் நேர்த்தி வைத்தனர். வேட்டைக்குச் சென்றோரின் குடும்பத்தை ஊரவர்கள் ஆதரித்தனர். இறைச்சியை ஊரவர்களுக்குப் பகிர்ந்தளிப்பர். வேட்டையிலிருந்து திரும்பியதும் பள்ளிக்குச் சர்க்கரைக் கஞ்சி அல்லது சோறு அனுப்பி நேர்த்திக் கடனைத் தீர்ப்பர்.

### குறிப்புக்கள்

1. அநுராதபுர மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் வாழ்வியல் — பண்பாட்டம்சங்களை மட்டுமே இக்கட்டுரை கூறுகிறது. இது ஒரு சுருக்க விவரணமாகும். வேறு மாவட்ட கலாசாரத் தொடர்புகளின் ஒப்பீடு தவிர்க்கப்பட்டுள்ளது. நாகாமம் (நேகம்) நாச்சியார் தீவு (நாச்சா துவ) காளாவி (கலாவெவ) ஹொரவப்பொத்தானை — நிக்காவெவ,

கெக்கிராவைக் கிராமங்கள், நொச்சியாகமம் (நொச்சியாகம) திஸாவெவ (அநுராதபுர பழைய நகரக் குடியிருப்பு) முதலிய கிராமங்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டன.

திஸாவெவக் கிராமத்துக்கும் நாகாமத்திற்கும் இடையே அல்லது வேறொரு கிராமத்திற்கும் இடையே வாழ்வியல் பண்பாட்டம்சங்களில் சில வேறுபாடுகள் இருக்க முடியும். ஒரு கிராமத்தின் பழக்க வழக்கமும் இன்னொரு கிராமத்தின் பழக்க வழக்கங்களும் எல்லா விடயங்களிலும் ஒரே மாதிரியானதல்ல. எனினும் பொதுவான, மாவட்டத்திற்கே பொதுமையான பண்பாட்டம்சங்கள் பல உள்ளன. இப் பொதுமையை இனங்காட்டும் முயற்சியே இக்கட்டுரை. கட்டுரையில் அடைப்புக்குறிக்குள் உள்ள கிராமங்களின் பெயர்கள் குறிப்பிட்ட விடயம் அக்கிராமத்தைப் பெரிதும் மையமாகக் கொண்டது என்பதைச் சுட்டுகிறது. இவ்விடயங்கள் ஏனைய கிராமத்திற்கும் பொருந்தலாம். இவை இன்னும் செம்மையுறத் தொடர்ச்சியான ஆய்வுகள் தேவை.

இங்கு கூறப்பட்டுள்ள பண்பாட்டு அல்லது நாட்டார் வழக்கியல் அம்சங்கள் இன்று பெரிதும் மாறி வருகின்றன. சில முற்றாக அழிந்து விட்டன. எனினும் நகர, கல்வி தொடர்பு குறைந்த தூரக் கிராமங்களில் இவற்றுள் பல இன்னும் காணப்படுகின்றன.

2. கணக்குப்பிள்ளை : ஊர் முழுவதற்கும் ஒரு பெரிய கணக்குப்பிள்ளையும் மற்றும் ஊரின் ஒவ்வொரு குறிச்சிக்கும் ஒவ்வொரு கணக்குப்பிள்ளையும் இருந்தனர். பெரிய கணக்குப்பிள்ளையின் சொற்படி சிறிய கணக்குப் பிள்ளைகள் இயங்கினர். கணக்கு வழக்கு, பள்ளித் தெண்டம் குறிச்சி நிர்வாகம் முதலியனவற்றிற்கு இவர் பொறுப்பாயிருந்தார்.

3. வாலுப்பன் (வால்ப்பன்). இம்மாவட்டத்தின் தலைமைப் பலகாரம் என இதனைக் குறிப்பிடலாம். அரிசி மா, வாழைப்பழம், சீனிப் பாணி ஆகியவற்றினால் இது செய்யப்படுகிறது.

ஆதாரங்கள் : வினாக்கொத்துக்கள் மூலம் தரவுகளைத் திரட்டி உதவிய பேராதனைப் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்கள் :

எச். கே. மஹ்ரூப் (நிக்காவெவ)
எஸ். ஏ. நிஸார்தீன், எம். பி. கிலாப்தீன் (நாகாமம்)
கே. எம். நிஸான் (கலாவெவ)

நேரடியாகப் பேட்டி காணப்பட்டவர்கள் :

எம். எஸ். எல். ஜமால்தீன் லெப்பை (நாகாமம்)

ஏ. சி. எம். ஹனிபா, ஐ. நஜ்முன்னிஸா, ஜுனைதா உம்மா அஜ்மயீன் (பாண்டியன் குளம் — நாச்சியார் தீவு)

ஏ. எம். மாப்பிள்ளை மரைக்கார் (குசவ — நாச்சியார் தீவு)

செ. ம. ம. காதர் மொஹிதீன், உ. ச. அப்துல் அஸீஸ் (அநுராதபுரம் பழைய நகரம்)

அப்துல் காதர் ஹமீது (குசவ நாச்சியார் தீவு)

தையூப் மரை ,கார் (நொச்சியாகமம்)

# அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்கள் வாழும் ஊர்கள்

01. அநுராதபுரம்
02. கம்பிரிகஸ்வெவ
03. அளுத்கம
04. இவ்லக்கட
05. கட்டுகெலியாவ
06. அசரிகம
07. உடும்புகல
08. பரசங்கஸ்வெவ
09. கொட்டியாவ
10. கோவில்பந்தாவ
11. ரம்பாவெவ
12. இக்கிரிகொல்லாவ
13. ரத்மல்கஹவெவ
14. தல்கஹவெவ
15. மதவாச்சி
16. பேய்கூப்பிட்டான்
17. மாங்குளம்
18. நேரியகுளம்
19. சிராவஸ்திபுரம்
20. நெலுபாவ
21. மகாநெலுபாவ
22. ஹிதோகம
23. நாச்சதுவ
24. கல்குளம்
25. மிஹிந்தலை
26. சீப்புக்குளம்
27. றன்பத்வில
28. தஹனக்காவெவ
29. முக்கிரியாவ
30. கலன்பிந்துனுவெவ
31. கனந்தராகட்டுக்கெலியாவ
32. ஹொரவப்பொத்தான
33. கிரிபாவ
34. வீரச்சோலை
35. ஆணைஉழுந்தாவ
36. பத்தாவை
37. வெரட்டுவெவ
38. மரக்கலஹல்மில்லாவ
39. முஸ்லிம் எட்டவீரவெவ
40. ஈத்தல்வெட்டுனுவெவ
41. கோமரங்கடவெல
42. காகம
43. திறப்பனை
44. தெமட்டகம
45. முக்கரவெவ
46. கபுகொல்லாவ
47. எஹடுவெவ
48. நிக்கவெவ
49. உடநிதிகம
50. மரதங்கடவெல
51. கொல்லங்குட்டிகம
52. கனேவல்பொல
53. மடாடுகம
54. கெக்கிராவ
55. ஓலுகரந்த
56. நேகம
57. விஜிதபுர
58. கலாவெவ
59. கல்னேவ
60. எப்பாவலை
61. அந்தகல
62. ஹிரிபிட்டியாகம

63. மகா இலுப்பல்லம
64. இபலோகம
65. தலாவை
66. தம்புத்தேகம
67. இராஜாங்கனை
68. உல்பத்த
69. ஊத்துபிட்டிய
70. கல்லஞ்சியாகம
71. பலாகல
72. நெல்லியாகம
73. அலகப்பெருமாகம
74. கட்டியாவ
75. பண்டாரபொத்தானை
76. பலலுவெவ
77. பமுனுகம
78. வஹமல்கொல்லாவ
79. இஹலகம
80. கலுமுவாகட
81. வலகவித்தவெவ
82. எல்லவெவ
83. திவுல்வெவ
84. வெலிகொல்லாவ
85. கெபித்திகொல்லாவ
86. மகாசியம்பலகஸ்கட
87. கடவத்கம
88. மைத்திரிபுர
89. இஹலபுளியன்குளம்
90. சேனபுர முஸ்லிம் கொலனி
91. இஹலகெபிதிகொல்லாவ
92. புலன்குளம்
93. நொச்சியாகம
94. துனுமண்டலாவ
95. ஹெலம்பகஸ்வெவ
96. முரியகடவெவ
97. புப்போகம
98. அமுனவெட்டி
99. புதுகம
100. நேகம்பஹ
101. பானியங்கடவெவ
102. சம்மலன்குளம்

# 6

# கல்வி

— எஸ். எம். கமால்தீன் —

பொதுவாக இலங்கை முஸ்லிம்களிடையே கல்வித் துறையிலான விழிப்புணர்ச்சி 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்கட்டத்திலே அரும்பிய தெனலாம். இந்நிலை ஏற்கனவே, சிங்கள மக்களிடையே கேணல் எச். எஸ். ஒல்கொட் (1832 — 1907) மொஹொத்திவத்த குணானந்த தேரோ (1833 — 1890) அநகாரிக தர்மபால (1864 — 1933) முதலான பௌத்த அறிஞர்களும், தமிழ் மக்களிடையே ஆறுமுக நாவலரும் (1822 — 1879) ஏற்றிவைத்த அறிவொளியின் வழிவந்த உந்துதலால் தோன்றியதேயென்று கூறலாம்.

அறிஞர் சித்திலெவ்வை, வாப்பிச்சி மரைக்கார், அப்துல் அஸீஸ் முதலானோர் எகிப்திலிருந்து அக்காலத்தில் இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டிருந்த மாவீரர் ஒறாபி பாஷா அவர்களுடைய ஆசியோடும், ஆதரவோடும் 1892 ஆம் ஆண்டில் நிறுவிய அல்மத்ரஸதுல் ஸாஹிறாவே இந்நாட்டு முஸ்லிம் கல்வி வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். " ஸாஹிறா "வெனும் இவ்வரிய நாமத்தையே இன்று அநுராதபுர மாவட்டத்தின் முதன்மையான முஸ்லிம் கல்லூரிகளிலொன்று தாங்கி நின்று, கல்வித்துறையில் எமது மறுமலர்ச்சியின் ஊற்றுக்கண்ணை நினைவுறுத்துகிறது.

சித்திலெப்பை அவர்களின் கல்விப்பணி முகிழ்த்த காலத்தே நிலவிய முஸ்லிம்களின் கல்வி நிலையை, அரசாங்கக் கல்விப்பகுதித் தலைவரின் 1895 ஆம் ஆண்டறிக்கை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இவ் வறிக்கையில் கூறப்பட்டுள்ள நிலை அநுராதபுர மாவட்டக் கல்வி நிலை பற்றித் தெரிந்து கொள்ள உதவியாயிருக்கும்.

" தம் சமூகத்தின் தேவையை அச்சமூகத்திற் பெரும்பாலோர் அடிப்படை யாக உணர்ந்து ஒப்புக்கொண்டு, அதை நிவர்த்திக்க ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட்ட முயற்சி 1891 ஆம் ஆண்டுக்கு முன்பு எடுக்கப்படவில்லை.

பொதுவாகப் பழங்காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களும், மஸ்ஜித் பள்ளிக்கூடங்களுமே நடைபெற்று வந்தன. இவ்விடங்களிலே ஆதியந்தமாய்க் கற்பன யாவும் முக்கியமாக " குர்ஆன் " ஆகவே இருந்தது . . . . . தகுந்த முறைப்படி வகுக்கப்பட்டு அறிவமைதியையும் ஒழுங்கு முறையையும் அடிப் படையாகக் கொண்ட ஒரு கல்வித் திட்டத்தின் மூலம் அடையக் கூடிய நன்மைகளை இச்சமூகத்தினர் உணர்வதற்கு நீண்டகாலஞ் செல்லும் ".

இலங்கையில் கல்வித்துறையிலான வளர்ச்சியில் நாம் அவதானிக்கக் கூடிய பெருங்குறைபாடாவது, நகரங்களுக்கும், கிராமப்புறங்களுக்கு மிடையிலான ஏற்றத்தாழ்வாகும். அண்மைக்காலம் வரை கல்வியைப் பொறுத்தளவில் கிராமப்புற மக்கள் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர். இலங்கையில் திருமதி சுவர்ணா ஜயவீர அவர்களின் ஆய்வறிக்கையில் காணப்படும் விளக்கம், எமது கவனத்துக்குரிய அநுராதபுர மாவட்ட (வட - மத்திய மாகாண) நிலையை உணர்த்துவதாயுள்ளது.

" மக்கள் விரும்பி வதியும் நகரப் புறங்களையும் அபிவிருத்தியடைந்த மாவட்டங்களையும் கொண்ட தீவின் தென்மேற்குப் பகுதியிலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கல்வி பயில்வதற்கான வசதிகள் பரவலாக அமைந்திருப்பது கண்கூடு. புவியியலும், சமூக — பொருளாதார நிலைகளும், புறக்கணிப்பும் வடமத்திய மாகாணம் கல்வித்துறையில் பின்னடைந்திருப்பதற்கான காரணி களாகும். இதே நிலைமைதான், கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதியில் வதியும் இளைஞர்களின் பெரும்பாலானோரையும் பாதிப்பதாயிருக்கின்றது ".

சித்திலெப்பையவர்கள் காலத்தில் கொழும்பிலும், கண்டியிலும் கல்வி வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஒரு சில நகரங்களுக்கு மட்டுமே கிட்டின. தனியார் முயற்சியென்ற காரணத்தினால் முஸ்லிம் கல்வி வளர்ச்சி பரவலாக ஏற்படுவதற்கான வாய்ப்பிருக்கவில்லை.

சித்திலெவ்வை அவர்களால் முதல் முஸ்லிம் பெண்கள் பாடசாலை கண்டி திருகோணமலை வீதியில் நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் கண்டி கட்டுக்கலை, கம்பளை, பொல்கஹவலை, உடுநுவரை, கேகாலை, குருநாகல், ஹட்டன், நுவரெலியா, பதுளை போன்ற ஈழத்தின் உள்நாட்டுப் பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம் சிறார்களுக்காக முஸ்லிம் பாடசாலைகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆரம்பித்து நடாத்த உதவினார்.

இவ்வாறு கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்ட முயற்சிகள் அநுராதபுர மாவட்டத்தைச் சென்றடையவில்லை. மேலும் பொதுவாக நாட்டின்

அனைத்து அரசாங்கப் பாடசாலைகளிலும் பயின்ற முஸ்லிம் பிள்ளைகளின் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவேயிருந்தது.

1891 ஆம் ஆண்டின் சனத்தொகைப் புள்ளி விபரங்களின்படி இலங்கையில் முஸ்லிம்களின் சனத்தொகை 1,14,549 ஆண்களும் 92,740 பெண்களுமாகவிருந்தது. இதன்படிக்கு மொத்த சனத்தொகை 2,07,289 ஆகும். நாடு முழுவதிலுமாக அரசாங்கப் பாடசாலைகளிலும், அரசாங்க உதவி பெறும் பாடசாலைகளிலும் கல்வி பயின்ற பிள்ளைகளின் சதவிகிதம் 82 இல்1 ஆகவிருந்தது.

இந்த நிலையில் பின்தங்கியதொரு பிரதேசமாகிய அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி நிலை எவ்வாறிருந்திருக்குமென்பது நாம் கூறாமலே விளங்கும். மேலும் இப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் நிலையற்ற குடியேற்றமும் இடப்பெயர்வும் சீரான கல்விப் பயிற்சிக்கு இடமளித்திருக்க முடியாது. இந்தப் பின்னணியுடன் அநுராதபுர மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வித்துறையிலான அண்மைக் காலத்து வளர்ச்சியையும் சமகால நிலையையும் கவனிப்போம்.

அநுராதபுர மாவட்டத்தின் 1990 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி மொத்த சனத்தொகை 1,00,000 ஆகும். இதே மதிப்பீட்டின்படிக்கு அநுராதபுர நகரத்தின் சனத்தொகை 37,000 ஆகும்.

1981 ஆம் ஆண்டின் சனத்தொகைப் புள்ளிவிபரப்படிக்கு அநுராதபுர மாவட்டத்தின் முழு சனத்தொகை 5,87,822 ஆகும். இத்தொகையில் முஸ்லிம்கள் 43,801 ஆகும். அதாவது முழு சனத்தொகையில் 7.45 சதவிகிதமாகும். இம்மாவட்ட சனத்தொகையின் பரம்பல் 7034 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பிலாகும். இதிலிருந்து ஒரு சிறு தொகையினரான முஸ்லிம்கள் மிகவும் விஸ்தீரணமானதொரு நிலப்பரப்பில் பரவலாக வாழ்வது தெளிவாகிறது. எனவே முஸ்லிம் குடியிருப்புக்கள் ஒரு சிலவிடங்களில் தவிர பெரும்பாலும் சிறுசிறு கிராமங்களில் நிலைபெற்றிருக்கின்றன. இதனை யொட்டியே கல்விக்கான வசதிகளும் அமையுமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மாவட்டக் கிராமங்களை அவதானிக்குமிடத்து சனத்தொகையைப் பொறுத்தளவில் மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது. றம்பத்விலைக் கிராமத்தின் சனத்தொகை 33 ஆகவும், சீப்புக்குளம் கிராமத்தின் சனத்தொகை 40 ஆகவுமிருக்க, பின்வரும் சில கிராமங்களில் சனத்தொகை கணிசமான அளவிலுள்ளது :

| | | |
|---|---|---|
| நேகம | .. .. | 4,000 |
| கலாவெவ | .. .. | 3,780 |
| கட்டுக்கெலியாவ | .. .. | 2,015 |
| கெக்கிராவை | .. .. | 1,750 |
| நொச்சியாகம | .. .. | 1,500 |

சனத்தொகையில் இவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் பாடசாலைகளை அமைப்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

மஸ்ஜித் இல்லாத ஊரொன்றில்லை என்று கூறுமளவிற்கு, எமது மதிப்பீட்டிற்குட்பட்ட கிராமங்களெங்கனும் இறையில்லங்கள் சிறிதும் பெரிதுமாக நிறுவப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. இஸ்லாமிய மரபுப்படி மஸ்ஜித்களையொட்டியே மத்ரஸாக்களும், தொடர்ந்து பாடசாலைகளும் தோன்றியுள்ளன. எமது தலைநகராம் கொழும்பிலுள்ள ஸாஹிராக் கல்லூரியே இதற்குச் சிறந்த சான்றாகும்.

இந்த மரபினடியாகவே அநுராதபுர மாவட்டத்தின் முஸ்லிம் குடியேற்றங்களில் முதற்கண் மஸ்ஜிதும், அதனைத் தொடர்ந்து பாடசாலைகளும் உருவாகியுள்ளன.

இந்த வளர்ச்சி நெறிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தை இங்கெடுத்துக் கூறலாம்.

"சமய அறிவு பெறுதல் தான் கல்வி" என்ற எண்ணம் நீண்டகாலமாக யாழ்ப்பாண முஸ்லிம்களிடையே நிலவி வந்தது. இக்கல்வி தேடலும் பண்டைக் குருகுல முறைக்கேற்பவே நடந்து வந்தது. இக்காலத்திலும் ஈழத்தின் பெரும்பாலான மத்ரஸாக்களில் இம்முறையே கடைப்பிடிக்கப்படுவது கண்கூடு. இங்கு காலத்துக்குக் காலம் வருகின்ற மௌலானாக்களிடம் முரீது பெற்றுக் கொண்ட லெப்பைகளே ஆசிரியர்களாகக் கடமையாற்றினர் .... பிள்ளைகள் தொகை அதிகமாக பள்ளி வாசல்களுக்கருகே அதனையொட்டி மத்ரஸாக்கள் அமைக்கப்பட்டன .... பிற்காலத்தில் இவையே ஆரம்பக் கல்விக் கூடங்களாயின."

இலங்கை சுதந்திர நாடாகப் பரிணமித்த பின்பே இம்மாவட்ட முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கான முயற்சிகள் குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டுப் பெரும்பாலான கிராமங்களில் பாடசாலைகள் சிறுசிறு அளவிலேனும் தோன்றலாயின. (பாடசாலைகளின் பட்டியலை இணைப்பில் காண்க.)

இவ்விதமான கல்வி வளர்ச்சியின் சிறப்பம்சங்கள் சிலவற்றை எடுத்துக் கூறுமுன் இத்துறையிலான வளர்ச்சிப் போக்கை கோடிட்டுக் காட்டும் முகமாக ஒரு சில முக்கிய கல்விக்கூடங்களை இங்கு காண்போம்.

### அநுராதபுர நகரம் — ஸாஹிரா மகா வித்தியாலயம்

அநுராதபுர முஸ்லிம் கனிஷ்ட பாடசாலையாக 1968 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையே 1972 ஆம் ஆண்டில் "ஸாஹிரா" என்ற பெயரினை ஏற்றது. 1969 ஆம் ஆண்டில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினாலும் 1970 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினாலும் இரு கட்டிடங்கள் இக்கல்லூரிக்காக நிறுவப்பட்டன.

1973 ஆம் ஆண்டில் க. பொ. த. (சா. த) பரீட்சைக்கும் 1974 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த) பரீட்சைக்கும் ஸாஹிறா மகா வித்தியாலய மாணவர்கள் முதன்முறையாகத் தோற்றினார்கள். இவ்வாண்டில் விஞ்ஞானம், விவசாயம், கணிதம், மனையியல் முதலிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். விஞ்ஞான ஆய்வுகூடமும் உண்டு.

தற்போது 735 மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். 35 ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

1993 ஆம் ஆண்டில் இம்மகா வித்தியாலயம் வெள்ளிவிழாக் காணவுள்ளது.

### நேகம — முஸ்லிம் மகா வித்தியாலயம்

இவ்வித்தியாலயம் 1944 ஆம் ஆண்டில் 37 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இது 1963 முதல் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது இவ்வித்தியாலயத்தில் 625 மாணவர்கள் பயிலுகின்றார்கள். ஆசிரியர்களின் எண்ணிக்கை 25. இவர்களுட் பெரும்பாலானோர் இவ் வித்தியாலயத்திலே பயின்றவர்களாவர்.

### கனேவல்பொல — முஸ்லிம் மகா வித்தியாலயம்

இது 1947 ஆம் ஆண்டில் ஓர் ஓலைக் கட்டிடத்தில் 40 மாணவர்களுடனும் இரு ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இங்கு 760 மாணவ, மாணவியர் கல்வி பயிலுகின்றனர். ஆசிரியர்களின்

எண்ணிக்கை 24 ஆகும். முதலாம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்கு பயின்ற பலர் தற்போது உயர் பதவிகளை வகித்து வருகிறார்கள்.

## நொச்சியாகம — அல் மதீனா முஸ்லிம் மகா வித்தியாலயம்

இப்பாடசாலை ஆரம்பத்தில் 1958 ஆம் ஆண்டில் சிங்களப் பாடசாலையின் ஓர் அம்சமாகவே இயங்கியது. 1959 ஆம் ஆண்டில் புதிய கட்டிடமொன்றில் தனித்தியங்க ஆரம்பித்தது. அப்போது ஐம்பது மாணவர்களே இருந்தார்கள். ஏழாம் வகுப்பு வரை வகுப்புக்கள் இருந்தன.

1976 ஆம் ஆண்டில் துரித மகாவலி திசைதிருப்புத் திட்டத்துடன் புதிய கட்டிட வசதியைப் பெற்று, விஞ்ஞானகூடம், ஆசிரிய விடுதி, குழாய்க்கிணறு முதலானவற்றையும் பெற்று இப்பாடசாலை முன்னேற்றமடைந்தது. மேலும் க. பொ. த. (சாதாரண) வகுப்புக்களும் இங்கு ஆரம்பிக்கப்பட்டன.

## கலாவெவ — முஸ்லிம் மகா வித்தியாலயம்

1946 ஆம் ஆண்டில் ஓலைக்கொட்டில் ஒன்றில் 31 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சி கண்டு தற்போது மத்திய கல்லூரியாக இயங்குகிறது.

தற்போது 1495 மாணவர்களையும், 49 ஆசிரியர்களையும், 30 வகுப்புக் களையும் கொண்டு இப்பாடசாலை இயங்குகிறது.

க. பொ. த. உ/த கலை, விஞ்ஞான வகுப்புக்களில் கல்வி கற்ற மாணவர்கள் இப்பாடசாலைக்குச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

மேற்கூறிய பாடசாலைகளினதும், இவைபோன்ற இன்னும் சில பாட சாலைகளினது வளர்ச்சியையும், அவற்றின் சாதனைகளையும் அவ தானிக்குமிடத்து, வருங்காலத்தில் இவையனைத்தும் தலை சிறந்த கல்விக்கூடங்களாக மிளிரக் கூடியவைகளெனக் கூறலாம். போதிய கட்டிட வசதியும், விஞ்ஞானக்கூடம், நூலகம், கைத்தொழிற் பயிற்சிக்கூடம் முதலான வசதிகளும் கிடைக்கப் பெறுமாயின், இப்பாடசாலைகள் இப்பிரதேச முஸ்லிம் மக்களின் சமூக, கலாசார, பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவை தவிர, மற்றும் பெருந்தொகையான சிறுசிறு பாடசாலைகளின் தற்போதைய நிலையைச் சுட்டும் முகமாக சில உதாரணங்களை இங்கெடுத்துக் கூறலாம்.

றத்மலை — பாடசாலை மாணவர் தொகை 200. ஆசிரியர்கள் 05. இப்பாடசாலை 1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இயூலகட — இப்பாடசாலை 1953 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் புதிய கட்டிடம் அமைக்கப்பட்டது. மாணவர் தொகை 180. ஆசிரியர்கள் 04.

கல்லஞ்சியாகம — பாடசாலை 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் தொகை 300. ஆசிரியர்கள் 10.

பத்தாவ — கபுகொல்லாவ பாடசாலை 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் தொகை 120. ஆசிரியர்கள் 03.

கம்பிரிகஸ்வெவ — பாடசாலை ஆரம்பம் 1942 ஆம் ஆண்டு. மாணவர் தொகை 400.

வளகவித்தவெவ — பாடசாலை ஆரம்பம் 1962 ஆம் ஆண்டு. மாணவர் தொகை 200. சில மாணவர்கள் பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களாகவும், பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்தவர்களாகவும் இருக்கிறனர்.

மிஹிந்தலை — இப்பாடசாலை 1983 ஆம் ஆண்டு கனிஷ்ட பாடசாலையாக இயங்க ஆரம்பித்தது. தற்போது 60 மாணவ மாணவிகளும் 4 ஆசிரியர்களுமுள்ளனர்.

இம்மாவட்ட கிராமப் பாடசாலைகளுட் பெரும்பாலானவை கிராமவாசிகளினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். காலக்கிரமத்தில் இப்பாடசாலைகளுட் பல கணிசமான வளர்ச்சி பெறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. சிறப்பாக இம்மாவட்டத்தில் மகாவலி திசைதிருப்புத், திட்டம், கிராம எழுச்சித் திட்டம் போன்ற கிராம அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் பாடசாலைகளும் பயனடைவதற்கான ஏதுக்கள் உள்ளன. ஏற்கனவே சில பயனடைந்துள்ளன.

இருந்தபோதிலும் இம்மாவட்டத்தில் முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கைக் குறைவையும், சிங்களப் பாடசாலைகளே பெரும்பான்மையாக உள்ளதையும் கவனிக்கும்போது, இன்று அநுசரிக்கப்படும் கொத்தணிப் பாடசாலைத் திட்டம் எவ்வகையிலும் முஸ்லிம் பாடசாலைகளுக்குப் பொருந்தாதென்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திக்குப் புறம்பான ஏற்பாடுகள் அவசியமாகும்.

இம்மாவட்டத்தில் முஸ்லிம் பெண்களின் கல்வி மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளதை நாம் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இந்நிலைக்கு எமது சமூக மரபுகள் காரணமாயுள்ளபோதிலும் அண்மைக் காலத்தில் நாட்டின் பல பாகங்களில் பெண்கல்வி கணிசமான வளர்ச்சி கண்டு, தற்போது பல்கலைக் கழக மட்டத்திலும் பலர் பயின்று முன்னேறி வருகிறார்கள். கிராமப் புறங்களில் வயதுவந்த பெண் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கும் பெற்றோர் விரும்புவதில்லை. அநுராதபுர மாவட்டம் போன்ற அபிவிருத்தி குறைவான பிரதேசங்களில் இந்நிலை காணப்படினும் காலப்போக்கில் மாற்றமேற்படவே செய்யும்.

இம்மாவட்டப் பாடசாலைகளுட் பெரும்பாலானவை ஆரம்ப, கனிஷ்ட பாடசாலைகளாகவேயுள்ளன. அரசாங்க கல்விப்பகுதியினரின் 1991 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபர அறிக்கையின்படி, இம்மாவட்டக் கல்விப் பிரிவில் மொத்தம் 62 பாடசாலைகளேயுள்ளன. இவற்றுள் முதலாம் தரப் பாடசாலைகள் ஆறு மட்டுமேயுள்ளன. ஏனைய பாடசாலைகள் அனைத்தும் மூன்றாம், நான்காம் தரப் பாடசாலைகளே. இந்நிலையில் உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவேயுள்ளன. இது தவிர படிப்பைப் பிள்ளைகள் இடைநிறுத்துவதற்கான பிற காரணிகளுமுள்ளன. அவற்றுள் குடும்பப் பொருளாதார நிலை சீராக இல்லாமலிருப்பது ஒரு முக்கிய காரணமாகும்.

இம்மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அவற்றின் ஆரம்பகாலத்தில் தமிழ் ஆசிரியர்களாலேயே பேணி வளர்க்கப்பட்டுள்ளமை இங்கு கவனிக்கத் தக்கதாகும். இவ்வாசிரியர்களின் அரிய சேவைக்கு இப்பிரதேச மக்கள் மிகவும் கடப்பாடுடையவராவர். மேலும் இம்மாவட்ட முஸ்லிம் பாடசாலைகள் சில தனித்தியங்குவதற்கு முன் சிங்களப் பாடசாலைகளின் ஓர் அங்கமாக இயங்கி வந்துள்ளன.

மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் இல்லாதவிடங்களில் முஸ்லிம் பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளில் பயின்றும் வந்துள்ளார்கள். தற்போதுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் அப்பாடசாலைகளிலேயே பயின்று தேறியவர்கள் ஆசிரியர்களாகக் கடமை புரிவது பாராட்டுக்குரியதாகும்.

இம்மாவட்டப் பாடசாலைகளிலிருந்து உயர் கல்விக்காகப் பல்கலைக் கழகங்களுக்கு வருங்காலத்தில் பலர் அனுமதி பெறுவார்கள் என்பதற்கான சான்றினை நாம் தற்போது காணக்கூடியதாகவுள்ளது. எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின் படிக்கு இப்பாடசாலைகளில் கட்டிட வசதியீனம், ஆசிரியர் பற்றாக்குறை, விஞ்ஞானகூடம், நூலகம் போன்ற அத்தியாவசியமான வசதிகளின்மை கல்வித் தரத்தினைப் பெரிதும் பாதிப்பதாயுள்ளது. இத்துறைகளிலான அபிவிருத்தியே எதிர்காலத்தில் இம்மாவட்டத்தின் கல்வி நிலையை உயர்த்த முடியும்.

தற்போது அமுலுக்கு வந்துள்ள மாகாண ஆட்சிமுறையில் கல்வித்துறை மாகாண நிர்வாகத்திற்குட்படுமாதலின் இவ்வகையில் கூடிய வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும். நிர்வாகிகளின் நேரடியான கவனத்திற்கு இம்மாவட்டப் பாடசாலைகள் உட்படுமெனவே அவற்றின் தேவைகளில் கூடுதலான கவனஞ் செலுத்தப்படுமென எதிர்பார்க்கலாம்.

எமது பாடசாலைகளின் அபிவிருத்தியில் பெற்றார்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். அத்துடன் ஆசிரியர்களும் பெற்றாருடன் இணைந்து செயற்படல் வேண்டும். இவ்வாறான கூட்டு முயற்சியினாலேயே எமது பாடசாலைகள் சிறப்பாக இயங்கி கல்வியின் நோக்கத்தை எய்த முடியும்.

குறிப்பு : இங்கு கையாளப்படும் பெரும்பாலான தகவல்கள் தேசிய மீலாத் விழாவின் அநுராதபுர மாவட்டக் குழுவினர், சுற்றறிக்கைப் படிவமொன்றின் மூலம் திரட்டிய தரவுகளிலிருந்து பெறப்பட்டவையாகும்.

# அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகள்

அநுராதபுரம் :

01. ஸாஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயம் — அநுராதபுரம்
02. விவேகாநந்த தமிழ் மகா வித்தியாலயம் — அநுராதபுரம்
03. குடாநெலுபோவ முஸ்லிம் மகா வித்தியாலயம் — ஹிடோகம
04. அளுத்கம முஸ்லிம் வித்தியாலயம் — கம்பிரிகஸ்வேவ
05. கம்பிரிகஸ்வேவ முஸ்லிம் வித்தியாலயம் — கம்பிரிகஸ்வேவ
06. இயுலகட முஸ்லிம் வித்தியாலயம் — கம்பிரிகஸ்வேவ
07. அஸரிகம முஸ்லிம் வித்தியாலயம் — கம்பிரிகஸ்வேவ
08. இஹலகொடியாவ முஸ்லிம் வித்தியாலயம் — பரஸன்கஸ்வேவ
09. கோவில் பண்டார முஸ்லிம் வித்தியாலயம் — பரஸன்கஸ்வேவ
10. இக்கிரிகொல்லாவ முஸ்லிம் வித்தியாலயம் — வஹமல்கொல்லாவ
11. தல்கஹவேவா முஸ்லிம் வித்தியாலயம் — றம்பவேவா
12. நொச்சியாகம முஸ்லிம் வித்தியாலயம் — நொச்சியாகம

கெக்கிராவ :

13. கெகிராவ முஸ்லிம் வித்தியாலயம் — கெக்கிராவ
14. பப்டிஸ்ட் மிசன் தமிழ் மகா வித்தியாலயம் — கெக்கிராவ
15. ஹொரவப்பொத்தான முஸ்லிம் வித்தியாலயம் — கெக்கிராவ
16. உடமிதிகம முஸ்லிம் வித்தியாலயம் — மடதுகம
17. மடதுகம முஸ்லிம் வித்தியாலயம் — மடதுகம
18. இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலயம் — மரதன்கடவெல
19. கொலன்குதிகம முஸ்லிம் வித்தியாலயம் — மரதன்கடவெல
20. கனேவல்பொல முஸ்லிம் வித்தியாலயம் — கனேவல்பொல
21. பண்டாரபொதன முஸ்லிம் வித்தியாலயம் — புபுகம
22. கடந்துகம ஜாயா முஸ்லிம் வித்தியாலயம் — புபுகம
23. அல் — அமீன் முஸ்லிம் வித்தியாலயம் — மரதன்கடவெல
24. உன்டுகடுகெலியாவ முஸ்லிம் வித்தியாலயம் — மடதுகம
25. பலலுவேவா முஸ்லிம் வித்தியாலயம் — பலகல
26. நெல்லியாகம முஸ்லிம் வித்தியாலயம் — பலகல
27. கலாவெவ முஸ்லிம் மகா வித்தியாலயம் — விஜிதபுர

28. கலென்சியகம முஸ்லிம் மகா வித்தியாலயம் — காகம
29. அலகபெரும முஸ்லிம் மகா வித்தியாலயம் — காகம
30. டெமடகம முஸ்லிம் வித்தியாலயம் — திரப்பான
31. நாச்சியாதுவ முஸ்லிம் வித்தியாலயம் — நாச்சியாதுவ
32. பமுனுகம முஸ்லிம் மகா வித்தியாலயம் — முறியகடவெல

கெபிடிகொல்லாவ :

33. அலவேவா முஸ்லிம் வித்தியாலயம் — கெபிடிகொல்லாவ
34 அதவீரவெவ முஸ்லிம் வித்தியாலயம் — கெபிடிகொல்லாவ
35. ஹொரவப்பொத்தான முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
36. அன்குமொச்சியாகம முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
37. கடவத் ரத்மல முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
38. முக்காரவேவா முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
39. திம்பிரி அத்தாவ முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
40. நிகவேவா முஸ்லிம் வித்தியாலயம் — ஹொரவப்பொத்தான
41. வீரச்சோலை முஸ்லிம் வித்தியாலயம் — கபுகொலாவ
42. பாத்தேவெவ முஸ்லிம் வித்தியாலயம் — கபுகொலாவ
43. ஆனைவிழுந்தாவ முஸ்லிம் வித்தியாலயம் — கபுகொலாவ
44. வலஹவித்தாவேவ முஸ்லிம் வித்தியாலயம் — கபுகொலாவ
45. மதவாச்சிய முஸ்லிம் வித்தியாலயம் — மதவாச்சிய
46. மகாசியம்பலகஸ்கடவெல முஸ்லிம் வித்தியாலயம் — நேரியகுளம்
47. உடும்புகல முஸ்லிம் வித்தியாலயம் — மதவாச்சிய
48. ஹல்மில்லவ முஸ்லிம் வித்தியாலயம் — மதவாச்சிய

கலன்பிந்துனுவெவ :

49. துனுமன்தலவ முஸ்லிம் வித்தியாலயம் — கலன்பிந்துனுவெவ
50. கோமரன்கடவெல முஸ்லிம் வித்தியாலயம் — கலன்பிந்துனுவெவ
51. நெலுகொல்லகட முஸ்லிம் வித்தியாலயம் — கஹடகஸ்திகிலிய
52. தஹனகவெவ முஸ்லிம் வித்தியாலயம் — கஹடகஸ்திகிலிய
53. ஹெடுவெவ முஸ்லிம் வித்தியாலயம் — மஹாபொதன
54. துருக்கரகம முஸ்லிம் வித்தியாலயம் — கஹடகஸ்திகிலிய
55. வெலிகொல்லாவ முஸ்லிம் வித்தியாலயம் — கலன்பிந்துனுவெவ
56. எதவெதுனுவெவ முஸ்லிம் வித்தியாலயம் — மகாபொதன
57. முக்கிரியாவ முஸ்லிம் வித்தியாலயம் — கஹடகஸ்திகிலிய
58. கஹடகஸ்திகிலிய முஸ்லிம் வித்தியாலயம் — கஹடகஸ்திகிலிய

59. மிகிந்தலை முஸ்லிம் வித்தியாலயம் — மிகிந்தலை
60. கனந்தரவ கடுகெலியாவ முஸ்லிம் வித்தியாலயம் — இஹலகம

தம்புத்தகம :

61. நேகம முஸ்லிம் வித்தியாலயம் — நேகம்பஹ
62. கட்டியாவ அஸாத் முஸ்லிம் வித்தியாலயம் — அந்தகல

உசாத்துணை ஆவணங்கள்


1. Ceylon–Administrative report of the Director of Education; 1895
2. Jayasuriya, Swarna, Regional in balances in education in Ceylon. Journal of the National Education Society of Ceylon. Vol. XX, 1971
3. Iqbal, A. Marumalarchi Thanthai, Nawalapitiya, Vinmathi Publications, 1971
4. Abdur-rahim, M. S., History and Culture of Jaffna Muslims, Jaffna, Namagal Press, 1979
5. Azeez, A. M. A., Ilankaiyil Islam, Jaffna, Kalaivani Book Depot, 1963

# 7

# பொருளாதார நிலை, தொழில் — I

— மறீனா இஸ்மாயில் —

ஆரம்ப காலந் தொட்டே, அநுராதபுர மாவட்டப் பிரதேசத்தின் பிரதான தொழிலாக, நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள நெற்செய்கை விவசாயமே விளங்கி வரலாயிற்று. கணிசமான மக்கள் தொகையினருக்கு நெற்செய்கையில் இப்பிரதேசம் தன்னிறைவு கொண்டதாக இருந்தது. எனினும், 14 ஆம் நூற்றாண்டளவில் அந்நியரின் ஆக்கிரமிப்பு காரணமாக , இப்பிரதேசத்துக் குளங்கள் கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்ட நிலையில், இப்பிரதேச மக்கள் தென்புலம் நோக்கி இடம்பெயரலாயினர். இதனால் இந்திய உப — கண்டத் திலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்பட வேண்டியேற்பட்டது.

இதனால் நடந்ததென்ன ? பல கிராமங்கள் வளம் குன்றிப் போகலாயின. சிறிய குளங்கள் எல்லாம் தூர்ந்துபோய், காட்டுப் பிரதேசம் விரிவடைந்து, குடியேற்றங்களெல்லாம் சிதறிப்போயின. இது வேதனை தருவதாகும். இந்தக் கூற்றினை உறுதிப்படுத்தும் விதமாக, 1855 ஆம் ஆண்டில் சாமுவேல் பேக்கர் (Samuel Baker) எனும் ஆசிரியர், " ஆச்சரியப்படத்தக்க விதமாக இப் பிரதேசத்தின் கிராமங்கள் பல அழிந்து போயிருந்தன. காட்டுவழியே சுமார் இருபது மைல் தூரத்தைக் கடந்துபோகும் வழியில், நாலைந்து கிராமங்களே மிஞ்சியிருப்பதை ஒரு நாள் கண்டு வருத்தப்பட்டேன். அனேக கிராமங்கள் இல்லாமலாகி, காட்டுப் பிரதேசம் பெருகியிருந்தது. "[1] எனக் கூறுகின்றார்.

அவர் மேலும் கூறுவதாவது, " அநுராதபுர மாவட்ட பழங்காலக் குடிமக்களின் மறைவிற்குப் பின், இலங்கையின் அரிசி உற்பத்திக்கான காரணிகள் செயற்பாடற்ற வகையில் கைவிடப்பட்டன. அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட மேற்படி விவசாயத் திறமைகள் அல்லது உற்பத்தி நுட்பங்களின் பக்கம் அரசாங்கத்தின் கவனம் திசை திருப்பப்படவேண்டும். "[2]

கண்டி இராசதானியின் கட்டுப்பாட்டுக்குள் ஒரு பகுதியாக விளங்கிய இன்றைய வடமத்திய மாகாணத்தை — தமது கட்டுப்பாட்டுக்குள்

ஆக்கிக்கொள்வதற்கு போர்த்துக்கேயரோ அல்லது ஒல்லாந்தரோ முயற்சித்திருக்கக்கூடும் என்று, கிடைக்கும் ஆவணங்கள் எதிலும் அவதானிக்க முடியவில்லை. ஆனால் 1815 இல் முழுத் தீவையும் தமது ஆதிக்கத்தின் கீழ் பிரித்தானியப் பேரரசு கொண்டு வந்த பின்னரே, இப்பிரதேசத்தின் குளங்கள் திருத்தப்படவும், பாதைகள் அமைக்கப்படவும், இப்பகுதிகளில் மக்கள் குடியேறவும் தொடங்கினர்.

மத்திய அடர்ந்த காட்டுப் பிரதேசத்தை ஊடறுத்து வடக்கிற்கும் — தெற்கிற்குமான நெடுஞ்சாலை ஒன்று முதன்முதல் போடப்பட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து கண்டிக்கும், அதிலிருந்து திருகோணமலைக்கு ஒரு கிளைப் பாதையும் நிர்மாணிக்கப்பட்டன. வேறொரு கிளைப் பாதை அநுராதபுரம், புத்தளம் போன்ற நகர்களை நோக்கி நிர்மாணிக்கப்பட்டது. நாளடைவில் கரையோரப் பகுதிகளில் சிறிய பாதைகள் போடப்பட்டன. இப்பாதைகளின் வழியாக குடியேற்றங்கள் படிப்படியாக அதிகரிக்கலாயிற்று.

வடமத்திய மாகாணத்திற்கான அரசாங்க அதிபராக 1911 ஆம் ஆண்டில் கடமையாற்றிய திரு. ஸி. எஸ். வவுகன் (C. S. Vaughan) என்பவர், தனது மாவட்டக் குறிப்புரையில், " புகையிரதப் பாதை நிர்மாண வேலைகளின் காரணமாக, பாதைகளின் பயன்பாட்டு நிலை அபிவிருத்தி அடைந்ததோடு, தாழ் பூமியிலிருந்து சிங்கள — தமிழ் குடியேற்றவாசிகள் தங்களை வடமத்திய மாகாணப் பிரதேசத்தில் ஸ்திரப்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டனர் " என்று பிரஸ்தாபித்துள்ளார்.

இன்றைய முஸ்லிம் கிராமங்களாக விளங்குகின்ற குடியேற்றங்கள் கூட, இக்கால கட்டத்திலே தங்களை வெகுவாக ஸ்திரப்படுத்திக் கொள்ளலாயின. அநுராதபுரத்தைச் சூழவுள்ள பிரதேசங்களான மன்னார் மாவட்டம், மத்திய மலையகம், குறிப்பாக மாத்தளை மாவட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து வந்து மக்கள் குடியேறலாயினர். திருத்தப்பட்ட குளங்களின் தோற்றம் —பயிர்ச் செய்கைக்கான வாய்ப்பான நிலங்கள் போன்ற இரு காரணங்களினாலேயே மக்கள் இப்பகுதிகளில் குடியேற விருப்பங்கொண்டனர். இக்காரணங்களை அடியொட்டியே இஹல கொடியாவ (Ihala Kottiyawa) கலாவெவ (Kalawewa) மடாதுகம (Madatugama) போன்ற கிராமங்கள் தோன்றலாயின என்பது சரித்திரம் சாற்றும் சங்கதிகள்.

## விவசாயம்

இக்கால கட்டத்தில் சிங்களக் கிராமங்களைப் போன்று, ஆரம்ப காலத்தில் வர்த்தகர்களாக வந்து ரஜரட்ட பகுதியில் குடியேறிய முஸ்லிம்கள், கிராமங்

களை அமைத்துக்கொண்டு விவசாயத்துறையில் கரிசனை காட்டியதற்கான ஆதாரத் தடயங்கள் எதுவும் இல்லை எனலாம். 16 ஆம் நூற்றாண்டின் பின்னர், கண்டி மன்னனின் ஆட்சிக்காலக் குறிப்புகளின்படி, கரையோரப் பாதையோரத்தில் முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தபோதிலும், வடமத்திய மாகாணத்திலுள்ள முஸ்லிம் கிராமங்களில் விவசாயப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதற்கான தெளிவான ஆதாரங்கள் பிரித்தானியர் காலத்திலேயே கிடைக்கக் கூடியதாக உள்ளன.

ஏனைய வரண்ட பிரதேச கிராமங்களைப் போன்று, இங்கும் நெற்பயிர்ச்செய்கை நீர்ப்பாசனத்தின் உதவியுடனே மேற்கொள்ளப்பட்டு, வருடத்திற்கு இருபோகவிளைச்சல் கிடைக்கலாயிற்று. வயல்கள் அனேகமாக குளங்களின் அருகிலும், கிராமங்கள் குளங்களை விட்டுச் சற்று விலகியுமே இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. கிராமங்களில் தோட்டப் பயிர்ச்செய்கை மூலம் பழவர்க்கங்களும் காய்கறி வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு, அவை பிரதானமாக, வீட்டுத் தேவைக்குப் போக, மிகுதி விற்பனைக்கு வந்தன. மாம்பழம், தோடம்பழம், பலாப்பழம் முதலிய பழவர்க்கங்களும், கிழங்கு வகைகள், கத்தரிக்காய், பூசனிக்காய், வத்தல் முதலிய காய்கறி வகைகளும் கிணறுகளின் நீர்ப்பாசனம் மூலமே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கிராமங்களுக்குப் புறம்பான நீர்வசதியற்ற நிலப்பகுதிகளில், சேனைப் பயிர்கள் பயிரிடப்பட்டன. பூர்வீக காலம் முதலே இப்பிரதேசத்தில் சேனைப் பயிர்கள் பயிரிடப்பட்டு வந்தன. காட்டுப் பிரதேசத்தில் ஒரு பகுதி எரிக்கப்பட்டு சுத்தஞ் செய்து, அங்கே எள்ளு, சாமை, குரக்கன், சோளம் முதலியன பயிரிடப்பட்டன. நிலங்கள் திருத்தப்பட்டு, மழை வருமுன்னமே மழை நீரைச் சேமிக்க வழிகண்டு, நீர்வளத்துடன் பயிரிடும் காலப்பிரிவில் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. மூன்று மாதங்களில் அறுவடையும், வருடத்தின் எல்லா மாதங்களிலும் பல்வேறு வகையான பயிர்களும் உற்பத்தி பண்ணப் பட்டு, குடிமக்களின் வீட்டுத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வந்தன என்பது கவனிக்கத்தக்கது.

### மீன்பிடித் தொழில்

விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்ததோடு, மேற்படி கிராமங்களில் மீன்பிடித் தொழிலையும் மக்கள் மேற்கொண்டிருந்தனர். வியாபாரத்தில் நாட்டம் கொண்ட முஸ்லிம்களும் இம் மீன்பிடித் தொழிலில் பங்கு கொள்ளலாயினர். புத்தளம், கற்பிட்டி போன்ற மேற்குக்கரை ஊர்களிலிருந்து திருகோணமலை போன்ற கிழக்குக்கரைப் பிரதேசங்களுக்கு மீன்பிடி

காலத்தில் மீனவர்கள் வடமத்திய மாகாணத்தின் ஊடாகவே பயணஞ்செய்வர். அவ்வாறான பயணங்களின்போது குறுக்கிடும் முஸ்லிம் குடியிருப்புக்களில் தங்கி ஓய்வு பெற்றே மீனவர்கள் செல்வார்கள்.

அவ்வாறு செல்வோருடன் இக்கிராமவாசிகளும் இணைந்து சென்று, அங்கு தொழிலில் ஈடுபட்டுப் பின்னர் தமது கிராமத்துக்குத் திரும்புவர். ஆயினும் ஏரி — குளங்கள் போன்ற நீர்நிலைகளில் மீன்பிடித்து வரும் முறையையே அவர்கள் பெரும்பாலும் கையாண்டு வந்தனர். இங்குள்ள மீனவர்கள் பிடித்த மீன்களைப் பக்கத்திலுள்ள நகரங்களில் உடனுக்குடன் விற்று விடுவார்கள். ஆனால் — வரட்சியான காலங்களில், நீர்நிலைகள் வற்றிவிடுவதற்கு முன், பிடித்த மீன் வகைகளைக் காயப்போட்டும், பதப் படுத்தியும் பிற்காலத்திய தேவைக்குக் களஞ்சியப்படுத்திச் சேமித்து வைத்திடுவார்கள்.

## கால்நடை வளர்ப்பு

அநுராதபுர மாவட்ட முஸ்லிம் கிராமங்களில் கால்நடை வளர்ப்பும் இருந்தே வந்தது. மாடு வகைகளை உழவுக்காகவும் வண்டிச் சவாரிக்காகவும் ; வெள்ளாடுகளை இறைச்சி — பால் முதலிய தேவைகளுக்காகவும் வளர்த்து வரலாயினர். கால்நடைகளின் இறைச்சிகள் பக்கத்து நகரங்களில் விற்கப் பட்டதுடன், சில வேளைகளில் கொழும்புச் சந்தைகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## வர்த்தகம்

இலங்கை முஸ்லிம்கள் எப்போதும் வர்த்தகத்துறையுடனே பிணைந்த வர்கள். ஆரம்ப காலத்து முஸ்லிம்கள் உள்நாட்டு வர்த்தகத்துறையிலும், ஏற்றுமதி — இறக்குமதி வர்த்தகத்துறையிலும் பிரசித்தம் பெற்றிருந்தார்கள் என்பது யாவருமறிந்த உண்மையாகும். இக்காலப் பிரிவில் வர்த்தகம் என்பது லாபகரமான ஒரு தொழிலாகத் திகழ்ந்தது.

அது மட்டுமன்றி, துறைமுகத்தோடு வர்த்தகத் தொடர்புடைய வர்த்தகர்கள் உள்ளூர் நகரங்களில் தங்களின் வியாபார முகவர்களை ஏற்படுத்திக்கொண்டு, அவ்வூர்களிலும் வர்த்தக ஆதிக்கம் செய்து கொண்டிருந்தனர். 4 ஆம் நூற்றாண்டளவில் அநுராதபுரம் தொடர்பாகக்

கருத்துத் தெரிவித்த பாஃ —ஹியன் (Fa-Hien) என்பார், " இந்நகரம் நீதிபதிகளினதும், கனவான்களினதும், வர்த்தகர்களினதும் வாசஸ்தலமாக விளங்கியது " என்கிறார்.

மேலும் அக்கால கட்டங்களில் காடுகளிலிருந்து, தேன், பழ வர்க்கங்கள், கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படும் புல் பூண்டு வகைகள், விறகுகள் முதலியவற்றை வண்டி நிறைய ஏற்றிவருவது கிராமவாசிகளின் வழக்கமாக இருந்து வந்தது என்பதை எழுத்தாவணங்கள் ஊர்ஜிதம் செய்கின்றன. அவ்வாறு வண்டிகள் மூலம் காட்டிலிருந்து கொண்டுவரும் பொருட்களை நகர்ப்புறங்களில் விற்றுவிடுவர்.[3]

ஆனால் துறைமுகங்களிலிருந்து ஆடம்பரப் பொருட்களான அழகான புடவைத் தினுசுகளையும், நறுமண வகையறாக்களையும், மேல்நாட்டு வைன் போன்ற மதுபான குடிவகைகளையும், தங்கம் — வெள்ளி முதலியவற்றையும் நகரங்களுக்குக் கொண்டு வந்து விற்போர் வர்த்தகர்களாகவேயிருந்தனர். இதற்குப் பகரமாகத் தானிய வகைகளையும், வாசனைத் திரவியங்களையும் ஏற்றுமதி நோக்கங்களுக்காகத் துறைமுகங்களுக்கு அதே வர்த்தகர்கள் எடுத்துச் செல்வர். அங்காடி வியாபாரஞ் செய்வோரும் உப்பு — புடைவை போன்ற பொருட்களைத் துறைமுகங்களிலிருந்து உள்ளூர்க் கிராமங்களுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்து வரலாயினர்.

இவ்வாறான வர்த்தக முறைகளைத் தொடர்ந்து காலாகாலமாகச் செய்து வரக் கூடிய வர்த்தகர்கள், பெரும்பாலும் முஸ்லிம்களாகவே இருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டளவில் ஏழுகோரளைகள் திசாவையின் — தலைநகராகத் திகழ்ந்த புத்தளமே, கண்டிய மன்னர்களின் பிரதான துறைமுகமாக விளங்கியது. மட்டக்களப்பு, கொட்டியார் உட்பட, புத்தள துறைமுகங்களில் எல்லாம் முஸ்லிம் வர்த்தகர்களே வியாபார தரகர்களாகப் பணிபுரிய, கண்டிய மன்னர்கள் லாபகரமான வியாபாரங்களைத் தென்னிந் தியாவுடன் செய்து வரலாயினர்.

அவர்கள் பிரதானமாகப் பாக்குகளை ஏற்றுமதி செய்து, அதற்குப் பகரமாய்த் துணிமணிகளை இறக்குமதி செய்தனர். முஸ்லிம் வர்த்தக முகவர்களும், வியாபாரிகளும் மாடு கள் மீது (தவளம் முறையில்) பொருட்களை ஏற்றி வந்து, பிரதான சந்தையுள்ள இடங்களில் விற்பனை செய்து வரலாயினர். இத்தவள முறையைப் பற்றி டெனன்ற் (Tennent) குறிப்பிடும் பொழுது, " ஒட்டகங்களுக்குப் பதிலாக, காளை மாடுகளை உபயோகிக்கும் ' கரவான் ' " என்பார்.[4]

கண்டியிலிருந்து கரையோரப் பகுதிகளுக்குச் செல்ல, மாடுகள் மீது பொருட்களை ஏற்றிச்செல்லும் ' தவளம் ' முறை வண்டிப் பாதைகள் பல இருந்தன. இவ்வழிகளில் எத்தனையோ தரிப்பிடங்கள் இருந்தன. அவை யாவும் முஸ்லிம் குடியேற்றங்களேயாகும்.

தன்னிறைவுள்ள உள்நாட்டுக் கிராமங்களில் மிகவும் கிராக்கியாயிருந்த உப்பு - கருவாடு போன்ற பொருட்களைத் ' தவளம் ' முறையில் வர்த்தகர்கள் கரையோரப் பிரதேசங்களிலிருந்து கொண்டு சென்று, வியாபாரஞ் செய்ததோடு, இந்தியாவிலிருந்து துணிமணிகளைத் தருவித்து, இக்கிராமங்களில் விற்பனை செய்து வரலாயினர். தானிய வகைகள், பாக்கு, மிளகு என்பன துறைமுகங்களுக்கு இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகைய வர்த்தக முறைகள் தொடர்ந்து பிரித்தானிய காலத்திலும் நடைமுறையில் இருந்து வரலாயிற்று.

## யானை பிடித்தல்

கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் வடமத்திய மாகாணத்திலும், மன்னார் மாவட்டத்திலும் வாழ்ந்த முஸ்லிம்கள் திறமைமிக்க யானை பிடிப்பவர்களாய் விளங்கினர். " பணிக்கர் " (Panikar) என அழைக்கப்படும் இவர்கள், நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து யானை பிடித்தலை நடைமுறை வாழ்வில் கைக்கொண்டே வந்தனர். வடமத்திய மாகாணப் பகுதியிலும், வன்னிப் பிரதேசத்திலும், வடபிராந்திய சமவெளியிலும் உள்ள முஸ்லிம் கிராமங்களில் இத்தகைய யானை பிடிப்போர் வாழ்ந்து வரலாயினர்.

" பயமறியாத - மிக தைரியசாலிகளான அத்தகைய மனிதர்கள், சில வேளைகளில் இருவர் மட்டுமே எவ்வித உதவியும் ஏவலாளர் துணையுமின்றி, மிகப்பெரிய யானைகளை உறுதியோடு முயற்சித்துப் பிடித்து விடுவர் " - என்று பணிக்கர்கள் பற்றி டெனன்ற் குறிப்பிடுகிறார். யானை பிடிக்க அத்தகையோர் எவ்வித ஆயுதங்களையும் பயன்படுத்துவதில்லை. மான் அல்லது மாட்டின் தோலினால் முறுக்கப்பட்ட கயிறைக்கொண்டு, யானையின் பின்புறக் கால்களில் ஒன்றைக் கட்டுவதே அவர்களின் முக்கிய நோக்கமாகும். இக்கயிறொன்றே அவர்கள் இதற்குப் பயன்படுத்தும் ஒரே ஆயுதமாகும். இக்கயிற்றினால் சுருக்குப் போட்டு யானையின் பின்னங்கால்களில் ஒன்றில் மாட்டி விடுவர்.

யானை நடந்து செல்லும் பொழுது, அதனைப் பின் தொடர்ந்து சென்று அல்லது மறைந்திருந்து யானை போவதை அவதானிப்பர். அது களைத்துப் போய் ஓரிடத்தில் கால்களை ஆட்டியபடி ஓய்வுபெறும் நேரத்தில், சுருக்குப்

போட்ட கயிற்றை யானையின் பின்னங்கால்களில் ஒன்றைக் குறிவைத்து வீசி, மாட்டச்செய்வர். பின்னர் கயிற்றை இழுக்க, முடிச்சு சுருக்காகி, கட்டு இறுகி, கால் நன்றாக அகப்பட்டுக்கொள்ளும். "[5]

அதன்பின் அதற்குத் தேவையான உணவுவகைகளை எல்லாம் தாராள மாகவும் - ஏராளமாகவும் கொடுப்பர். யானையின் கோபம் - பசி -வேகம் அனைத்தும் அடங்கும் வரை அதனைப் போசித்து, அதனைப் படிப்படியாக வழிக்குக் கொண்டு வருவர். சுதந்திரமாக எங்கும் போக முடியாத நிலையில் நாளடைவில் யானை வழிக்கு வந்துவிடும்.

யானை பிடிக்க இன்னொரு முறையையும் அவர்கள் கையாள்வதுமுண்டு. கயிற்றை முடிச்சுப் போட்டு, யானை செல்லும் வழியெங்கும் பரப்பி வைப்பர். மரவேர்களையும் - இலை - குழைகளையும் மேலே போட்டு, கயிறோ முடிச்சோ வெளியே தெரியாதபடி மறைத்திருப்பர். யானை அதன்மீது நடந்து செல்லும்வரை யானை பிடிப்பவர்கள் மறைவிடமிருந்து கவனித்துக் காத்திருப்பர். யானை கயிறுமீது நடந்து செல்லும்போது, கயிற்றைத் தூரத்திலிருந்தபடி ஆட்டி - அசைத்து, காலொன்றில் மாட்டச் செய்வர். மாட்டியதும் கயிற்றை இழுக்க,' முடிச்சு இறுகிவிடும். இப்படிப் பிடிபடும் யானையையும் முன்கூறிய வழியிலேயே வழிப்படுத்துவர்.

யானை பிடிக்கக் கைக்கொள்ளும் மேற்படி இருவழி முறைகளுக்குமே அதிக திறைமையும் - தைரியமும் தேவைப்பட்டபோதும், அவை இரண்டுமே விஷப்பரீட்சையே. இந்த விஷப்பரீட்சைக்கு மத்தியில் இவ்விரு வழிகளிலும் அன்றைய முஸ்லிம்கள் யானை பிடித்து வழிக்கும் கொணர்ந்து, கரையோரப் பகுதிகளுக்கோ, அன்றிக் கிராமங்களுக்கோ யானையை அழைத்துச் செல்வது வழக்கமாகும்.

கண்டிய மன்னர்களின் அரச வைபவங்களுக்கு யானைகள் மிகத் தேவைப்பட்டன. சில வேளைகளில் பலமான பொருட்களை இழுப்பது போன்ற பணிகளுக்கும் யானைகள் பயன்படுத்தப்படலாயின. அக்காலப் பிரிவில் மன்னார் வழியாக, யானைகள் இந்தியாவுக்கு அனுப்பப் பட்டதுமுண்டு. வெளிநாடுகளுக்கு யானைகளை அனுப்பும் பிரதான துறைமுகமாக மன்னாரே விளங்கிற்று. அராபியர்கள் குதிரைகளுக்குப் பதிலாக யானைகளைப் பண்ட மாற்று மூலம் வாங்கிச் செல்வதற்கு இந்தியாவிலிருந்து இந்த மன்னார்த் துறைக்கே வருவர். வாங்கிச் சென்ற யானைகளை இராஜாக்களுக்கு விற்றுவிடுவர்.

16 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம் வன்னியனார் ஒருவர் வருடாந்தம் ஏழு யானைகள் வீதம் விநியோகிப்பதாக போர்த்துக்கேயருடன் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளார். ஒல்லாந்தர் காலத்தில் முஸ்லிம்கள் மன்னார் வழியாக இந்தியாவுக்கு யானை ஏற்றுமதி செய்துவரும் தொழில் கட்டுப்படுத்தப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டுக்கு முன்புவரை அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் பிரதான தொழில்களாக வர்த்தகம் - விவசாயம் - மீன்பிடித் தொழில் - யானை பிடித்தல் என்பன இருந்து வந்தன எனலாம். யானை பிடித்தல் தற்போது இல்லாதொழிந்து விட்டது.

ஆதாரக் குறிப்புக்கள்


1. Baker, Samuel – Eight Years in Ceylon, 1855
2. Ibid.
3. Ariyapala, M. B., Society in Medieval Ceylon
4. Tennent, Ceylon Vol. I
5. Tennent, Ceylon Vol. II

# 8

# பொருளாதார நிலை, தொழில் II

— எம். எம். எம். மஹ்ரூப் —

அநுராதபுர மாவட்ட முஸ்லிம்களின் பொருளாதார நிலைமை, தொழில் வாய்ப்பு, தொழில் முறைகள், பிரித்தானிய காலத்தைப் பொறுத்த மட்டில் ஒட்டு மொத்தமாக கீழ்க்காணும் வகையில் பிரிக்க முடிகின்றது.

1. முந்திய பிரித்தானியர் காலம் (1796 — 1899)
2. பிந்திய பிரித்தானியர் காலம் (1900 — 1948)
3. சுதந்திரத்திற்குப் பிறகும் தற்காலமும் (1948 — 1992)

முஸ்லிம்களின் பொருளாதார நிலை, தொழில் வாரி கிரியைகளில் தொக்கி நிற்பதால் பல தொழில்களின் தன்மைகளையும் அவற்றின் பலாபலன்களையும் முதலில் கவனிப்பது சுலபமாகிறது.

## கமம்

கமத்தொழில் இலங்கையின் மூலவளமாக இருந்தது ; இருப்பது கண்கூடு. பிரித்தானியர் இலங்கைக்கு வந்த காலத்தில் (1796) அநுராதபுர மாவட்டம் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்தது. (இங்கு அநுராதபுர மாவட்டம், தற்சமயம் அப்பெயர் கொண்டு அழைக்கப்படும் பிரதேசத்தைக் குறிப்பிடுவதாகும்.) பெரும் வாவிகள் சீர்குலைந்து இருந்தமையாலும், உயர்தர நெல் விதைகள் கிடைக்காமையாலும் கமச்செய்கை பின்தங்கியிருந்தது. இருவகைப் பயிர் முறைமைகளை, முஸ்லிம்கள் மத்தியில் இங்கு இனங்கண்டுகொள்ள முடிகின்றது. சீர்குலைந்த வாவிகளின் கரைப் பகுதிகளில் சில முஸ்லிம்கள் விவசாயம் செய்தனர். சீதோஷ்ண கால நிலை காரணங்களால் இவ்விவசாயம் வளர்வதும், குறைவதுமாக இருந்தது. நெற்பயிரே இங்கு நிலை கொண்டது எனலாம்.

ஆனால், வேறு சில முஸ்லிம்கள் அடர்ந்த காடுகளில் வசித்து வேறு வகையான கமம் செய்தார்கள். இக்காடுகளை, புனர் — வனம் (Secondary Growth) என்கிறோம். பாழடைந்த அநுராதபுர நகரத்தின்

உடைசல்களில் துளிர்த்த காடுகள் இவை. இங்கு காடுகளில் சிற்சில பகுதிகளைத் தீயிட்டு அழித்து, அச்சாம்பலில் கமம் செய்வது வழக்கமாகும். நீர் வரட்சியின் காரணமாக, அதிக நீர் தேவைப்படாத நெல் வகைகளையும் குரக்கன், சாமை, போன்றவற்றையும் வெண்டை, கெக்கரி போன்ற மரக்கறிகளையும் மட்டுமே பயிரிட முடிந்தன.

கிணறுகள் உள்ள பகுதிகளில், நல்ல பயிர்களை விளைவித்து நல்ல பயன்களைப் பெற முடிந்தது. இந்த விதமான காடுகளில் வீடுகளைக் கட்டி, விவசாயம் செய்த முஸ்லிம்களை (முஸ்லிம் பழங்குடி மக்கள்) (Purate Villagers) எனக் கூறுவது வழக்கமாய் உள்ளது.

இந்தக் கிருஷிகம், அவ்விவசாயிகளுக்கே போதுமானதாக இருந்தது. ஏதோ கிடைத்த கொஞ்சம் பகுதியை பண்டமாற்று செய்து கத்தி, ஏர், கூர் போன்ற விவசாயத் தேவைகளை வாங்க முடிந்தது. இவ்வகை விவசாயம் நிச்சயம் அல்லாதது. கூடிய உஷ்ணம், காட்டு விலங்குகள், மலேரியா சுரம் என்பன முஸ்லிம் விவசாயிகளைத் தொடர்ந்து பயமுறுத்தின.

வசதியான விவசாயிகள், வசதியற்றவர்கள், நில குத்தகைக்காரர்கள், காணியற்றவர்கள் என்ற வர்க்கப் பிரச்சினை அப்பொழுது எழவில்லை.

19 ஆம் நூற்றாண்டு வரை, பிரித்தானியர் பல பொருளாதார வரப் பிரசாதங்களைப் புகுத்தினர். அவற்றுள் ஒன்று அநுராதபுர நகரை புகை வண்டிப் பாதையால் (இரும்புப் பாதையால்) இணைத்ததாகும். பிறிதொன்று குளங்களின் புனர் நிர்மாணம் எனலாம்.

பிரித்தானியரின் இந்த சீர்திருத்தங்களின் காரணமாக, அநுராதபுர மாவட்டத்தின் வெளிப் பிரதேசங்களில் நெற் பயிரிடுதல் சாத்தியமாகியது. நீர்ப் பாசனத்தின் உதவியால் இரு போகம் பெறப்பட்டன. 1931 ல் இருந்து 1948 காலவரைக்கும் பற்பல வாவிகள் சீர்ப்படுத்தப்பட்டு விவசாயம் முன்னேறியது.

1948 க்குப் பின்பாக, பல பாரிய விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பல காணிகள் நெற்பயிர் செய்கைக்கு உட்படுத்தப் பட்டன. பல ஆராய்ச்சி நிலையங்களின் காரணமாக, பச்சைப் பெருமாள் போன்ற புதிய நெல் இனங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களின் தொகை பெருகியது.

சென்ற சில ஆண்டுகளாக, செயல் முறைப்படுத்தப்பட்ட துரித மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பயனாக, விவசாயத்தில் அமோக முன்னேற்றம் காணப்பட்டது. அநுராதபுரி மாவட்டத்தில் முஸ்லிம்களின் விவசாய ஒதுக்கீடுகள் எச் — வலயத்தில் இருக்கின்றன.

### விவசாயத்தை ஒட்டிய இதர தொழிற்பாடுகள்

விவசாயம் இதர உப தொழில்களை தன்னகத்தே கொண்டுள்ளது. முறம் செய்தல், ஏர் பலகைகளை கட்டுவித்தல், வண்டிகளின் சக்கரங்களை உருவாக்குதல், செப்பனிடுதல் என்பன அவற்றுள் சிலவாகும்.[2] பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் முதல் பிரிவில் அவற்றை அநுராதபுரி மாவட்டத்தின் முஸ்லிம் மக்களின் ஒரு பகுதியினர்தாம் செய்தனர். பின்னர், ஏர் முனைகள் போன்ற விவசாயத் துணை பொருட்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டமையால் முஸ்லிம்களின் ஒரு சில தொழிற்பாடுகள் தடைப்பட்டன எனலாம்.

### கால்நடை வளர்த்தல்

கால்நடை வளர்த்தல், ஆவினம் மேய்த்தல் ஆகியவை அநுராதபுரி முஸ்லிம்களின் சிறப்பான தொழிற்பாடுகள் ஆகும். 1796 ல் இருந்து தற்காலம் வரைக்கும் கால்நடை வளர்ப்புக்கு அநுராதபுரி மாவட்டம் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது. உண்மையில் கால்நடை வளர்ப்பு எனக் கூறுவதைவிட, கால்நடை திரிதல் எனக் கூறுவதே பொருத்தமானதாகும். பரந்த புல் வெளிகள், பல் வகை புல்பூண்டுகள், மனித சஞ்சாரமற்ற சூழல் என்பன கால்நடை பெருக்கத்தை சுலபமாக்குகின்றன. சூடு போடப்பட்ட கால்நடைகள் சுயமாக வளர்வது சகஜமாகும். மாமிசத்திற்காக அவை தயார் செய்யப் படுவதால் தினசரி கண்காணிப்பு அவ்வளவு தேவையில்லை. இன்றுவரை கொழும்பு, கண்டி, காலி ஆகிய இறைச்சிச் சந்தைகளுக்கு அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் தொழிற்பாடுகள் இன்றியமையாதவை.

### கசாப்பு, தோல் சேகரிப்புத் தொழில்கள்

கசாப்புத் தொழில் முற்றிலும் முஸ்லிம்களின் கைகளில்தான் உள்ளது. (ஆனால், 1796 க்குப் பிறகுதான் இத்தொழில் சகஜமானது). அதே போன்று தான் கால்நடை, தோல் சேகரிப்பு தொழில் உள்ளது. கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் அமைந்துள்ள தோல் பதனிடும் ஆலைகளுக்கு

கால்நடைத் தோல்கள், காத்திரமான அளவில் அநுராதபுரி மாவட்டத்திலிருந்து வருகின்றன. எதேச்சையாக ஆடு, மாடுகள் சூடு போடப்படுவதால், பல தோல்கள் சேதமடைந்து, பாவனைக்கு அருகதையற்றவையாகின்றன.[3]

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியின் அநுராதபுரி மாவட்டத்தில் கால்நடை கொம்புகளிலிருந்து சீப்புகள் செய்யப்பட்டன. பின்னர், இங்கிலாந்திலிருந்து சீப்புகள் இலங்கைக்கு தருவிக்கப்பட்டமையால் அத் தொழில் வளர்ச்சி பெறவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தத்தில் (1939— 1945) இறக்குமதிகள் நின்றுவிட்டபடியால், மீண்டும் அத்தொழில் அநுராதபுரி மாவட்டத்தில் துளிர்ந்தது எனக் கூறப்படுகின்றது. ஆனால், 1946 ம் வருடம் ஆரம்பமான இறக்குமதிகள் அத்தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

அதே போன்று ஏனைய விலங்குகளின் உடற் பொருட்களும் அநுராதபுரி மாவட்டத்து முஸ்லிம்களால் அனுப்பப்பட்டன.[4] உதாரணமாக யானையின் கடைவாய்ப் பற்கள். அவை காஞ்சனை காம்பு, வசம்பு உடன் சேர்த்து மருந்தாக பாவனையில் இருந்தன.

### யானை பிடித்தல்

யானை பிடித்தல், யானை பழக்குதல் ஆகியவை அநுராதபுரி மாவட்ட முஸ்லிம் மக்களுக்கு கைவந்த கலையாகும். பிரித்தானியர் காலத்தில் அது மும்முரமாக வளர்ந்தது. காட்டை அழித்து, காட்டை வளர்த்த பிரித்தானியர், யானை வேட்டையை தமது கடமையாகக் கருதினார்கள். இலங்கையில் வாழ்ந்த, வெள்ளைக்கார உயர் உத்தியோகத்தர்கள், தோட்டத் துரைமார்கள் காட்டு யானைகளைச் சுட்டுத் தள்ளினார்கள். அரசாங்க அதிபராக ஒரு சமயம் கடமையாற்றிய ரோஜர்ஸ் என்பார், ஆயிரம் காட்டுயானைகளைச் சுட்டுக் கொன்றார்.

காட்டு யானைகளைச் சுட்டுக் கொல்வதைவிட, காட்டு யானைகளைப் பிடித்து பழக்குவது ஜீவகாருண்யமான நடவடிக்கையாகும். 1796 இல் இருந்து, 1948 வரைக்கும் காட்டு யானைகளைப் பிடித்தல் தவறாது நிகழ்ந்தது. அதற்கு அரசாங்கத்தினர் விதி, விதானங்களை விதித்தினர். பரம்பரை பரம்பரையாக யானைகளை பிடிப்பதற்கு முஸ்லிம்களுள் ஒரு சாரார் இருந்தார்கள்.

இந்நூற்றாண்டின் முதல் பகுதியில் இலங்கை புதை பொருள் திணைக் களத்தில் உதவி ஆணையாளராக கடமை புரிந்த ஜோன் ஸ்டில் (John Still) என்பார் இவ்வாறு எழுதினார்.

“ காட்டு யானைகளைப் பிடிப்பதற்கென முஸ்லிம்களுள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இது பரம்பரைத் தொழிலாக அமைகின்றது. அது நல்லதுதான். ஏனென்றால் காட்டு யானைகளைப் பிடிப்பதற்கு அசாத்திய நெஞ்சுறுதியும், மனோ வலிமையும், திடகாத்திரமான உடலும், எந்நேரத்திலும் சமயோசிதமும், தப்பாத நெஞ்சழுத்தமும் வேண்டியுள்ளது. ”

யானை பிடிப்பது சாமானியமானது அல்ல. காட்டு யானைகள் பிரமாண்டமான விலங்குகள். சாதாரண வேளைகளில் அவற்றுக்கு பலம் கூட இருக்கின்றது. தன்னை துன்புறுத்துகிறார்கள் என அறிந்தவுடன், அதற்கு அடக்க முடியாத கோபமும் ஆத்திரமும் வருகின்றது. அதன் கையில் அப்பொழுது மனிதர்கள் அகப்பட்டால் காட்டு யானை அவர்களை சின்னா பின்னமாக்கி விடும். அதே சமயத்தில், இக்காரியத்தில் ஈடுபடுகின்ற முஸ்லிம்களும் லேசுபட்டவர்கள் அல்லர்.

காட்டு யானை பிடித்தல் இவ்வாறு நடைபெறுகிறது. அடர்த்தியான காட்டில் ஒரு பகுதியில், யானைகள் களிறுகள், பிடிகள், யானைக் குட்டிகள் இருப்பதாக அறிந்த அம்மக்கள் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைகளை நடத்துகிறார்கள். அந்த குறிப்பிட்ட பகுதியைச் சுற்றி வளைத்து பலபேர் தீவட்டிகளை பிடித்துக் கொண்டு, பெரும் அண்டாக்களை கம்பிகளால் அடித்து பலத்த சத்தத்தை எழுப்புகிறார்கள். இதனூடே, மனிதர்கள் கூக்குரலும் சேர்ந்த ஒலிக்கின்றன.

இவை யானைகளை திக்குமுக்காட வைக்கின்றன. காட்டு யானைகளின் சமூக அமைப்பு சிதறுகிறது. யானை பிடிகள் தமது குட்டிகளை கைவிட்டு அங்கும் இங்கும் ஓடுகின்றன. குட்டிகள் அல்லோல கல்லோலப்படுகின்றன.

இதற்கிடையில் பெரிய மரங்களில் ஒட்டியது போல் யானை பிடிப்பவர்கள் நிற்கிறார்கள். காற்று வீசும் திசைக்கு எதிர் திசையாக அவர்கள் நிற்க வேண்டும். இல்லாவிட்டால் யானைகள் மோப்பம் பிடித்துவிடும். அம்மனிதர்களைத் துவம்சம் செய்து விடும்.

யானை பிடிப்பவர்கள் கையில் கயிறு இருக்கின்றது. அக்கயிறுகள் முறுக்கிய மான் தோல்கள். இரும்புக் கம்பிகளைவிடப் பலமானவை. அக்கயிறுகளின் ஒரு முனை பெரிய மரம் ஒன்றில் கட்டப்பட்டிருக்கிறது.

அம்மனிதர்கள் ஆடாமல் அசையாமல் நிற்பார்கள். அருகே குட்டி யானை ஒன்று வந்தவுடன் இலாவகமாகக் கயிறை மற்றக் காலில் மாட்டி விடுவார்கள்.

உடனே அம்மனிதர்கள் — யானை பிடிப்பவர்கள் மாயமாக மறைந்து விடுவார்கள்.

கயிறு மாட்டப்பட்ட குட்டி யானை கதறுகிறது. ஓடப் பார்க்கிறது. அதன் தாய் யானையும் வந்து உதவி செய்கிறது. ஏனைய யானைகளும் கயிறைப் பிரிக்க எத்தனிக்கின்றன. முடியவில்லை. அவை அங்குள்ள மரங்களை உடைத்து எறிகின்றன. ஆனால் யானைகள் சிக்கிய மரங்களை அவை ஒன்றும் செய்ய முடியவில்லை.

இவ்வாறு அந்த இரவில் ஐந்திலிருந்து பத்து யானைகள் வரை பிடிக்கப்படுகின்றன. பின்னர் அவற்றை அடக்கி பழக்கும் வேலை துவங்கு கிறது.[5] இவ்வாறு ஜோன்ஸ்டில் எழுதினார். அவ்வாறு பிடிக்கப்பட்ட யானைகளை அரசாங்கத்தினர் ஏலத்தில் விற்றனர். கணிசமான தொகை, யானை பிடிப்பவர்களுக்குக் கிடைக்கிறது. யானை பிடிப்பவர்களின் நெஞ் சுறுதியைப் பற்றி இன்னொரு ஆங்கிலேயர் லெனார்டு வுல்ப் (Leonard Woolf) எழுதினார். வுல்ப் 1905 ஆம் ஆண்டு வாக்கில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் எழுதினார் : " எனக்கு குதிரைச் சவாரி என்றால் கொள்ளை ஆசை. ஆனால் குதிரை பராமரிப்பதற்கு ஆள் தேவைப்பட்டது. இலங்கையில் தகுந்த ஆட்கள் கிடைக்கவில்லை. ஆனால் ஒரு நாள், ஒரு முஸ்லிம் குதிரைக்காரர் வந்தார். ஆள் சாதாரணமாகத் தோன்றினாலும் அவரிடம் நிறைய ஆளுமை இருந்தது. அவரை நான் வேலைக்கமர்த்தினேன். அவர் குதிரையை திறம்பட நிர்வகித்தார். உமக்கு இத்தொழில் அதிக காலம் பழக்கமுண்டா ? என்று அவரைக் கேட்டேன். நான் யானை பிடிப்பவன் என அவர் சாதாரணமாக பதில் தந்தார். யானை பிடிப்பவருக்கு குதிரை பழக்குவது எம்மாத்திரம் ".[6]

அவர் ஓர் அநுராதபுரி மாவட்ட முஸ்லிமாக இருந்திருப்பார். யானை பிடிப்பவர்கள் பல உச்சாடனங்களையும், திக்றுகளையும் பாவித்து யானைகள் பிடித்தார்கள் எனக் கூறப்படுகிறது.[7] யானை பிடித்தல் பல உப — தொழில்களை உருவாக்கியது. அவற்றுள் ஒன்று, மான் தோல்களை வார்வாராக வெட்டிக் கயிறாகத் திரிப்பதாகும்.

யானைகளை வேட்டையாடுதலும் பிடித்தலும் இன்று தடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

## வேட்டையாடுதல்

1796 ல் இருந்து 1880 வரை அநுராதபுரி மாவட்டத்தின் உட்புற கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள், மான்கள் போன்ற விலங்குகளையும் புறா, காடை, கவுதாரி போன்ற பறவைகளையும் பிடித்து அறுத்து உணவுக்காக உபயோகித்துக் கொண்டார்கள். மிருகங்களைப் பொறுத்த வரையில், அடைப் புப் பொறிகள், குறிப்பிட்ட பொருளை விலங்கு தொட்டவுடன் பொறியின் கதவு மூடிக்கொள்ளும் பொறிகளை உபயோகித்தார்கள்.[8] பின்னர் அவை அறுக்கப்பட்டு மாமிசத்தை வெயிலில் உலர்த்தி வெளிப் பிரதேசங்களுக்கு விற்கப்பட்டன. அம்மாமிசம் சூட்டு இறைச்சியென அழைக்கப்பட்டது.

பறவைகளை மரப்பிசின்கள் (Bird Lime) வைத்துப் பிடித்தார்கள்.[9] நாள டைவில் இந்த தொழில் தளர்ந்து மறைந்து விட்டது.

## தவளம், ஈரோட்டு வணிகம்

தவளம், அதாவது பொருட்களைக் காளை மாடுகளின் மீது பொதிகளாக ஏற்றி வெளிப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லல், அநுராதபுரி முஸ்லிம் களின் முக்கிய தொழிலாக அமைந்திருந்தது. முந்திய கண்டி இராசதானிக்கும், இலங்கையின் வட மேற்கு கரையோரத்தையும் இணைக்கும் வணிக பாலமாக அநுராதபுரி மாவட்டம் சென்ற நூற்றாண்டிலிருந்து அதன் முடிவு வரைக்கும் அமைந்தது எனலாம்.

அநுராதபுரி, அந்த தவள வீதியின் முக்கிய மைல் கல்லாகும். தவளத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களை கண்டி மக்கள் “ஹுலங் பெத்த” (காற்று வேக மாந்தர்) என அழைத்தனர்.[10]

அவற்றுள் மூன்று பாவனைப் பொருட்கள் இன்றியமையாதனவாகும். அவையாவன ; உப்பு, கருவாடு, சாரம், கைத்தறித் துணிகள். உப்பு புத்தளம் வழியாகவும், மன்னார் வழியாகவும் வந்தது. கருவாடு, மன்னாரின் செல்வப் பொருளாகும். காரல், நெத்தலி போன்ற சிறு மீன்களே கருவாட்டு வியாபாரத்தின் தூணாகும். அதிக நாள் கெடாமல் அவை இருந்தமை, அந்த வியாபாரத்திற்கு அனுகூலமாக இருந்தது.

சாரங்கள் மேளப்பாளையத்திலிருந்து தூத்துக்குடி வழியாக மன்னாரில் வந்து சேர்ந்தன. இவ்வியாபாரம் ஒல்லாந்தர் காலத்திலிருந்து ஸ்திரம் அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சாரங்களுடன் சாரி, துணிகள் (முக்கிய

மாக சுங்காணி புடைவைகள்) ஆகியவற்றையும் இங்கு சேர்த்துக்கொள்ள வேண்டும். அவற்றிற்கு, பிரதியுபகாரமாக மலைநாட்டு பொருட்களான திராம்புக்கொட்டை, பாக்கு, தென்னக்கயிறு, புனுகு போன்ற பொருட்கள் அநுராதபுரி வழியாக தூத்துக்குடியைப் போய்ச் சேர்ந்தன.

அநுராதபுரி மாவட்டம் ஊடாக தென்னிந்தியா போய்ச் சேர்ந்த பொருட்களும் அவற்றுக்கு ஈடாக அங்கிருந்து அனுப்பப்பட்ட பொருட்களும் ஈரோட்டு வியாபாரத்தின் முக்கிய அம்சங்களாகும்.

தவள வணிகத்தில் ஈடுபட்டிருந்த அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் பொருட்களை சேகரிப்பதற்கும் ஓய்வு எடுத்துக்கொள்வதற்கும் ஆங்காங்கே குடில்கள் அமைத்தார்கள். நாளடைவில், அவை சிறு கிராமங்களாகப் பரிணமித்தன.

தவள வணிகத்தின் பிறிதொரு அம்சம் பல நுகர் பொருட்களை மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்த வேறு இன மக்களிடமிருந்து கொள்வனவு செய்வதாகும். இந்த வணிகத்தில் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் மும்முரமாக ஈடுபட்டனர். தேன், மான் தோல், கரடித் தோல், மாட்டுத் தோல், கொம்பு, குளம்பு, குரக்கன், பச்சிலைகள் என்பன அப்பொருட்களில் சில. முஸ்லிம்கள் அவற்றிற்குப் பதிலாக, உப்பு, கருவாடு, துணிமணிகள், மைசூர் பருப்பு, காசுசட்டி (வெற்றிலை சேரும் பொருள்) ஆகியவற்றை தந்தார்கள்.[11] மண்ணெண்ணையும் முக்கியமானது.

தவளம் என்றென்றும் நிலைத்து நிற்கும் வணிகமாகும். பொருளாதார அபிவிருத்தி, போக்குவரத்துச் சாதனங்களின் முன்னேற்றம் என்ற நவீன உலக வரப்பிரசாதங்கள் தவளத்தைப் பாதித்தாலும் அவை முற்றிலும் தடுத்து விடுவதில்லை.

### சில்லறைக் கடை வியாபாரம்

அதிக முதலீடு தேவைப்படாத, ஆனால் சிரமமான — ஓய்வு இல்லாத வியாபாரம் சில்லறைக் கடை வைப்பதாகும். அநுராதபுரி முஸ்லிம்கள் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டனர். (பின்னர் அவர்களுடன் இதர மாவட்டங்களி லிருந்து குடி பெயர்ந்த முஸ்லிம்கள் சேர்ந்து கொண்டனர்.)

சில்லறை வணிகத்தின் ஒரு வகை, நடமாடும் சில்லறைக் கடை வணிகமாகும். அது பொட்டணி வியாபாரம் என்றும் ; சோப்பு, சீப்பு, கண்ணாடி

வியாபாரம் என்றும் பெயர் பெறுகின்றது. 1930 க்குப் பின்னர், அநுராதபுரி மாவட்டச் சில்லறை வியாபாரம் வெகுவாக முன்னேறியது. உதாரணமாக 1939 வாக்கில் கொழும்பில் கிடைத்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அத்தனை மிட்டாய் வகைகளும் கிடைத்தன.

### மீன் பிடித்தல்

இங்கு மீன் பிடித்தல் என்பது வாவிகளிலும், குளங்களிலும் மீன் பிடித்தலைக் குறிப்பிடுகின்றது. இது வெகுவாக முஸ்லிம்கள் ஈடுபட்டிருந்த தொழிலாகும். செத்தல் மீன், உருவான் தலைத்தட்டி என்று அழைக்கப்பட்ட மீன் வகை என்பன அதிகமாகக் கிடைத்தன. குளத்து மீன் சேறு மணம் வீசுவதாக பலர் கருதுவதால் அவற்றிற்கு அமோகமான கிராக்கி இருப்பதாகக் கூற முடியாது.[12]

### முத்துக் குளித்தல்

இந்த நூற்றாண்டின் முதல் பகுதியில் மன்னார் வளைகுடாவில் நடைபெற்ற முத்துக் குளிப்பில் கணிசமான அநுராதபுரி வாசிகள் கலந்து கொண்டார்கள் எனக் கூறப்படுகிறது.[13]

### போக்குவரத்து, இதர வாணிபம்

1948 க்குப் பின்னர் போக்குவரத்தை அடிப்படையாகக் கொண்ட வியாபாரம், பொறி வாகன சேவைகள் வெகுவாக முன்னேறின. மாவட்டத்தில் சாகுபடியாகும் பயிர்களை கொழும்பு போன்ற நகரங்களுக்கு அனுப்ப அவை வெகுவாகப் பயன்பட்டன. கூடவே, மொத்த வியாபாரம் நுகர் பொருட்கடைகள் (Oilman Stores) முன்னேறின.

### உத்தியோகம்

1931 ல் இருந்து துளிர்த்த கல்வி பல கல்விமான்களைத் தந்தது. பலர் வழக்கறிஞர் போன்ற தொழிற்பாடுகளில் பங்கு கொண்டனர். 1948 ல் இருந்து ஆசிரியர்த் தொழிலும் அபிவிருத்தி கண்டது. இன்று, துரிதமாக முன்னேறும் அனுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் தொழில் முறைமை ஆசிரியர்த் தொழிலாகும்.

அரசாங்க உத்தியோகத்தராகவும் பல அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் நியமனம் பெற்றிருக்கின்றார்கள்.

கடந்த 30 வருடங்களில் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் பொருளாதார மட்டத்தில் முன்னேறியிருக்கிறார்கள். பல தொழில்முறைகள் , சவர்க்காரம், நூல் போன்றவை முன்னேறுவதற்கு வழி வகுக்கப்பட்டிருக்கின்றன.

அதே வேளையில், அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்கள் தமது வியாபாரங்களை கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் நிறுவி தமது பொருளாதார நோக்கினை பன்முறைப்படுத்தியிருக்கிறார்கள். எனவே அவர்களது பொருளாதார அத்திவாரம் வெவ்வேறு இடங்களில் நிலை கொண்டுள்ளது.

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டம் அநுராதபுரி மாவட்ட முஸ்லிம்களின் மனித வளத்தைப் பக்குவமாக சமூகத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் உபயோகப்படுத்தி அநுராதபுரி மக்களை கௌரவப்படுத்துகிறது எனலாம்.

## யூனானி வைத்தியம்

யூனானி மருத்துவக் கலையை தொழிலாகக் கருதுவது சரியல்ல. ஏனென்றால், அது மக்கள் தொண்டு ஆகும். அத்துடன் " ஹக்கீம் " என அழைக்கப்பட்ட யூனானி மருத்துவர்களும் வெறும் வைத்தியர்கள் அல்லர். அவர்கள் வரலாற்று ஆசிரியர்கள், மார்க்க அறிஞர்களும் கூட.

யூனானி மருத்துவம் அநுராதபுரி மாவட்டத்தில் தொன்று தொட்டு இருந்திருப்பதாக நினைக்க போதிய சான்றுகள் உண்டு. மேலும், முஸ்லிம்கள் வாழ்ந்த இடமெல்லாம் ஹக்கீம்கள் இருந்திருக்கின்றார்கள். முஸ்லிம்கள் கப்பல்களிலும் ஒரு ஹக்கீமை கொண்டு செல்வது வழக்கமாக இருந்தது. சில வேளைகளில் கப்பல் ஹக்கீமும் கப்பல் செலுத்துபவரும் ஒருவரே.

அநுராதபுரிக்கு வந்த பரம்பரை யூனானி மருத்துவம் மன்னார் பிரதேசம் வழியாக வந்தது எனலாம். நாளடைவில் அது மூன்று பிரிவுகளாக பிரிந்தது. ஒன்று பரம்பரை யூனானி வைத்தியம்; மற்றொன்று இலங்கைப் பகுதிகளில் யூனானி மருந்துகளைப் தயார் பண்ண முடியாததால் சித்த, ஆயுர்வேத மூலிகைகளைப் பாவித்த யூனானி வைத்தியம்; மூன்றாவது வகை, கொழும்பில் தாபிதமான யூனானி வைத்திய பிரிவில் படித்து, பட்டம்பெற்ற மாணவர்கள்.[14]

## ஆதாரக் குறிப்புக்கள்

1. P. G. Cooray, *An introduction to the Geology of Ceylon* (Colombo 1965) passim, R. L. Brohier, *'Discovering Ceylon'* (Colombo 1973) passim

2. Bertollachi .... *Ceylon* (London 1834). M. M. M. Mahroof's article in *Al-Tawhid* (Tehran,) vol. 8 (1992)

3. Annual Reports of the Ceylon Leather Corporation

4. M. M. M. Mahroof's article on the useful arts of the Muslims of Sri Lanka in *Pirai Kolundu* (Commemorative Souvenir of the International Islamic Tamil Literature Conference, Colombo 1980); *Harry Williams, Ceylon* (London 1950)

5. John Still, *Jungle Tide* (London 1940); M. M. M. Mahroof, *The PerformingArts of the Muslims of Sri Lanka;A Descriptive Survey...* in PANAP (Performing Arts Newsletter of Asia and Pacific) vol. lv no. 1 (December 1988)

6. Leonard Woolf, *Growing* (An Autobiography) (London, 1960)

7. LORIS (Journal of the Ceylon Wildlife Society, Colombo) various issues

8. ibid. Also, *Survival* Handbook (Royal Air Force, London 1942)

9. R. S. Spittel, *Wild Ceylon* (Colombo)

10. Ralph Pieris, *Sinhalese Social Organisation; The Kandyan Period* (Colombo 1956)

11. M. M. M. Mahroof's articles on the history of Muslims of Sri Lanka in Thinakaran Vara Manjari entitled *Pirqi Valarnda Kathai*, from 28th August 1972 onwards

12. Chettal fish = Tilapia

13. M. M. M. Mahroof, *Pearls in Sri Lankan History* in South Asian Studies (Cambridge, England) vol. VIII (1992); M. M. M. Mahroof, *The Muslim Lapidary; SomeAspects of the Gem Folkways of Sri Lanka* in Journal of Gemmology (London) vol. 21 no. 7 (July 1989)

14. M. M. M. Mahroof, *The Unani System of Medicine in Sri Lanka* in Journal, Muslim World League, Makah, Saudi Arabia vol. II no. 7 (April 1984)

கட்டுரைகள் வழங்கியோர் :

1. அல்ஹாஜ் பேராசிரியர் ம. முஹம்மது உவைஸ், பி. ஏ. (ஹொனஸ்) ; எம். ஏ., பிஎச்.டி.

சிங்களம், தமிழ், ஆங்கிலம், அறபு ஆகிய மொழிகளில் பாண்டித்தியம் பெற்றுள்ள இவர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியராகப் பணி புரிந்துள்ளார். கலைமாமணி, இலக்கியச் செம்மல் ஆகிய பட்டங்களைப் பெற்றவர். இரு நூல்களுக்குத் தமிழ் நாட்டரசின் பரிசுகளையும் பெற்றுள்ளார். இஸ்லாமியத் தமிழிலக்கியத்துறையில் பெரும் ஆய்வுகளை நடத்தியவர்.

2. கன்சுல் உலூம் அல்ஹாஜ் எஸ். எம். கமால்தீன், பி. ஏ. (இலங்கை) பி. எட். (ரொறன்ரோ) நூலகவியல் டிப்ளோமா (இலங்கை)

இலங்கைத் தேசிய நூலக சேவைகள் சபையின் உதவிப் பணிப்பாளராகவும், கொழும்பு பொது நூலக பதில் பிரதம நூலகராகவும், இலங்கை நூலக சேவைகள் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியவர். தற்போது இஸ்லாமிய நிலையத்தின் கௌரவ பணிப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

3. கன்சுல் உலூம் அல்ஹாஜ் எம். எம். எம். மஹரூப், பி. ஏ. (ஹொனஸ்)

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். நூலாசிரியரும், கட்டுரையாளருமான இவரின், பல ஆங்கில ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேசப் புகழ்பெற்ற சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் பிரசுரிக்கப்பட்ட " களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு " எனும் நூலின் இணையாசிரியர்.

4. ஜனாபா மரீனா இஸ்மாயில், பி. ஏ. (ஹொனஸ்) ; எம். பில்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னைநாள் புவியியல் விரிவுரையாளரான இவர், 1984 இல் வெளியிடப்பட்ட "இலங்கை முஸ்லிம்களின் வரலாறு" எனும் நூலின் இணையாசிரியர் என்பதோடு,

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் 'களுத்துறை மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு' என்ற நூலின் இணையாசிரியருமாவார்.

**5. ஜனாப் எம். எஸ். எம். அனஸ், பி. ஏ. (ஹொனஸ்) ; எம். ஏ.**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மெய்யியல்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றுகிறார். முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சினால் வெளியிடப்பட்ட 'செய்கு அலாவுதீனும் அவரது பாடல்களும்' என்ற நூலின் தொகுப்பாளர். புத்தளம் பிரதேச வரலாற்று, இலக்கிய ஆய்வுகளில் மிகவும் ஈடுபாடு கொண்டவர்.

Printed at the Government Press – Sri Lanka